VEDIKKAI

# வேடிக்கை

11

டிசம்பர் 2007

ரூ 50.00

www.vedikkai.com

பல்சுவை மாத இதழ்




## நத்தார் சிறப்பிதழ்

## விடைபெற்றார் மாவன்!

வாசகர்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்!


வேடிக்கை
சஞ்சிகையின் முன்னைய இதழ்களை
எமது இணையத்தளத்தில் மின்னிதழ்
வடிவில் பெற்றுக்கொள்ளலாம்
VEDIKKAI
வேடிக்கை
பல்சுவை மாத இதழ்
www.vedikkai.com

# வேடிக்கை

பல்சுவை மாத இதழ்

கொண்டாட்டம் - 03 டிசம்பர் 2007 கூத்து - 02

198, 1st Floor, Galle Road, Dehiwela, Colombo. T.P.: 0115649884

*web:* **www.vedikkai.com** *e-mail:* **editor@vedikkai.com**


## வணக்கம் வாசகர்களே...

நன்றி - நன்றி - நன்றி

நீண்ட இடைவெளியின் பின் உங்களை எமது 10வது இதழ் மூலம் சந்தித்த போதும் முன்பிருந்த அதே ஆர்வத்துடனும் பாசத்துடனும் நீங்கள் காட்டிய ஆதரவு எம்மை மெய்சிலிர்க்க வைத்தது. தொடர்ந்து வேடிக்கை தன் வரவை உறுதிப்படுத்த அதுவே உறுதுணையாகவும் இருக்கிறது.

இம்முறைகூட எமது சந்தைப்படுத்தலை விரைவாகவும் விரிவாகவும் செய்ய முடியாது போனதால் பல பழைய வாசகர்களை நாம் சென்றடைய வில்லை என தெரிகிறது. எனினும் இந்த இதழ் அந்தக் குறையையும் நீக்கி நாடளாவியரீதியில் உரிய நேரத்தில் அனைவரையும் அடைவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் நாம் எடுத்திருக்கிறோம்.

நத்தார் சிறப்பிதழாக வெளிவரும் இந்த டிசெம்பர் இதழ் முன்னைய இதழ்களில் நாம் விட்ட பிழைகளை இனங்கண்டு அவற்றைக் களைந்து புதிய மெருகோடு புறப்பட்டிருக்கிறது உங்களைத்தேடி.


வாசகர்களாக இருக்கும் நீங்கள் ஒரு படைப்பாளியாகவும் மாறி எழுதுங் கள் உங்கள் கற்பனையை, அனுபவத்தை, ஆற்றல்களை! எதுவானாலும் இடந்தரக் காத்திருக்கிறது வேடிக்கை...


இளைய சமுதாயத்தின் படைப்பாற்றல் எழுத்துத்துறையில் இன்று மிக குறைவாகவே உள்ளது. காரணம் பல்வேறுபட்ட பொழுதுபோக்குகளும் வேகமான வாழ்க்கை முறையும். இதன் மத்தியில் இளையவர்களின் திறனை படம்போட்டு வெளிக்கொணர வேண்டுமென்ற அவா நம்மிடையே அதிக மாகவே உள்ளது. இனி தேவை உங்கள் சிறு முயற்சிதான்.

சரி, வாசித்தது போதும் ... எடுங்கள் எழுதுகோலை ... அடுத்த இதழில் உங்கள் படைப்புக்களும் வேடிக்கையை அலங்கரிக்க வாழ்த்துக்கள் அன்பு நெஞ்சங்களே.

-ஆசிரியர்.

## யாழ் – கொழும்பு விமான சேவை





# வரதர்

வரதர் என அழைக்கப்படும் தி. ச. வரதராசன் (தியாகர் சண்முகம் வரதராசன்) (ஜூலை 1, 1924 - டிசம்பர் 21, 2006), சிறுகதை, புதுக் கவிதை, குறுநாவல், இதழியல், பதிப்புத்துறை என இலக்கியத்தின் பலதுறைகளிலும் முத்திரை பதித்தவர். ஈழத்து இலக்கியத்தில் மறுமலர்ச்சி எழுத்தாளர் என அழைக்கப்பட்டவர்.

ஈழத்தின் இலக்கியப்பரப்பில் கணிசமான அளவு பங்களிப்பை அளித்துச் சென்றவர் வரதர்.

தன் எழுத்தை மட்டுமே நேசித்து மற்றையவர்களின் படைப்பைப் புறங்கையால் ஒதுக்கும் இலக்கியக்காரர் மத்தியில், தன் எழுத்துப்பணியுடன் மற்றவர்களையும் எழுதத் தூண்டி, வரதர் பிரசுரம் மூலம் அச்சுவாகனமேற்றிய வரதர் ஓர் ஆலமரம். அவரின் விழுதுகளாக நிலைபெற்றவை அவரின் வெளியீடுகள்.

*'ஓர் எழுத்தாளனுடைய மனதிலே ஒரு நல்ல கருத்து குடிபுக, அவன் அந்தக் கருத்தைச் சுவையான முறையிலே வெளிப்படுத்துகின்றான். வெளிப்படுத்தும் உருவம் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று யாரும் கட்டுப்பாடு செய்ய முடியாது. நல்ல ஆக்கமானால் அந்த ஆக்க இலக்கியம் விலை போகும். மக்களிடையே பேசப்படும். அதைப்பிறகு ஆய்வு செய்யும் இலக்கணக்காரர்கள் அந்த உருவத்துக்கு ஒரு பெயர் வைக்கட்டும்.'* - வரதர

1924 இல் பொன்னாலையில் சண்முகம் - சின்னத்தங்கம் தம்பதியின் நான்கு குழந்தைகளில் மூன்றாவதாகப் பிறந்தவர் வரதர். இவரது தந்தை ஒரு வர்த்தகர். தனது ஆரம்பக் கல்வியை பொன்னாலை அமெரிக்கன் மிசன் தமிழ்ப் பாடசாலையில் பெற்றார். சிரேட்ட தராதரப்பத்திர வகுப்பை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றார்.

இவரது முதற் சிறுகதையான 'கல்யாணியின் காதல்' ஈழகேசரியில் வெளியானது. ஜூன் 13, 1943 இல் ஈழத்தின் முதல் எழுத்தாளர் சங்கமான 'தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' தொடங்கப்படக் காரணமாயிருந்தோரில் இவர் ஒருவர். இதே ஆண்டில் (1943) ஈழகேசரியில் வரதர் எழுதிய 'ஓர் இரவினிலே' எனும் வசன கவிதையே ஈழத்தின் முதற் புதுக்கவிதை எனப்படுகிறது. வரதரின் முதற் சிறுகதைத் தொகுதியான 'கயமை மயக்கம்' 1960இல் வெளியானது.

மறுமலர்ச்சி சஞ்சிகையின் (1946 - 1948) ஆசிரியர் குழுவில் ஒருவர். ஆனந்தன் (1952), தேன் மொழி (1955), வெள்ளி (சஞ்சிகை), புதினம் (வார இதழ்), அறிவுக் களஞ்சியம் ஆகியன இவர் நடத்திய இதழ்கள்.

1946 பங்குனியில் மறுமலர்ச்சி முதல் இதழ் அச்சிடப்பட்டது. வரதர், கா.மதியாபரணம், நாவற்குழியூர் நடராசன், ச.பஞ்சாட்சரசர்மா, க.ஆ.சரவணமுத்து ஆகிய ஐவருமே முதல் போட்டு மறுமலர்ச்சியைத் தொடங்கினர். 'மறுமலர்ச்சி' யாருக்குச் சொந்தம் என்பது பிரச்சினையாகி நீதிமன்றம்வரை சென்று மீண்டே மறுமலர்ச்சி வெளியானது. மறுமலர்ச்சி வெளியீட்டாளராக நடராசன் இருந்தார். ஆசிரியர்களாக வரதரும் அ.செ.முருகானந்தனும் இருந்தனர். 18 ஆவது இதழிலிருந்து அ.செ.முருகானந்தனுக்குப் பதிலாக பஞ்சாட்சரசர்மா பணியாற்றினார். 1946 பங்குனி முதல் 1948 ஐப்பசி வரை 'மறுமலர்ச்சி' 24 இதழ்கள் வெளியாகின.

ஈழத்துச் சிறுகதையின் தனித்துவத்திற்கும் 50களில் ஏற்பட்ட ஈழத்து இலக்கிய எழுச்சிக்கும் அடித்தளமிட்டது மறுமலர்ச்சிதான் என்றால் அது மிகையாகாது. 1952 இல் வரதர் 'ஆனந்தன்' எனும் சஞ்சிகையை ஆரம்பித்தார். இதுவும் ஓர் இலக்கிய இதழே. ஆரம்பத்தில் யாழ்ப்பாணனும் பின்னர் புதுமை லோலனும் ஆனந்தனின் இணையாசிரியராக இருந்தனர். 1955 இல் வரதர் மஹாகவியை இணையாசிரியராகக் கொண்ட 'தேன்மொழி'யை வெளியிட்டார். ஈழத்தில் கவிதைகளுக்கென வெளிவந்த முதற் சஞ்சிகை தேன்மொழி. தேன் மொழியின் ஆறு இதழ்களே வெளியாகின.



இவை தவிர 'வெள்ளி' எனும் சஞ்சிகையும் 'புதினம்' எனும் வார இதழும்கூட வரதரால் வெளியிடப்பட்டன. பொருளாதாரக் காரணங்களால் இவை நின்று போயின. வரதரின் பிரசுர முயற்சிகளும் முக்கியமானவை. பண்டிதமணி கணபதிப்பிள்ளை, கைலாசபதி, மஹாகவி, முருகையன், பொன். முத்துக்குமாரன், செங்கை ஆழியான், காரை சுந்தரம்பிள்ளை, சோமகாந்தன், சாந்தன் முதலான பலரது நூல்கள் 'வரதர் வெளியீடு'ஆக வெளிவந்தன.

'வரதரின் பல குறிப்பு' அவரது இன்னொரு முயற்சி. தமிழ் மக்களுக்குத் தேவையான பலவித விடயங்களைத் தொகுத்து ஆண்டுக்கு ஒன்றாக (1971 வரை) நான்கு பதிப்புக்கள் வெளியாகின.

வரதரின் இதழியற் பணியில் இன்னொரு மைல்கல் 'அறிவுக் களஞ்சியம்'. இலாப நோக்கின்றி குறைந்த விலையில் மாணவர்க்கான அறிவுத் தகவல்களைத் தாங்கி அறிவுக் களஞ்சியம் வெளியானது. செங்கை ஆழியான் இணையாசிரியராக இருந்தார். 1995 இடம்பெயர்வு வரை யாழ்ப்பாணத்தில் 3000 பிரதிகள் வரை விற்பனையாகி அமோக வரவேற்புப் பெற்றது அறிவுக்களஞ்சியம்.

வரதர் ஈழத்துச் சிறுகதையாசிரியர்களில் முக்கியமானவர். ஈழத்தின் முதலாவதும் முக்கியமானதுமான மறுமலர்ச்சிச் சங்கத்திற்கு கால்கோள் இட்டவர். இதழியலில் சிறந்து விளங்கியவர். முதற் கவிதை இதழ் வெளியிட்டவர். இவை தவிர ஈழத்தின் முக்கிய பதிப்பாளர். வரதரின் சேவைகளைப் பாராட்டி இலங்கைக் கலைக் கழகம் அவருக்கு 'சாகித்திய இரத்தினம்' எனும் பட்டத்தை அளித்திருக்கிறது.

வரதர் தொழிலால் ஓர் அச்சக முகாமையாளர். 'வரதர் வெளியீடு' என்னும் வெளியீட்டு முயற்சியின் மூலம் பெருமளவு நூல்களை வெளியிட்டுள்ளார். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 'இலக்கிய வழி'யே வரதர் வெளியீடாக வெளிவந்த முதல் நூலாகும்.

வரதரின் நூல்கள்: கயமை மயக்கம் (சிறுகதைகள்), நாவலர், வாழ்க நீ சங்கிலி மன்ன, மலரும் நினைவுகள், பாரதக்கதை, யாழ்ப்பாணத்தார் கண்ணீர், சிறுகதை பட்டறிவுக் குறிப்புகள்.

**1960இல் வெளியான வரதரின் 'கயமை மயக்கம்' எனும் சிறுகதைத் தொகுதியிலிருந்து 'வாத்தியார் அழுதார்' எனும் சிறுகதை இங்கே பிரசுரமாகிறது. இந்தச் சிறுகதைத் தொகுதிக்கு கலாநிதி.மு.வரதராசன் அவர்கள் சிறப்புரை வழங்கியிருந்தார்.**



# வாத்தியார் அழுதார்

பள்ளிக்கூடம் விடுகிற நேரம். நாலாம் வகுப்புக்குக் கடைசிப்பாடம் வரைதல். முருகேசு உபாத்தியாயர் கரும்பலகையில் ஒரு பெரிய பூசினிக்காயின் படம் வரைந்திருந்தார். அதைப்பார்த்து மாணவர்கள் கொப்பிகளில் வரைந்து கொண்டிருந்தார்கள்.

சுந்தரம் அந்த வகுப்பிலேயே முதலாம் பிள்ளை. அவனுடைய 'ஆட்டுப்புழுக்கைப்' பென்சிலாலே ஒருமாதிரி பூசினிக்காய்க்கு உருவம் போட்டுவிட்டான். அதன் ஒரு பக்கம், மறுபக்கத்திலும் பார்க்கக் கொஞ்சம் 'வண்டி' வைத்துவிட்டாற் போலிருந்தது. அழித்துக் கீறலாமென்றால் அவனிடம் றப்பர் இல்லை. பக்கத்திலிருந்த 'தாமோரி'யிடம் இரவல் கேட்டான். தாமோரி, தன்னுடைய பெரிய 'ஆர்ட்டிஸ்ற் றோய்ங்' கொப்பியிலே புத்தம்புதிய வீனஸ் பென்சிலால், பூசினிக்காயென்று நினைத்துக்கொண்டு பனங்காய் மாதிரி ஏதோ ஒரு உருவம் போட்டுக் கொண்டிருந்தான்.

சுந்தரம் வடிவாகக் கீறியிருப்பதைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு எரிச்சலாக இருந்தது. ஒரு பக்கம் கொஞ்சம் வண்டியாக இருப்பதையும் சுந்தரம் அழித்துத்

திருத்துவதை அவன் பொறுப்பானா? 'போடா! என்னுடைய றப்பர் தேய்ஞ்சுபோம் நான் தரமாட்டேன்' என்றான்.

சுந்தரம் விரலிலே சாடையாக எச்சியைத் தொட்டு பிழையான கோட்டை அழிக்க முயன்றான். இதுகூடப் பொறுக்கவில்லை தாமோரிக்கு. டக்கென்று எழுந்து, 'வாத்தியார்!' என்று ஒரு பெரிய சத்தம் போட்டான்.

மத்தியான இலவச போசனத்தை அரசாங்கத்தார் நிறுத்தப் போவதைப் பற்றிப் பத்திரிகையிலே வாசித்துக் கொண்டிருந்த உபாத்தியாயர், தாமோரி போட்ட சத்தத்தில் நிமிர்ந்து 'என்னது?' என்றார்.

"வாத்தியார், இங்கே சுந்தரம்.... எச்சிலைத் தொட்டுப் படத்தை அழிக்கிறான்!"

முருகேசு உபாத்தியாயர் அந்த ஊர் மனுசர்தான். அவருக்குப் பணக்கார வீட்டுப் பிள்ளையான தாமோரியையும் தெரியும். தந்தையை இழந்தவுடன் ஏழைப் பிள்ளையாகிவிட்ட சுந்தரத்தையும் தெரியும். அதோடு இருவரின் குணத்தையும் நன்றாக அறிவார்.

"இங்கே வா சுந்தரம்!" என்றார்.

படபடக்கும் நெஞ்சோடும், அதைப் பிரதிபலிக்கும் முகத்தோடும், இயற்கையாகவே மெலிந்த உடம்போடும் சுந்தரம் வந்தான்.



"நீ எச்சில் தொட்டு அழித்தாயா?"

சுந்தரம் பதில் சொல்லு முன்பே தாமோரி எழும்பி, "நான் பார்த்தேன் வாத்தியார்!" என்றான்.

"நீ இரடா அங்கே! உன்னை யாரடா கூப்பிட்டது?" என்று விழித்துப்பார்த்த உபாத்தியாயரின் கண்ணில் பொறி பறந்தது! அதைப் பார்த்ததும் சுந்தரத்தின் உடம்பு பதறத்தொடங்கிவிட்டது.

ஆனால் திரும்பிச் சுந்தரத்தைப் பார்த்த உபாத்தியாயரின் முகத்தில் கருணை தவழ்ந்தது. "இங்கே வா, சுந்தரம்" என்று பக்கத்தில் கூப்பிட்டு முதுகில் லேசாகத் தட்டினார். "நீ எச்சில் போட்டாயா?" என்றார்.

"என்னிடம் றப்பர் இல்லை வாத்தியார். அம்மாவிடம் காசும் இல்லை!" என்ற சுந்தரத்தின் கண்களில் நீர் நிறைந்துவிட்டது.

"றப்பர் இல்லாவிட்டால் எச்சில் போடக் கூடாது..." என்றார் உபாத்தியாயர். ஆனால் வேறு என்ன செய்யச் சொல்லலாம் என்று யோசித்தவருக்கு ஒரு யோசனையும் ஓடவில்லை. குனிந்து பார்த்தவர் சுந்தரத்தினுடைய கால்சட்டைப் பையுக்குள்ளே என்னவோ மொத்தமாகத் தள்ளிக்கொண்டு கிடப்பதைக் கவனித்தார் "கால்சட்டைப் பையுக்குள்ளே என்ன வைத்திருக்கிறாய்?"

சுந்தரம் பரிதாபமாக உபாத்தியாயரைப் பார்த்தான். அந்தப் பார்வை அவரை என்னவோ செய்தது. "ஏன் பயப்படுகிறாய்? நீ நல்ல பையன், பிழையான காரியம் செய்யமாட்டாய். பயப்படாமல் சொல்லு!" என்றார்.

சுந்தரம் அப்போதும் பதில் சொல்லவில்லை. தலையைக் குனிந்தான். பொல பொலவென்று நாலு சொட்டுக் கண்ணீர் அவன் காலடியில் விழுந்தது. உபாத்தியாயர் அவனை இன்னும் கிட்ட இழுத்து அவன் முதுகைத் தடவிக் கொடுத்து "அழாதே சுந்தரம், அதற்குள்ளே என்ன, புத்தகமா?" என்றார்.

சுந்தரம் இல்லையென்று தலையசைத்தான். பிறகு துடித்துக் கொண்டிருந்த உதடுகளைக் கஷ்டத்துடன் திறந்து மெதுவாக, "வாத்தியார்.... அது... அது... கொஞ்சப் பாண்!" என்றான்.

"ஏன், நீ சாப்பிடவில்லையா?.... பசிக்கவில்லையா?"

"கூப்பன் அரிசி விலை கூடிப்போச்சென்று அம்மா அரிசி வாங்கவில்லை. வீட்டிலே இருக்கிற தங்கச்சிக்கு சாப்பிடக் கொடுக்கத்தான் அதை வைத்திருக் கிறேன்...."

"நீ போ சுந்தரம்" என்று உபாத்தியாயர் வாயால் சொல்லவில்லை அவரால் சொல்ல முடியவில்லை.

"அண்ணை பள்ளிக்கூடத்தால் வரும்போது பாண் கொண்டுவருவார் என்று பசியோடு வழி பார்த்திருக்கும் அந்த மூன்று வயதுக் குழந்தையின் வயிறுமல் லவா இனிமேல் துடிக்கப்போகிறது!" சுந்தரத்தைப் போகும்படி தலையசைத்து விட்டு, உபாத்தியாயர் சால்வைத் தலைப்பினால் தமது கண்களை ஒற்றிக்கொண் டார்.

சுந்தரம்! ..... உன்னைப்போல எத்தனை சுந்தரங்கள்!!

## ஊளையிடும் குரங்கு (Howler Monkey)



இது மெதுவாக நகர்கின்ற வெப்ப மண்டல அமெரிக் கக் குரங்கினமாகும். இதனது ஊளைச்சத்தம் 3 - 5 கி.மீ.தூரம் வரையில் கேட்கும் என்பது குறிப்பிடத்தக் கது. இவற்றின் 5 சிற்றினங்கள் பரவலாகக் கண்டறியப் பட்டுள்ளன. பெரிய புத்துலகக் குரங்குகள் வாலைத்தவிர்த்து 16 - 28 அங்குலம் வரை நீளமும், வால் மட்டும் 20 - 30 அங்குல நீளமும் கொண்டவை. வலு வான உடலையும், கூன் முதுகையும், தாடி மற்றும் ரோமம் அடர்ந்த சுருண்ட வாலையும் உடையவை.



ஒவ்வொரு சிற்றினத்தையும் பொறுத்து- கறுப்பு, பழுப்பு அல்லது சிவப்பு நிறத்திலும் காணப்படுகின்றன. குழுக்களாக தமக்குள் சினேகத்துடன் வசிக்கின்றன. பெரும்பாலும் இவை இலைகளையே உண்டு வாழ்கின்றன.

# தென்றல் வரும் தெரு

-கு.பா.தீபச்செல்வன், யாழ்.பல்கலைக்கழகம்.

05

அன்று திங்கள்.
என் திங்களை
தரிசிக்க பள்ளி வளாகத்தில்
பார்த்திருக்கிறேன்..!
காலடியில் ஒரு கடிகாரம்...
இதயத்துடிப்புடன்
என்னை இழுத்தது!
இப்போது
அது என் கையோடு
காதல் செய்கிறது!?
கண் நிமிர்த்தி
கவனித்தேன்,
என் காதல் தேவதை
அருகில்..!
கையிலிருந்த – கை
கடிகாரத்தைப் பார்த்து
இது எனது என்று
சிணுங்கினாள்..!
கையளித்தேன்
அவளிடம் கடிகாரத்தை...
கூடவே காதலையும்!!
அன்று முதல்
அவள் அபிமானி நான்....!!!
என் காதல் பதிவுப் புத்தகம்
கையளிக்க இருக்கிறேன்...
மலர்க்காட்டில்
என் மங்கையிடம்
மலர்கள் மௌன அஞ்சலி
புரிகின்றன...
குயில்கள் கூடியிருந்து
காதல் கீதம் கூவுகின்றன...
மரங்கள்
மெல்லத் தலையாட்டி
'வருவாள்' என்கிறது...
அப்போது,
அந்த மானிடத்தேவதை
மடியில் விழுந்தபடி
மயங்கியிருந்தது விழிகள்!
மார்போடு
அணைத்து சுவைத்தேன்
மல்லிகையை!!
ஏனோ அவளது விழிகள்
கண்ணீர் சொரிந்தன..!?
உதடுகள்
பிசைந்து அழுதன...
என்னை இறுகக்கட்டி
எப்போதும்
நீ வேணும் என்று
விம்மினாள்!!
உதடுகளைக் கவ்வியபடி
உன்னோடு எப்போதும்
என்று தேற்றினேன்!!!
மலர் ஒன்று
என் மீது மோதி
மௌனக் கனவு
கலைத்தது.....!!!

-அடுத்த இதழுடன் தென்றல் நின்றுவிடும், தெரு முடிந்துவிடும்!?.

● அறிவியல் சிறுகதை

# விளையாட்டுப்பிள்ளை

மூலம்:
மைக்கேல் ஸ்வான்விக்
தமிழில்:
ராமன்ராஜா

எதிரி விண்கலங்கள் பூமியை நெருங்கிவிட்டன. கரிய வானத்தில் நட்சத்திரப் பின்னணியில் அவை ஜொலித்தன. ஒவ்வொன்றும் நூறு மைல் நீளமுள்ள ராட்சச விண்கப்பல்கள். பூமியின் போர்க்கலங்கள் குட்டி பொம்மைகள் மாதிரி அவற்றின் இடையில் புகுந்து புறப்பட்டு வீரமாகச் சண்டைபோட்டன. எதிரி வீசும் ப்ரோட்டான் கதிர்களில் சிக்காமல் அவை நாலாபுறமும் குட்டிக் கரணம்போட்டுத் தப்பித்தன. நடுநடுவே ஒன்றிரண்டு அடிபட்டு நெருப்புப் பந்தாக எரிந்து தூசிக் குவியலில் காணாமல் போயின.



வீடியோ விளையாட்டு கொன்ஸோலைக் கீழே எறிந்துவிட்டு ஒரு சொக்லெட்டை உரித்து வாயில் போட்டுக் கொண்டான் நிக்கு. பத்து வயதுதான் ஆகிறது. பயல், படு சுட்டி. விண்வெளி பற்றியும் நட்சத்திரங்கள் பற்றியும் அவன் கேள்விகளுக்கு பதில் சொல்ல பள்ளிக்கூடத்திலேயே ஆசிரியர்கள் இல்லை. "இளம் விண்வெளி விஞ்ஞானி" தேர்வில் முதலாவதாக வந்து நாஸாவிலிருந்து தங்கப் பதக்கம் வாங்கியிருக்கிறான். விடுமுறை விட்டாயிற்றென்றால் தினம் பத்து மணி நேரம் வீடியோ கேம்!

அதனால்தான் இப்போது உலகத்தைக் காப்பாற்ற அவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

"நிக்கு நிக்கு, ப்ளீஸ்.. விளையாட்டை நிறுத்தாதே. அதோ பார் எதிரிகள் லேசர் பீரங்கியை எடுத்து விட்டார்கள். நாமும் பதிலடி கொடுக்க வேண்டாமா?" என்று கெஞ்சினார் ஜெனரல். அவர் நெற்றியில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள்.

"அவ்வளவுதானே ? இப்போ பாருங்க அங்கிள்!" நிக்குவின் சின்ன விரல்கள் திறமையாக ஜோய் ஸ்டிக்கை இயக்க, திரையில் போர் விமானம் செங்குத்தாக மேலே போய் ஒரு வட்டமடித்துத் திரும்பியது. வேகம், தூரம், நேரம் போன்ற ஏழு பரிமாணங்களை அவன் ஒரே சமயத்தில் கணக்கிட்டு சரியான கணத்தில் ப்ளாஸ்மா டார்பிடோவை விடுவித்தான்.

வீடியோ திரை கொள்ளாமல் ஒரு மகா வெடிப்பு. சிதறல். நெருப்புத்தீற்றல். எந்த சூப்பர் கம்ப்யூட்டராலும் முடியாத அதிவேகக் கணக்கை அவன் மூளை எப்படித்தான் போட்டதோ....எதிரி விமானங்களில் நாலில் ஒரு பங்கு காலி!

ஜெனரல் கண்ணீருடன் சிரித்து வானத்தை நோக்கி முஷ்டியை உயர்த்தினார்.

"அங்கிள், பாத்ரூம் போயிட்டு வந்து விளையாடறேன்."

"சீக்கிரம் வா. சுவாரசியமான கட்டம்."

ஜெனரலுக்கு மட்டும்தான் தெரியும், இது விளையாட்டில்லை, நிஜம்.

திடீரென்று ஒரு நாள் ஆண்ட்ரோமீடாவிலிருந்து புற்றீசல் போல் புறப்பட்டு வந்துவிட்டார்கள் வேற்றுக் கிரகவாசிகள். அவர்களின் மூளைக்கும் திறமைக்கும் போர்த் தந்திரங்களுக்கும் ஈடுகொடுக்க யாராலும் முடியாமல், தோல்வி மேல் தோல்வி. வழக்கமான போர் முறைகளில் பழகிப்போய்விட்ட ராணுவ அதிகாரிகளால் வித்தியாசமாகச் சிந்திக்கவோ, விரைவில் செயல்படவோ முடியாது என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது.

இனி பூமியைக் காப்பாற்ற ஒரு கடைசி முயற்சி செய்து பார்க்கவேண்டியதுதான் என்று ஜெனரல் முடிவெடுத்தார்.

மொத்த விண்வெளிப் படையின் கட்டுப்பாட்டையும் ஒரு புத்திசாலியான சின்னப் பையனின் கைகளில் கொடுப்பதற்கு உலக அரசாங்கத்திடம் மன்றாடி அனுமதி வாங்கிவிட்டார்.

பொடியன் கைகளில் ஆணை போனதும் அவன் அடித்து தூள் பறத்துகிறான்! முதல் தடவையாக எதிரிப் படைகள் திணறுகிறார்கள். சிறுவனாகையால் அவன் பயந்துவிடக்கூடாது என்பதற்காக எல்லாம் விளையாட்டு என்று சொல்லி வைத்திருக்கிறார் ஜெனரல்.

அரை டிராயர் பொத்தானைப் போட்டபடியே வந்தான் நிக்கு. "இந்த விளையாட்டில் ஒரு தப்பு இருக்கிறது அங்கிள்."

"என்னது ?"

"விண்வெளியில்தான் காற்றே கிடையாதே...பின்னே எப்படி எதிரி விமானமெல்லாம் எரிந்து சாம்பலாகிறது ?"

"அவர்களுடைய விமானத்தின் வெளிப்புறமெல்லாம் மக்னீஷியத்தினால் செய்தது. அவர்களோ கார்பன்-டை-ஒக்ஸைடை சுவாசித்து ஒக்ஸிஜனை வெளியிடுபவர்கள். லேசாக ஒரு ஓட்டை போட்டால் போதும் ஒக்ஸிஜன் வெளியே கசிந்து மக்னீஷியத்தின் மீது பட்டாலே புஸ்வாணம்தான்!"

"அப்படியா,.. சரி நாம் பம்பரம் விடலாம்".

"அய்யய்யோ! முதலில் இந்த விளையாட்டை முடிக்கவேண்டும். அப்புறம் பம்பரம்."

"ஊகூம். போரடிக்கிறது."

அவன் தாடையைப் பிடித்துக்கொண்டு "நிக்கு, என் கண்ணில்லை ? நீ மட்டும் எதிரிப் படையை அழித்து விட்டால் ராட்சச கோன் ஐஸ்க்ரீம் வாங்கித் தருகிறேன்."


நிக்கு யோசித்தான். "ஸ்ட்ரோபெர்ரி ஐஸ்க்ரீம். எனக்கு வனிலா பிடிக்காது. என் வகுப்பிலேயே ராகுல் மட்டும்தான் வனிலா சாப்பிடுவான்."

"சரி, சரி. ஸ்ட்ரோபெர்ரி." இந்த விளையாட்டில் மட்டும் ஜெயித்தால் ஐஸ்க்ரீம் பக்டரியே உன்னுடையதுதானே பையா!

"திரும்பிவருகிறார்கள் பார். படு கோபத்தில் இருக்கிறார்கள். ஜாக்கிரதை!"

"பூ! அந்தப் பசங்களை இதோ கலக்குகிறேன் பாருங்க." நிக்குவின் விரல்கள் புயலால் செய்த வண்ணத்துப் பூச்சி போல் கம்ப்யூட்டரை இயக்க, மொத்த விண்வெளிப் படையும் ஒரு முகமாகச் சுழன்று திரும்பி ஒரு புள்ளியை நோக்கிப் புறப்பட்டது.

"டேய் டேய், என்ன செய்கிறாய்?"



"இதே திசையில் நம் விமானங்கள் சென்றால் சூரியனின் கரோனா என்கிற வெளிப்புற நெருப்புப் பிழம்பின் வழியாகப் புகுந்து போகும்."

"போனால் ?..."

"எதிரிப்படை இப்போது பழிவாங்கும் கோபத்தில் இருப்பதால் துரத்திக் கொண்டு பின்னால் போவார்கள்."

"அவர்களுடைய மக்னீஷியம் விமானங்கள் எரிந்து போய்விடும் ?.."

"கரெக்ட்! நம்முடைய விமானங்களெல்லாம் அந்தச் சூட்டைத் தாங்கக் கூடிய பொலிமரால் செய்யப்பட்டது. கவலையில்லை."

"சூரியன் வரை போய்த் திரும்பிவருகிற அளவுக்கு நம்மிடம் எரிபொருள் கிடையாது" என்றார் ஜெனரல் இறுக்கமான முகத்துடன்.

"எரிபொருளே தேவையில்லை. சூரியனின் ஈர்ப்பு விசையால் இழுக்கப் பட்டு பூமராங் மாதிரி போய், தானே திரும்பிவரும். கவண் கல் எ∴பெக்ட்!"

ஜெனரலுக்கு மறுபடி அடக்க முடியாமல் கண்ணீர் வந்தது.

அடுத்த அரை மணி நேரம் நகத்தைக் கடிக்கும் மௌனத்தில் கழிந்தது. நிக்கு காதில் வோக்மென் பொருத்திக் கொண்டு - மெல்ல நடனமாடிக் கொண்டு கேக் தின்றுகொண்டு - பூனைக் குட்டியைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு - க்ரேயானால் சுவரில் படம் வரைந்து கொண்டு - உற்சாக மூட்டையாக இருந்தான். ஜெனரல் போலவே மீசைக்காரப் படம்!

விமானங்கள் வேகமாக சூரியனின் நெருப்பு நாக்குகளின் நடுவே புகுந்தன.

"பார் பார். அவர்கள் வந்த வேகத்தில் திசை திருப்புவதற்கு நேரமில்லை. டூ லேட்! ஜோதியாக எரிகிறார்கள் பார், ஒன்று, இரண்டு, மூன்று!"

எதிரி விமானங்கள் கொசு மாதிரி பொசுங்கிப் போவதைக் கண்டு ஜெனரல் கூத்தாடினார்.

"நம்முடைய விமானங்கள் எங்கே ?"

"சூரியனைச் சுற்றிக்கொண்டு திரும்பிவருகின்றன. நேராக பூமியை நோக்கி வரும்படி பாதையை அமைத்திருக்கிறேன்."

"திருப்பு, திருப்பு! பூமியின் மேல் மோதிவிடப்போகிறது. மோதினால் பூமியே இருக்காது. அணு குண்டுகள் பொருத்திய டசின் கணக்கான விமானங்கள் அந்த வேகத்தில் வந்து மோதினால்...? உடனே திருப்பு எல்லாவற்றையும்!"

"திருப்பும் அளவுக்கு எரிபொருள் இல்லை. சூரியன் இழுத்துவிட்டதில் பத்து ஜி அளவுக்கு அக்ஸிலரேஷன் எகிறிவிட்டது."

ஜெனரல் முகத்தில் கலவரத்தைப் பார்த்துச் சிரித்தான் நிக்கு. "கமோன் அங்கிள். வெறும் விளையாட்டுத்தானே?" என்று ஒரு பொப் கோர்ன் பக்கெட்டைப் பிரித்துக்கொண்டே சொன்னான்.

# வெற்றிக்கான பாதைகள்

தேசம், இனம், மொழி என்ற கட்டங்களை கடந்தவர்களே வெற்றிபெற்ற மனிதர்கள். இவர்கள் அனைவரும் ஒரே இனம். இவர்கள் நிறம் வெற்றியின் நிறம். ஒரு காரியத்தைச் சரிபார்ப்பதற்கு வயது ஒரு பொருட்டே அல்ல. நம்பிக்கையும் விடாமுயற்சியும் கொண்டோருக்கு மீளமுடியாத தடைகள் என்பதே இல்லை. கடின உழைப்பும், சொற்ப வாய்ப்புக்களும், முயற்சியும் கூடவே இருந்தால் அவர்கள் வெற்றியாளர்கள். நம்மில் பலருக்கு தோல்வி என்றால் அவமானம். ஆனால் தோல்வி எனும் படிக்கட்டுக்களால் தான் வெற்றிச் சிம்மாசனத்தை அடையமுடியும். வெற்றி பெற்றவர்கள் சிலரின் கருத்தை அறிந்து கொள்ளுங்கள்.

- 25 நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கன்பூசியஸ் கூறினார், நீங்கள் எவ்வளவு மெதுவாகப் பேசுகிறீர்கள் என்பது முக்கியமல்ல, நின்றுவிடக்கூடாது. அவ்வளவு தான்.
- அமெரிக்க ஜனாதிபதியாவதற்கு முன்பு 2 முறை வியாபாரத்திலும் 6 முறை தேர்விலும் தோல்வியுற்றார் ஆபிரகாம் லிங்கன்.
- டிஸ்னி வேல்ட் கட்டுவதற்கு வோல்ட்டிஸ்னிக்கு பணம் தர மறுத்த வங்கிகள் எண்ணிக்கை 1000க்கும் மேல்.
- பல நூறு கோடிகளுக்கு அதிபரான மேர் கே ஆஷ் தனது முதல் விற்பனையில் நூறு ரூபாவைக்கூட சம்பாதிக்கவில்லை.
- Chickenfoup for this sun என்ற மிகப் பிரசித்தி பெற்ற நூலை பிரசுரிக்க மார் விட்டர் ஹேன்சன் ஜெக் கேன் பீல்ட் முயன்ற போது அவருக்கு மறுப்பு சொன்ன பதிப்பாளர்கள் 32 பேர்கள்.

இவர்கள் எல்லாம் வெற்றி பெறவில்லையா? நம்மால் மட்டும் வெற்றிகாண முடியாதா? நிச்சயமாய் முடியும். முயலுங்கள், வெற்றி உங்கள் காலடியில்.

வருவதாய்த்தான் சொன்னாய்...
வரவைத் தொலைத்து..
செலவாகிப் போனாய்.
என் கணக்கில்
-மேலதிகப் பற்று!

# 'லவ்'வியம்!

- ஏ.எஸ்.பாரதி

- உன்னோடு பேசும் அந்தச் கணங்களில்...

சொல்லிவிடத்தான் நினைக்கிறேன்..
— என் உள்ளத்துப் பூட்டுக்களை
உடைத்து...

சொல்லிவிடத்தான் நினைக்கிறேன்..
— கட்டிக்கொள்ளும் பற்களை
விடுவித்து...


சொல்லிவிடத்தான் நினைக்கிறேன்..
-- நடுங்கும் விரல்களை
நிலைநிறுத்தி.....

சொல்லிவிடத்தான் நினைக்கிறேன்..
-- ஒட்டிக் கொள்ளும் உதடுகளை
ஈரமாக்கி.....

ஊ...கூ..ம்..ம்.....
சாத்தியமேயில்லை.....

நீயே கூறிவிடு.....

உன்னிடமிருக்கும்
என்
இதயம்
சொல்ல நினைப்பதை!



# தென்றலின் முகவரி

தென்றலின் முகவரிக்கு
கடிதமெழுதினேன்;
உன்னிடமிருந்து வந்தது
பதில்!

ஊருக்குப் போயிருந்தேன்.
நீயும் நானும்
- ஓடிப்போவதற்காய்த்
திட்டம்போட்ட புளியமரத்தடியில்
இன்னுமொரு ஜோடி;
புளியமரம்
என்னைப்பார்த்ததும்
நக்கலாய்ச் சிரித்தது!

நிலாவைக் கொண்டுவாறேன்....
சூரியனைச் சுட்டுத்தாறேன்...
ஆறுகார் அடுக்கடுக்காய் உனக்குத்தாறேன்...
கண்ணே... எது வேண்டும் உனக்கு...?
பெண்ணே ....கேள்...உந்தன்
உள்ளம் மட்டும் எனக்கு...
எல்லாம் சொல்லிக் கடைசியில்
கடற்கரை கூட்டிப்போய்..
வாங்கிக்கொடுத்தார்...
சுண்டல்..! சுண்டல்..!!

● *சிறப்புக் கட்டுரை*

# கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள்

## ஒரு பார்வை

கிறிஸ்துமஸ் ஆண்டு தோறும் நசரேத்து இயேசுவின் பிறப்பைக் குறிக்கும் முகமாக கொண்டாடப்படுகிறது. கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களில் இயேசுவின் பிறப்பை சித்தரிக்கும் சிறிய பொம்மைகளால் செய்யப்பட்ட மாட்டுத்தொழுவக் காட்சிகள், கிறிஸ்மஸ் தாத்தா, வாழ்த்து அட்டை மற்றும் பரிசுப் பரிமாறல், கிறிஸ்துமஸ் மரத்தை அழகூட்டல், கிறிஸ்துமஸ் கரோல் பாடல் என்பன பொதுவாக அடங்கும். கிறிஸ்தவ கருத்துக்களோடு, கிறிஸ்தவத்துக்கு முந்திய காலப்பகுதியின் குளிர்கால கொண்டாட்டங்களின் சில பகுதிகளையும் கிறிஸ்துமஸ் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கொண்டாட்டத்தின் மதம் சாரா பகுதிகளாக குடும்ப உறுப்பினர்கள் ஒன்று கூடல், நல்லெண்ணங்களை வளர்த்தல் என்பன பின்பற்றபடுகின்றன.

கிறிஸ்துமஸ் கிறிஸ்தவர்களின் ஒரு முக்கியமான திருநாளாகும். இது பெரும்பாலான கிறிஸ்தவர்களால் டிசம்பர் 25 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது எனினும் கிழக்கு மரபுவழி திருச்சபைகள் இதனை யூலியின் நாட்காட்டியில் டிசம்பர் 25ஐக் குறிக்கும் நாளான சனவரி 7 ஆம் நாள் கொண்டாடுகின்றன.

கிறிஸ்துமஸ் இன்று உலகின் பெரும்பாலான நாடுகளில் கிறிஸ்தவத்தினது பரவல் காரணமாகவும் அக்கொண்டாட்டங்களில் காணப்படும் மேற்குலக



நாகரிங்களின் கவர்ச்சி காரணமாகவும் கொண்டாடப்படுகிறது. அமெரிக்க-பிரித்தானிய வழமைகளுக்கு மேலதிகமாக அவ்வப்பகுதிகளில் கிறிஸ்துமஸ் கொண்டாங்கள் வேறுபடுகின்றன.

குளிர்கால கொண்டாட்டங்கள் ஒவ்வொரு நாகரிகத்திலும் மிக முக்கியமான கொண்டாட்டங்களாக இருந்து வந்துள்ளன. கிறிஸ்தவ கருத்துக்களின் படி உயிர்த்த ஞாயிறு மிக முக்கியமான கொண்டாட்டமாக கருதப்படுகிறது. கிறிஸ்துமஸ் முன்னுரிமை குறைந்த கொண்டாட்டமாக கருதப்பட்டது, ஆரம்பகால கிறிஸ்துவ சமூகத்தில் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் விரும்பப்படவில்லை. இன்றைய சமூகத்தில் கிறிஸ்துமஸ் முக்கிய கொண்டாட்டமாக வளர்ந்திருப்பது கிறிஸ்தவத்துக்கு முன்னதான குளிர்கால கொண்டாட்டங்களின் பாதிப்பு எனக்கருதப்படுகிறது. அவற்றில் முதன்மையானவை சில பின்வருமாறு:

### சடுர்நலியா பண்டிகை

உரோமப் பேரரசின் நாட்களில், சடுர்நலியா, இத்தாலி முழுவதும்

நன்கறியப்பட்ட குளிர்கால கொண்டாட்டமாகும். சடுர்நலியாவின் போது களியாட்டங்களும், கேளிக்கை நிகழ்வுகளும் காணப்பட்டன. இதன் போது பரிசுப் பரிமாற்றங்களும் முக்கிய இடம் வகித்தன. பெரியவர்களுக்கு மெழுகுவர்த்திகளும் சிறுவருக்கு பொம்மைகள் வழங்குவதும் வழக்கமாக காணப்பட்டது.

சடுர்நலியாவின்போது வர்த்தக நடவடிக்கைகள் பிற்போடப்பட்டதோடு அடிமைகளுக்கும் கொண்டாட்டங்களில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டிருந்தது. மது அருந்துதல், பொது இடங்களில் உடையின்றி இருத்தல் போன்றவையும் காணப்பட்டன. சடுர்நலியா சனிக் கடவுளை மதிப்பதற்காக நடைபெற்றது. இது ஆண்டுதோறும் டிசம்பர் 17தொடக்கம் டிசம்பர் 24 வரை நடைபெற்றது. பின்னர் இது ஐந்து நாட்களாகக் குறைக்கப்பட்டது.

### நடலிஸ் சொல்- இன்விக்டுஸ் பண்டிகை

உரோமர்கள் டிசம்பர் 25 ஆம் நாள் சொல்-இன்விக்டுஸ் என்றழைக்கப்பட்ட சூரியக்கடவுளின் பிறந்த நாளை கொண்டாடும் முகமாக நடலிஸ் சொலிஸ் இன்விக்டுஸ் என்ற பண்டிகையை கொண்டாடினர்.

இது கி.மு. 218 - 222 இல் உரோம அரசனான இலகபலுஸ் காலத்தில் உரோமுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு கி.மு. 270-275 இல் அருலியன் காலத்தில் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. சொல் இன்விக்டுஸ் ("தோல்வியடையாத சூரியன்") சிரியாவில் தொடக்கத்தைக் கொண்ட சூரியக் கடவுளாவார்.

டிசம்பர் 25 குளிர்கால சம இராப்பகல் நாளாகக் கருதப்பட்டது, இதனை உரோமர்கள் புருமா என அழைத்தனர். ஜூலியஸ் சீசர் கி.மு. 45 இல் ஜூலியன் நாட்காட்டியை அறிமுகப்படுத்திய போது குளிர்கால சம இராப்பகல் நாள் டிசம்பர் 25 நாளில் வந்தது எனினும் தற்காலத்தில் அது டிசம்பர் 21 அல்லது 22 இல் வருகின்றது. சொல் இன்விக்டுஸ் கிறிஸ்துமசின் தொடக்கத்துக்கு மிகப்பெரிய பங்களிப்பை செய்துள்ளதாக கத்தோலிக்க கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. சில ஆரம்ப கிறிஸ்தவ எழுத்தாளர்களும் இயேசுவின் பிறப்பை சூரியனின் மீள் உதயத்தோடு ஒப்பிட்டுள்ளதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, சைபீரியன் என்ற கிறிஸ்தவ ஆயர் (கிமு 300கள் - கிபி258) பின்வருமாறு எழுதியுள்ளார்:

"Oh how wonderfully acted Providence that on that day on which that Sun was born . . . Christ should be born". (ஓ,எவ்வளவு அதிசயச் செயல், சூரியன் பிறந்த நாளில்...கிறிஸ்துவும் பிறந்தது).

### யூல் பண்டிகை

ஸ்கண்டினேவியாவைச் சேர்ந்த நாடுகளில் பேய் வழிபாட்டாளர்கள் யூல் பண்டிகையை டிசம்பர் கடைசி தொடக்கம் சனவரி ஆரம்பம் வரையான பகுதியில் கொண்டாடினார்கள். இப்பண்டிகையின் போது தோர் - இடியின் கடவுளை மகிமைப்படுத்தும் வகையில் பெரிய மரம் ஒன்றை எரிப்பது வழக்கமாகும். இதன்போது அந்நெருப்பில் இருந்து வரும் ஒவ்வொரு எரிதங்களும் புதுவருடத்தில் பிறக்கப் போகும்

கால்நடைகளைக் குறிப்பதாக நம்பப் பட்டது. மரம் எரிந்து முடியுமளவும் பண்டிகை தொடரும். இது சுமார் 12 நாட்கள் வரை எடுக்கலாம். ஜேர்மனி யில் இதையொத்த பண்டிகை மிட்வி ண்டனெச் (மத்திய குளிர்கால இரவு) என அழைக்கப்பட்டது. வடக்கு ஐரோப் பாவே கடைசியாக கிறிஸ்தவத்துக்கு மாற்றப்பட்டமையால் அதன் ஆதி வழி பாட்டு முறைகள் கிறிஸ்துமசில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. ஸ்கன்டினே வியர் கிறிஸ்துமஸ் பண்டிகையை இன்றும் யூல் என்றே அழைக்கின்றனர். யூல் என்ற பதம், 900 ஆம் ஆண்டு முதல் ஆங்கிலத்தில் கிறிஸ்துமஸ் என் பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்லாக பயன்படுகிறது.

## கிறிஸ்மஸ் பண்டிகையின் தோற்றம

இயேசு டிசம்பர் 25இல் பிறந்ததாக கி.பி. மூன்றாவது நூற்றாண்டைச் சேர்ந்த கிறிஸ்தவ எழுத்தாளரும் தேச சஞ்சாரியுமான செக்டுஸ் ஜுலியஸ் அப்ரிகானுஸ் என்பவரால் கி.பி. 221 இல் கிறிஸ்தவருக்காக எழுதப்பட்ட நூல் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டது. இந்நாள் இயேசு கருவில் உருவாகிய தாக கருதப்படும் மார்ச் 25 இலிருந்து ஒன்பது மாதங்கள் கடந்த நாளாகும், மார்ச் 25 தற்பொழுது மங்கள வார் த்தை அறிவிப்பின் திருநாளாக கொண் டாடப்படுகிறது. மார்ச் 25 வசந்த கால சம இராப்பகல் நாளாகவும் கருதப்படு வதால் ஆதாம் படைக்கப்பட்ட நாளா கவும் இந்நாள் விளங்குகிறது. ஆரம்ப கிறிஸ்தவர்கள் மார்ச் 25ஆம் நாளே இயேசு சிலுவையில் அறையப்பட்ட தாக கருதினார்கள்.

இதன் உள்கருத்து இயேசு கருவில் உருவாகிய அதே நாளில் இறத்தல் என்பதாகும். இது, தீர்க்கதரிசி ஒருவர் முழு எண்ணளவான நாட்களே உயிர் வாழ்வாரென்ற யூதர்களது நம்பிக்கை யின் காரணமாக எழுந்ததாகும். தொடக்க கால கிறிஸ்தவ அவையில் இயேசுவின் பிறந்த நாள் திருநாளாகக் கொண்டாடப்படவில்லை.கி.பி. 245ஆம் ஆண்டு ஒரிஜென் என்ற கிறிஸ்தவ வேதியல் அறிஞர் இயேசுவின் பிறப்பை கொண்டாடுவதை பலமாக எதிர்த்தார். அவர் பார்வோனரசரைப் போல இயே சுவின் பிறப்பை கொண்டாடக்கூடாது எனவும் பாவிகளே அவ்வாறு செய்வதா கவும் புனிதர்கள் அல்ல எனவும் குறிப் பிட்டார்.

கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் பற்றிய மிகப்பழைமையான குறிப்பு கி.பி. 354 ஆம் ஆண்டளவில் உரோமில் தொகுக் கப்பட்ட பிலோகலசின் நாட்குறிப்பில் காணப்படுகிறது. கி.பி. 360களின் ஆதா ரமொன்று அக்காலத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் உரோமில் நிலை பெற்றிருந்ததைக் காட்டுகின்றன. ஆனால் கிழக்கில் கிறிஸ்தவர்கள் குழந்தை இயேசுவைக் காண கிழக் கில் இருந்து ஞானிகள் வந்ததைக் கொண்டாடும் திருநாளின் (சனவரி 6) ஓர் அங்கமாக பிறப்பையும் கொண்டா டினராயினும் இயேசுவின் திருமுழுக் குக்கே முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது.

கிழக்கில் கிறிஸ்துமஸ் கொண் டாட்டங்கள் ஆரிய சார்பான பேரரசன் வலென்ஸ் கி.பி. 378இல் அட்ரினாபோல் சமரின்போது இறந்ததை அடுத்து

அங்கு திரித்துவ கிறிஸ்தவம் பரவிய தன் மூலம் புதுப்பிக்கப்பட்டது. கொன் ஸ்தாந்தினோபிலுக்கு கி.பி 379இலும் அந்தியோக்கியாவுக்கு 380இலும் அலெக்சாந்திரியாவுக்கு சுமார் 430 இலும் அறிமுகப்படுத்தப்பட்டது. எட் வட் கிப்பன் என்ற ஆய்வாளரின் கருத் துப்படி ஆரியவாதம் மிகுந்து காணப் பட்ட கொன்ஸ்தாந்தினொபிலில் கிறிஸ் துமஸ் கொண்டாட்டங்கள் ஆரம்பத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தின. கி.பி 381 இல் அப்போதைய ஆயரான கிரெ கொரி நசியன்சுஸ் பதவி விலகிய தைத் தொடர்ந்து வழக்கொழிந்துபோய் மீண்டும் யோன் கிறிசொஸ்டொம் கி.பி. 400இல் ஆயராகப் பதவியேற்ற பின்பு மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.

## மத்திய காலம்

ஐரோப்பாவின் ஆரம்ப மத்திய காலத்தில், கிறிஸ்துமசின் முக்கியத் துவம் ஞானிகளின் திருநாளினால் குறைக்கப்பட்டிருந்தது. ஆனால் மத் திய காலத்தில் கிறிஸ்துமஸ் தொடர் பான திருநாட்கள் முக்கியத்துவம டைந்து காணப்பட்டன.

கிறிஸ்துமசுக்கு முன் 40 நாட்கள் "புனித மார்ட்டினின் நாற்பது நாட்கள்" (இது நவம்பர் 11 இல் ஆரம்பித்தது) என அழைக்கப்பட்டது, தற்காலத்தில் தவக்காலம் என இது அழைக்கப்படு கிறது. இத்தாலியில் சடுர்நெலிய அம்சங்கள் தவக்கால முறைமைகளுக் குள் உள்வாங்கப்பட்டன. 12வது நூற் றாண்டளவில் இவ்வம்சங்கள் கிறிஸ் துமசின் 12 நாட்களுக்குள் (டிசம்பர் 26-சனவரி 6) ஊடுகடத்தப்பட்டன.

கிறிஸ்துமசின் முக்கியத்துவம் சார்லேமக்னே கி.பி. 800ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் நாளில் முடிசூட்டப்பட்ட தனாலும் இங்கிலாந்தின் முதலாவது வில்லியம் மன்னர் 1066 கிறிஸ்மஸ் நாளன்று முடிசூட்டப்பட்டதனாலும் அதிகரித்தது. உயர் மத்திய காலத் தில் வரலாற்று நூல்கள் பல முக்கிய நபர்கள் கிறிஸ்துமஸ் திருநாளைக்



கொண்டாடியதை குறித்துள்ளன. இங் கிலாந்தின் இரண்டாம் ரிச்சர்ட் மன்னன் 1377ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் விருந் தொன்றை கொடுத்ததாக கூறப்பட்டுள் ளது. யூல் பன்றி மத்திய கால கிறிஸ் துமஸ் விருந்துகளில் கட்டாய அங்க மாக காணப்பட்டது. கரோல் பாடல் இசைப்பதுவும் இக்காலத்தில் பிரபல மடைந்து வந்தது. ஆரம்பத்தில் கரோல் குழு நடனமாடுபவர்களால் ஆனதாக காணப்பட்டது. குழுவில் ஒரு தலைமை பாடகரும் அவரைச் சுற்றி நடனமாடும் குழுப்பாடகர்களையும் கொண்டிருந்தது. அக்காலத்தின் பல எழுத்தாளர்கள் கரோல் இசையை

சடுர்நலிய, யூல் அம்சங்களின் தொடர்ச்சி என சாடினார்கள். விதிமுறைகளை மீறுதலும், குடிபோதை, சூதாட்டம் போன்றவையும் கொண்டாட்டத்தின் முக்கிய அங்கமாகக் காணப்பட்டன. இங்கிலாந்தில் புத்தாண்டு நாளில் பரிசுகள் பரிமாறப்பட்டன.

### சமய மறுசீரமைப்பும் 1800களும்

கிறிஸ்தவ சமய மறுசீரமைப்பின் போது சீர்த்திருத்த திருச்சபைகள் கிறிஸ்துமஸ் கொண்டாங்களை 'பாப்பரசரின் அழுக்குத்துணி' எனவும் 'சாத்தானின் அழுக்குத்துணி' எனவும் கண்டித்தனர். கத்தோலிக்க திருச்சபை கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களில் சமய தன்மையைக் கூட்டுவதன் மூலம் இதற்குப் பதில் அளித்தது. இங்கிலாந்து உள்நாட்டுப் போரின்போது முதலாம் சார்ல்ஸ் மன்னனை பாராளுமன்றம் வென்றதன் காரணமாக இங்கிலாந்தின் தூய்மைவாத கிறிஸ்தவ மறுசீரமைப்பு ஆட்சியாளர்கள் 1647 இல் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களை இங்கிலாந்தில் தடை செய்தனர். இதனைத் தொடர்ந்து கிறிஸ்துமஸ் ஆதரவுக் கலவரங்கள் பல நகரங்களில் வெடித்தது. கண்டபெரி பல கிழமைகளுக்கு கலகக்காரர்களின் வசமிருந்தது. அவர்கள் ஒலிவ் கிளைகளால் பாதைகளை அலங்கரித்ததோடு அரசனுக்கு ஆதரவளிக்கும் வாசகங்களையும் காட்சிப்படுத்தினார்கள். 1660 இல் இங்கிலாந்தின் ஆட்சியாளர்கள் கிறிஸ்துமஸ் மீதான தடையை நீக்கினார்கள். இன்னமும் சில அங்கிலிக்கன் திருச்சபைப்பாதிரியார்கள் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களை எதிர்த்து வருகின்றனர்.

அமெரிக்காவின் புதிய இங்கிலாந்தில் தூய்மைவாத கிறிஸ்தவ மறுசீரமைப்பினர் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களை எதிர்த்தார்கள். பொஸ்டன் நகரில் 1659 தொடக்கம் 1681 வரையான காலப்பகுதியில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் தடை செய்யப்பட்டிருந்தன. அதே காலப்பகுதியில் நியூயோர்க் வெர்ஜீனிய நகர மக்கள் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களைக் கொண்டாடி வந்தனர். அமெரிக்கப் புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்தின் கலாச்சாரம் எனக் கருதப்பட்டதால் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களின் பாலான ஈர்ப்பு அமெரிக்காவில் குன்றியது.

1820களில் இங்கிலாந்தின் பிரிவினைவாதம் தலைதூக்கியிருந்த காலத்தில் பல எழுத்தாளர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகை அருகிக்கொண்டு போவதாக கருதினார்கள். அவர்கள் கிறிஸ்துமஸ் மனமார்ந்த ஒரு கொண்டாட்டத்துக்கான காலமாக கருதியதால் அதனை மீட்பிக்க பல முயற்சிகளை செய்தனர். 1843 இல் சார்ல்ஸ் டிக்கின்ஸ் வெளியிட்ட 'கிறிஸ்மஸ் கரோல்ஸ்' என்ற நூல் கிறிஸ்துமஸ் பண்டிகையை சமூக களியாட்டம் வீண்விரயம் செய்யும் காலமாக அல்லாமல் குடும்பம், நல்லெண்ணம், கருணை போன்றவற்றை மையப்படுத்தி கொண்டாடும் பழக்கத்தை முன் கொணர்வதில் முக்கிய பங்காற்றியது.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் வோசிங்டன் இர்விங் என்ற எழுத்தாளரின் 'The Sketch Book of Geoffrey Crayon', 'Old Christmas'

சிறுகதைகள் காரணமாக அமெரிக்காவில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் மீள்ப்பிக்கப்பட்டன. இச்சிறுகதைகளில் இங்கிலாந்தில் கடைப்பிடிக்கப்பட்டதாக எழுத்தாளர் கூறிய விடுமுறைகளால் மக்கள் கவரப்பட்டனர். ஆனால் சிலர் இர்வினின் நூலில் வரும் விடுமுறை தொடர்பான கூற்றுகள் கற்பனையானவை என்றும் பின்னாளில் அமெரிக்கர்கள் அந்நூலில் உள்ளவற்றைப் பின்பற்றியதன் மூலமே நூலில் உள்ள விடுமுறைக் கலாச்சாரம் தோன்றியதாகவும் கருதுகின்றனர். மேலும் அமெரிக்க உள்நாட்டுப் போரைத்தொடர்ந்து அமெரிக்காவுக்கு வந்த அதிகளவான ஜேர்மனிய குடிவரவாளர்கள் ஐரோப்பிய கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களை அமெரிக்காவுக்கு கொணர்வதில் முக்கிய பங்காற்றினார்கள். 1870 இல் கிறிஸ்துமஸ் அமெரிக்காவில் கூட்டரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டது.

## 20ஆம் நூற்றண்டும் அதன் பின்பும்

1914 இல் முதலாம் உலகப் போரின் போது, பிரித்தானிய, ஜேர்மனிய இராணுவ வீரர்களிடையே அதிகாரபட்சமற்ற போர்நிறுத்த உடன்பாடொன்று காணப்பட்டது. இராணுவத்தினர் தாமாகவே போர் செய்வதை நிறுத்திவிட்டு கரோல் இசைக்கத் தொடங்கிவிட்டார்கள். இந்த போர் நிறுத்தம் கிறிஸ்மஸ் அன்று தொடங்கி சில நாட்கள் நீடித்தது.

20 ஆம் நூற்றண்டில் அமெரிக்காவில் கிறிஸ்துமஸ் மத சார்பானதா? சார்பற்றதா? என்பதைப் பற்றிய சர்ச்சைக்கு முகம் கொடுத்தது. கிறிஸ்துமஸ் - கூட்டரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டமையானது ஆலயத்தையும் நாட்டையும் பிரித்தல் என்பதற்கு முரணானது என சிலர் வாதிட்டார்கள். 'லின்ச் எதிர் டொனெலி (1984)', 'கனுலின் எதிர் ஐக்கிய அமெரிக்கா (1999)' வழக்குகள் உட்பட பல முறை நீதிமன்றத்துக்கும் இப்பிரச்சினை எடுத்துச்செல்லப்பட்டது.

'கனுலின் எதிர் ஐக்கிய அமெரிக்க (1999)' வழக்கில் நீதிமன்றம், கிறிஸ்மஸ் - கூட்டரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டமையானது, அதில் காணப்படும் மதச்சார்பற்ற அம்சங்கள் காரணமாக சட்ட மீறல் அல்ல என தீர்ப்பளித்தது. இதனை டிசம்பர் 19, 2000இல் அமெரிக்க உயர் நீதிமன்றமும் ஆதரித்து தீர்ப்பளித்தது.

21ஆம் நூற்றாண்டில் கிறிஸ்துமஸ் கிறிஸ்தவ மத மற்றும் மதச்சார்பற்ற அம்சங்களை ஒருசேரக் கொண்டுள்ளது.

## பிறப்பு

விவிலியத்தின்படி, கபிரியேல் என்ற இறைதூதன், கன்னி மரியாளிடம் பரிசுத்த ஆவிமூலமாக இயேசு பிறக்கப்போவதை அறிவித்தார். அச்சமயம் மரியாள் யோசேப்பு என்பவருக்கு மணமுடிக்க நிச்சயிக்கப்பட்டிருந்தார். மரியாள் கர்ப்பமாயிருப்பதைத் தெரிந்து கொண்ட யோசேப்பு மரியாளை இரகசியமாக மணமுடிக்காதுவிட நினைத்தார். இறைதூதர் யோசேப்புக்குமுன் தோன்றி மரியாள் உற்பவித்திருப்பது பரிசுத்த ஆவியினால் என்பதை தெரிவிக்கவே யோசேப்பு மரியாளை மனைவியாக ஏற்றுக்கொண்டார்.

மரியாள் நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தபோது பாலஸ்தீனத்தை ஆட்சி செய்த அகோஸ்துராயர் மக்கள் தொகைக் கணிப்பீடு ஒன்றை செய் வதற்குக் கட்டளையிட்டார். அவர் கட்டளைப்படி யொசேப்பும் மரியாளும் தங்களை பதிவு செய்ய யோசேப்பின் முன்னோரான தாவிதின் நகரமான பெத்லகேமுக்குச் சென்றனர். தங்குவ தற்கு அறைகள் கிடைக்காத நிலை யில் மாட்டுத்தொழுவமொன்றில் தங்கி னார்கள். அம்மாட்டுத் தொழுவத்தில் மரியாள் இயேசுவைப் பெற்றார்.

இயேசு பிறந்த நேரம், அருகிலுள்ள புல்வெளியில் ஆடு மேய்த்துக்கொண்டி ருந்த இடையருக்கு இறைதூதர் தோன்றி பெத்லகேமில் இரட்சகர் பிறந் திருக்கிறார் என்ற நற்செய்தியை அறி விக்கிறார். பரலோக இறைத்தூதர் அனைவரும் அவர்கள் முன் தோன்றி 'உன்னதங்களிலே கடவுளுக்கு மகி மையும், இப் பூமியில் நன்மனத்தோ ருக்கு அமைதியுமாகுக' எனப் பாடினர். இடையர் நகருக்குள் சென்று இயேசுவைக் கண்டு வணங்கினார்கள்.

**தேசிய கொண்டாட்டங்கள்**

***இலங்கையில் கிறிஸ்துமஸ்***

கிபி 6ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் கொஸ்மாஸ் இண்டிகொப் லெய்ட்ஸ் எழுதிய 'Topographia Christiana' என்ற நூலில் அக்காலப் பகுதி யில் தப்ரபேனில் கிறிஸ்தவர்கள் வசித் ததாகவும் அவர்களுக்கு ஒரு தேவாலா யமும் பாதிரியார் ஒருவரும் இருந்த தாக குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் அனுராதபுர இராச்சியத்தில் கிறிஸ்தவர் கள் வாழ்ந்ததாக 1913 ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் நடைபெற்ற அகழ் வாராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு சிலுவைகளாலும் வவுனியா வுக்கு அண்மையில் அகழ்ந்தெடுக்கப் பட்ட திருமுழுக்குத் தொட்டியின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பண்டுகாபய மன்னர் புதிய நகரைக் கட்டுவிக்கும்போது தேவாலயம் ஒன்றை கட்டிக்கொடுத்ததாக மகாவம்சம் கூறும். யோனா பிரிவினர் நெஸ்டோரி யன் கிரேக்க மரபுவழி கிறிஸ்தவர்கள் எனக் கருதப்படுகிறார்கள். அக்கா லத்தில் இங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டா



டினார்களா என்பதை உறுதிப்படுத்த ஆதாரங்கள் எதுவும் கிடையாது.

இலங்கையின் வரலாற்றில் எழு தப்பட்ட முதலாவது கிறிஸ்துமஸ் பண் டிகை 1505 இல் இலங்கைக்கு கத்தோலிக்கர்களான போர்த்துக்கேயர் வருகையை அடுத்தே நடைபெற்றது. 1505 நவம்பர் 15 இல் கொழும்புத் துறைமுகத்தை அடைந்த லோரோன் சோ டி அல்மேதா தலைமையிலான போர்த்துக்கேய மாலுமிக் குழுவினர் அங்கு தமது கப்பலைப் பழுதுபார்க் கும் பணிகளிலும் கோட்டை அரசனு

டன் தொடர்புகளையும் மேற்கொண்ட அதே வேளை கொழும்புத் துறைமுகத்தில் சிறிய தேவாலயம் ஒன்றை கட்டினார்கள். இத்தேவாலயத்தில் 1505 இல் முதலாவதாக கிறிஸ்துமஸ் திவ்விய பலியை ஒப்புக்கொடுத்தார்கள்.

*கட்டுரையாளர் - ஜனகன்*

கிறிஸ்துமஸ் இலங்கையில் பொது விடுமுறை நாளாகும். டிசம்பர் மாதத்தில் ஆரம்பம் முதலே வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் கிறிஸ்துமஸ் சிந்தனைகள் கரோல் இசைகள் என்பன ஒலி, ஒளி பரப்பப்படும். விற்பனை நிலையங்களில் கிறிஸ்துமஸ் அலங்காரங்களையும் காணலாம்.

கிறிஸ்துமஸ் நாளுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் கிறிஸ்துமஸ் மரம் ஒன்றை வீட்டில் அலங்கரிப்பதோடு கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களை கிறிஸ்தவர்கள் ஆரம்பிப்பது வழக்கமாகும். கிறிஸ்துமஸ் நாளன்று புத்தாடை அணியும் வழக்கமும் காணப்படுகிறது. கத்தோலிக்கர் இயேசு பிறப்பின் மாட்டுத்தொழுவக் காட்சிகளை பொது இடங்களிலும் வீடுகளிலும் காட்சிக்கு வைப்பது வழக்கமாகும். கத்தோலிக்கரும் அங்கிலிக்கன் சபையினரும் டிசம்பர் 24 நடு இரவு, டிசம்பர் 25 காலை திருப்பலிகளில் பங்குகொள்ளும் அதேவேளை சீர்த்திருத்த சபையினர் முழு இரவு தியானங்கள், செபக் கூட்டங்கள் என்பற்றில் ஈடுபடுவது வழக்கமாகும். டிசம்பர் 25 காலையில் அயலவருடன் உணவுகளைப் பகிர்தலும், விருந்து கொடுத்தலும் பொதுவான வழக்கங்களாகக் காணப்படுகின்றன.

**ADVertisemenT**
-- An Advertisement Network --
දැන්වීම A Weekly விளம்பரம்

-இது ஒரு விளம்பரப் பத்திரிகை-

- வாங்க/விற்க
- கல்வி
- சாரதி பயிற்சி
- வாடகைக்கு
- கணினி
- பழுது
- சேவை
- தேவை பார்த்தல்
- திருமணசேவை

இன்னும் பல...

வகைப்படுத்தப்பட்ட சிறுவிளம்பரங்கள் இலவசமாக பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு புதன் கிழமைகளிலும்...

நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளிற்கும் விளம்பர முகவர்களும் வினியோகத்தர்களும் தேவை.

**ADVertisemenT**
**198, 1st Floor, Galle Road, Dehiwela, Colombo.**
**T.P.: 011 5649884**

# ஏன் பெயிலாகிறோம்?

ஏன் கல்வி ஒரு மாணவனுக்கு கடுமையாக இருக்கிறது.. ஏன் பலர் பரீட்சைகளில் தோற்கிறார்கள்?

முதலில ஒரு வருசத்தில இருக்கிற மொத்த நாட்களில 52 ஞாயிற்றுக் கிழமைகள் வருது. ஒரு மனிசனுக்கு ஓய்வு கட்டாயம் முக்கியம் எண்ட படியாலை அந்த 52 நாளும் படிக்க முடியாது. ஆக மிச்சம் 313 நாள்தான் படிக்க இருக்கு.

கோடை விடுமுறை எண்டு ஒன்று இருக்கு. அது ஒரு 50 நாள். சரியான வெயில். அந்த வெக்கையில கடைசி வரை படிக்க முடியாது. அப்ப இப்ப மிச்சம் 263 நாள் இருக்கு.

டொக்ரர்ஸ் என்ன சொல்லுகினம் எண்டால் ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு கண்டிப்பாக 8 மணி நேரத் தூக்கம் அவசியமாம். அப்பிடிப் பார்த்தால் ஒரு வருசத்தில இது 122 நாள்.. இப்ப மிச்சம் இருக்கிறது 141 நாள்.

சரி விளையாட்டு உடம்புக்கு தேவையான ஒரு விசயம். அதுக்கு ஒரு நாளைக்கு ஒரு 1 மணித்தியாலம் ஒதுக்கினால் அதிலை ஒரு 15 நாள் வந்திடுது. மிச்சம் இருக்கிறது 126 நாள்.

சாப்பிடுறதுக்கு, குடிக்கிறதுக்கு, கொறிக்கிறதுக்கு எண்டு ஒரு நாளைக்கு 2 மணித்தியாலத்தை ஒதுக்கலாம். அப்பிடிப் பாத்தால் வருசத்தில அதுக்கெண்டு 30 நாள் செலவாகுது. இப்ப மீதியாயிருக்கிறது 96 நாள்.

நாலு மனிசரோடை கதைக்கிறதுக்கு, சிரிக்கிறதுக்கு ஒரு 1 மணித்தியாலத்தை ஒதுக்குவோம். (தனிய இருந்தால் மன அழுத்தம் ஏதாவது வந்திடுமெல்லோ.) அப்ப



அதிலை ஒரு 15 நாள் போயிட இப்ப இருக்கிறது 81 நாள்.

ஒரு வருசத்திலை 35 நாள் சோதினை நடக்குது. சோதினை நேரம் படிக்கக்கூடாது எண்டு பெரிய ஆராய்ச்சியாளர் சொல்லுகினம். அப்ப அதை விட்டால் மீதமா 46 நாள் படிக்கிறதுக்கு இருக்கு.

உந்த காலிறுதி, அரையிறுதி, திருவிழா, தேர் எண்டு 40 நாள் லீவு.. லீவுக்குள்ளை படிக்க வேணும் எண்டால் லீவே விடாமல் இருந்திருக்கலாமே? அதனாலை ஒரு 6 நாள் மிஞ்சுது படிக்கிறதுக்கு.

ஒரு வருத்தம், உடம்பு சரியில்லை எண்டு ஒரு வருசத்திலை ஒரு 3 நாள் ஒதுக்கலாம். (சரியான குறைச்சல் தான். ஆனாலும் படிக்கிற ஆர்வத்திலை சரியா குறைச்சிருக்கு).. ம்..ம்.. இப்ப 3 நாள் மிஞ்சுது.

ஒரு கல்யாண வீடு, ஒரு புதுப்படம் இதுகளுக்கு போகாமல் இருக்க முடியுமோ? ஒரு 2 நாளை அதுக்கு ஒதுக்கலாம். (அதுக்கு மேலை முடியாது)..

இப்ப ஒரேயொரு நாள்தான் கிடக்குது படிக்கிறதுக்கு.

சரி படிக்கலாம்..

அட.. அந்த ஒரு நாள்தானே பிறந்த நாள்! பிறகெப்பிடி?

*- அம்பலவாணன்*

# மனிதனா? மிருகமா?

**பச்சை பச்சையாய் ஒரு சிவப்புத் தொடர்!**

## நான் ஏன் பிறந்தேன்?

எழுதுவது: பெரும்பித்தன்

பச்சை; பச்சை! உண்மையைக் குத்திக்காட்டினால் சிவப்பாகத்தான் வர வேண்டும். ஆனால், பச்சையாய்ச் சொன்னால்தான் அது உண்மை!

நிறத்தை வைத்துக்கொண்டு மனிதர்களைத் தரம்பிரித்துப் பார்க்கும் இந்த உலகில் எந்த நிறத்தில் சொன்னாலும், உண்மைகள் முழுமையாகக் கறுப்புப் பூசி மறைக்கப்படுகின்றன. அல்லது வெள்ளை மையால் அழிக்கப்படுகின்றன.

நான் ஓர் ஆண்: நான் ஓர் பெண்!

ஆதிக்கத்துக்கும் அடிமைத்தனத்துக்குமான உண்மைகள் இவை. பிறக்கும் போது ஆரம்பிக்கும் இந்த ஆர்ப்பாட்டங்கள் உயிர் அடங்கும்வரை தொடர்கின் றன.

வக்கிரம், ஆணவம், கடூரம் என்பன ஊறிப்போன இரத்தத்தில் இரக்கத்தை யும் அன்பையும், அரவணைப்பையும் எங்கே தேடுவது?



வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை
பேருக்கொரு நிறமாகும்.

சாம்பல் நிறமொரு குட்டி - கருஞ்
சாந்து நிறமொரு குட்டி,
பாம்பு நிறமொரு குட்டி, - வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி.

எந்த நிறமிருந்தாலும் - அவை
யாவும் ஒரேதர மன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும் - இஃது
ஏற்றமென்றும் சொல்லாமோ?

என்று நிறவேற்றுமை பற்றிப் பாடினான் பாரதி. அவன் பாடலில் குறையில்லா மற் போனதால், அவனிற் குறைகண்டதிந்த உலகம். கஞ்சா அடித்துப் பைத்திய மானவன் பாரதி; அவன் வார்த்தைகளுக்கேது வலிமை? மதிப்பு?? என்று

எள்ளி நகையாடியது இந்த அற்ப உலகம்.

உண்மையைச் சொன்னால் இப்படித்தான் பலன் கிடைக்கும்.

பைத்தியமென்பார்கள். இவனுக்கு வேறு வேலையில்லை என்பார்கள். கடைசியில் வார்த்தைகளாலேயே கொன்றொழிப்பார்கள்.

பெண்களைப் போற்றுங்கள் என்றால், அவர்களது முக்கால் நிர்வாணப் படங்களை விளம்பரப் பலகைகளாக ஏற்றுவார்கள். பெண்களின் உடலைப் போத்தலுக்கும், காருக்கும், கட்டிலுக்கும் ஒப்பிட்டு வாசகங்கள் எழுதுவார்கள். விளம்பரப் படங்கள் எடுப்பார்கள். அவற்றைக் கேட்டும் பார்த்தும் கிறங்கிக் கிடக்கும் இளசுகளின் நெஞ்சில், ஆபாசத் துணையோடு இன்னும் இன்னும் வக்கிரத்தை விதைப்பார்கள்.

"பெண்ணென்டால் - வெள்ளைக்கலர் பெண்தான் வேணும்!" கரிக்கட்டிக் - கலரில் - தாருக்கும் - அவன் மாருக்கும் வித்தியாசம் தெரியாத ஆண்வர்க்கத் தின் தேடலும் வெள்ளைப் பெண்தான்!

'சரக்கு எப்பிடி? துண்டப் பாரடா!! ஃபிகர் சோக்கா இருக்கடா!!!' இதற்குமேல் ஆண்வர்க்கத்தின் வாய்களில் வரும் அழகான வார்த்தைகளை இங்கு எழுதமுடி யாது. ஆனாலும், தேவைப்பட்டால் - வருங்காலத்தில் எழுதவே செய்வேன்.

"தாலிகட்டினவனிட்டையே உன்ர விளையாட்டக் காட்டுறியேடி?"

'தாலி' என்கிற மூக்கணாங்கயிறு மாட்டப்பட்ட மாடுகளாய்த் தமிழ்ப்பெண் கள். சில சம்பிரதாயங்கள் - மோதிரத்தை மாட்டிச் சுருக்குப் போட்டுவிடுகின்றன. இந்த மூக்கணாங்கயிறுகளும், சுருக்குகளும் ஆண்களின் கையில் இருந்தாற் கூடப் பரவாயில்லை. அவற்றைப்பற்றிக் காலாகாலமாக ஞாபகமூட்டி - கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் என்ற பாரிய 'படங்கு'களைக்கொண்டு தன்னைத்தானே மூடிக்கொண்டு கிடக்கிறது பெண்கள் சமூகம்.



*விடியும் நல்லொளி காணுதி நின்றே,*
*மேவு நாகரிகம்புதி தொன்றே*
*கொடியர் நம்மை அடிமைகள் என்றே*
*கொண்டு, தாம் முதல் என்றன ரன்றே?*
*அடியோடந்த வழக்கத்தைக் கொன்றே,*
*அறிவுயாவும் பயிற்சியில் வென்றே*
*கடமை செய்விர்நந் தேசத்து வீரக்*
*காரிகைக் கணத்தீர், துணிவுற்றே.*

இதுவும் பெண்விடுதலைக்காய்ப் பாரதி பாடியதுதான். அவன் பைத்தியக்கா ரன். கஞ்சா அடித்துத் தெருவில் கிடந்த வீணன்; என்னைப்போல்!


# மனிதனா? மிருகமா?

பெண் விடுதலையாவது, மண்ணாவது? தாமே சிறைக்குள்ளாகச் சென்று கதவுகளை இறுகமூடிக்கொண்டு, 'இது தான் பாதுகாப்பு' என்பவர்களிடம் விடுதலை பற்றிப்பேசுவது வீண்.

எனக்கு விசர். எங்கேயோ ஆரம்பித்து என்னென்னவோ சொல்லிக் கொண்டு போகிறேன். மனிதன் இன்று மனிதாகவே இல்லை. எல்லாம் மிருகம். மிருகத்திடம் 'இது நல்லவிசயம்; அது கெட்ட விசயம்' என்று எடுத்துக்கூறிப் பயனில்லை. ஒன்றில் அது, தான் நினைத்ததைச் செய்யும். இல்லை, மற்ற மிருகம் செய்வதைப்பார்த்து அதைப்போலவே செய்யும்!

ஐயோ, எல்லாப் பக்கமும் பயங்கரமான மிருகங்கள்!!

இரத்த வெறியோடும் தசை ருசியோடும் அலையும் மிருகங்கள். பரிணாம வளர்ச்சியெல்லாம் பொய். டார்வினுக்கும் பைத்தியம். என்னென்னவோ உளறிவிட்டுப் போய்விட்டான். கூர்ப்பாம் கூர்ப்பு! மண்ணாங்கட்டி!! மிருகம் மிருகமாகவே தான் இருக்கிறது. அது என்றைக்கும் மனிதனாக மாறியது கிடையாது; மாறவும் போவதில்லை.




"ஐயோ! பசிக்குதே!! பொக்கட்டில் அம்பது ரூபாத்தாள் ஒண்டு கிடந்தது. காணேல்லையே? ச...ச.. இதென்ன, பொக்கட்டில் பெரிய ஓட்டை?? தையல் விட்டுப் போச்சு.. இண்டைக்கும் பட்டினிதான்...". என் புலம்பலைக் கேட்டு என்னைப் பைத்தியம் என்கிறார்கள். சிலர், பாவம் என்று சில்லறையைத் தூக்கி எறிந்துவிட்டுப் போகிறார்கள்.

நானா, பைத்தியம்? நானா பிச்சைக்காரன்??

யேய், 'மனிதர்களே!' நான் தெளிவாகத்தான் இருக்கிறேன். சுயபுத்தியோடு தான் பேசுகிறேன். நீங்கள்தான் மிருகங்களாய் வெறிபிடித்து வக்கிரத்தோடு திரிந்துகொண்டிருக்கிறீர்கள்!

நான் விடமாட்டேன்; உங்களை விடவே மாட்டேன்! வருவேன், மறுபடியும் வருவேன். இதைப்போல இன்னும் இன்னும் தெளிவாய்ப் பேசிக்கொண்டேயிருப்பேன்!! வருவேன்!!!

# குறுக்கெழுத்துப் போட்டி 11

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1) | | 2) | 3) | 4) | 5) | |
| | | 6) | | | | |
| 7) | 8) | | | 9) | | 10) |
| 11) | | | 12) | | | |
| 13) | | | | | 14) | |
| 15) | | 16) | | 17) | | |
| | | 18) | | | | |

## இடமிருந்து வலம்:

1) அக்கினிச் சிறகுகள் எனும் நூலையெழுதிய விஞ்ஞானி.

6) கோடைகாலங்களில் தயாராகும் உணவுப் பண்டம் (குழம்பியுள்ளது).

7) மன்னனின் வருகையை அறிவித்து சேவகன் நிறைவாககூவும் சொல் (குழம்பியுள்ளது).

9) 'மோட்டர்' என்பதை தமிழில் சொன்னால்...

11) ஓர் உலோகம் - மின்சாரம் பயன்படுத்தும் எல்லா வீடுகளிலும் இருக்கும்!

13) 'நுழைய' என்ற பொருளில் பயன்படும் சொல்.

14) நினைவில்லா நிலை.

15) சௌந்தர்ய தேவதை... சமையலுக்கும் பயன்படும்...!

18) நூற்றாண்டு கண்ட காலப்பகுதி.

## மேலிருந்து கீழ்

1) அண்மையில் உலகளாவிய ரீதியில் பிரபலமான இலங்கையின் மத்திய நகரம்.

2) ஆரம்பி என்ற பொருள்படும் ஆனால் முடித்து வைக்கவும் பயன்படும்.

3) மண்ணின் தோற்றுவாய் (தலைகீழாயுள்ளது).

4) இராமகாவியத்தை தமிழில் தந்தவன்.

5) வண்டியிழுக்கும் கால்நடைகளுக்கு காலில் அடிப்பது.

8) போரினால் இலங்கையின் புகழுக்கு இது ஏற்பட்டது.

10) சிறப்பானது, அற்புதமானது என்ற பொருளில் பயன்படும் சொல்.

12) 'அணி' என்ற பொருள் தரும்.

16) மக்கள் கூடிய மண்டபம் (தலைகீழாயுள்ளது).

17) திட உணவுக்குமுன் திரவ உணவாக கொள்ளப்படுவது.

**எழுதுங்கள்... வெல்லுங்கள்...**

## குறுக்கெழுத்துப் போட்டி 10 றக்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1) சிக்குன்குனியா 5) தன் 6) குரக்கன் 8) பல்லவர்
10) ரதம் 11) கவலை 13) சகா 14) கரும்பு 15) பகை

**மேலிருந்து கீழ்**

1) சிலம்பரசன் 2) குருகுலம் 3) குதர்க்கம் 4) கன்னி
7) ஏகலைவன் 9) காதல் 12) வடு 14) புகை

## குறுக்கெழுத்துப் போட்டி 10 இன் வெற்றியாளர்கள்

திரு. மு. திருக்கோவிந்தன்
பொற்பதி வீதி,
கொக்குவில்.


திரு. வி. இராமச்சந்திரன்
காளிகோவிலடி, நவாலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

செல்வி T. ஜீவனா
34, 8வது ஒழுங்கை,
கொள்ளுப்பிட்டி.

வெற்றி பெற்றவர்களிற்கான பரிசாக அடுத்துவரும் 3 வேடிக்கை மாத இதழ்கள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். -(ஆ-ர்)

**விடைகளிற்கான இறுதித் திகதி 20.12.2007**
*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:* **VEDIKKAI**
**198, 1st Floor, Galle Road, Dehiwela, Colombo.**

## வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



மேலேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையில் குறைந்தபட்சம் ஏழு வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக்கண்டுபிடியுங்கள். விடைகள் - இவ்விதழில் இன்னோரிடத்தில்!

# குறுந்தகவல் குறுந்தொகை



அண்மையில் வந்தது ஒரு செய்தி!
தெஹிவளை மிருகக் காட்சிச்
சாலையின் ஆறடி மனிதக் குரங்கைக்
காணோமாம்!
இன்றுவரை எங்கு தேடியும்
கிடைக்கவில்லையாம்!
ஆனால் எனக்குத் தெரியும்!
உனக்கும் தெரியும்!
நான் சொல்ல மாட்டேன்,
நீயே சொல்லிவிடு!
அதுதான் சரி, நீ
காலையில் அதைக் கண்டதை!
உன் முகம்பார்க்கும் கண்ணாடியில்.....



அறிவாளியிடம் ஒரு கேள்வி...
(10 தரம் விசையை அழுத்துக)
- - - - - - - - - - -
- - - - - - - - - - -
- - - - - - - - - - -
- - - - - - - - - - -
- - - - - - - - - - -
- - - - - - - - - - -
- - - - - - - - - - -
- - - - - - - - - - -
- - - - - - - - - - -
- - - - - - - - - - -
அதுதான். முன்னமே சொன்னோம்ல
'அறிவாளிகிட்ட ஒரு கேள்வி'னு.
அப்புறமென்ன நீங்க லொட்க
லொட்குனு அமத்திகிட்க?

ஒரு காலை மார்கழி மாதம்.
அழகான கோயில் பிரகாராம்.
சற்று அருகினில் உன்முகம் பார்த்தேன்!
கையில வச்சிருந்த பிரசாதத்தைக்
காணோம்டி, பாவி!

நட்சத்திரத்தைப் பார்த்தேன்
நீதான் தெரிந்தாய்!
நிலவைப் பார்த்தேன்
நீதான் தெரிந்தாய்!
வானத்தைப் பார்த்தேன்
நீதான் தெரிந்தாய்!
ஹலோ! கொஞ்சம் நகரும்மா,
மறைக்குது!!

பிரஷ் பண்ணாத பல்லும்
எஸ்.எம்.எஸ். அனுப்பாத செல்லும்
நல்லா இருந்ததா சரித்திரமே இல்லை!
அதனால,
பல்லு விளக்கு!
எஸ்.எம்.எஸ். அனுப்பு!

இனிமே உன்னை
கடன்காரி, இம்சை, பிசாசு
அப்படின்னெல்லாம் கூப்பிடமாட்டேன்.
அமெரிக்காவைப் பார்த்தியா..
கொல்ல வர்ற புயலுக்குக்கூட
கேத்தரீனா, ரீட்டான்னு
ஸ்வீட்டா பேர் வைக்கிறாங்க!




ஒவ்வொரு கண்ணீரும்
முறிவுகளின் குறியீடு!
ஒவ்வொரு மௌனங்களும்
தனிமையின் குறியீடு!
ஒவ்வொரு புன்னகையும்
இரக்கத்தின் குறியீடு!
உன் -ஒவ்வொரு SMS களும்
நினைவுகளின் குறியீடு!!



● விளையாட்டு



# விடைபெற்றார் மாவன்


இலங்கை கிரிக்கெட் அணியின் நம்பிக்கைக்குரிய துடுப்பாட்ட வீரராகத் திகழ்ந்த மாவன் அத்தபத்து சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றிருக்கிறார். கடந்த மாதம் ஹோபர்ட்டில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முடிவிலேயே அவர் தனது ஓய்வை அறிவித்தார்.

90-91 பருவகாலத்தில் தனது சர்வதேச கிரிக்கெட் அறிமுகத்தை மேற்கொண்ட மாவன், மிகச்சிறந்த ஆரம்ப - நடுத்தரவரிசைத் துடுப்பாட்டக்காரராக தன்னை நிலை நிறுத்திக்கொண்டார்.



அத்துபத்துவின் மிகச்சிறந்த ஒருநாள் போட்டி இன்னிங்ஸ்ஸாகக் கருதப்படுவது 1998இல் லோர்ட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்துக்கெதிராக இவர் 132ஓட்டங்களைக் குவித்ததுதான். எமிரேட்ஸ் கிண்ணத்துக்காக நடைபெற்ற தொடரின் இறுதிப்போட்டியில் இவர் அடித்த அபார சதம் இலங்கை அணிக்கு கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தது.

தனது முதலாவது டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளை இந்திய அணிக்கெதிராக 1990 இல் விளையாடியிருந்தார் மாவன். 90 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 16 சதங்கள், 17 அரைச்சதங்கள் அடங்கலாக 5502 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். இதில் 6 இரட்டைச்சதங்களும் அடங்கும்.




ஒரு நாள் போட்டிகளுக்கான அணித்தலைவராக பொறுப்பேற்ற அத்துபத்து 2004இல் இந்திய அணிக்கெதிரான ஆசியக் கிண்ண இறுதிப்போட்டியில் இந்திய அணியை வீழ்த்தி கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார். இந்தப் போட்டியில் இவர் அடித்த 65 ஓட்டங்கள் இவருக்கு போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருதையும் பெற்றுக்கொடுத்தன.

இவர் விளையாடிய ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளின் எண்ணிக்கை 268. இவற்றில் 11 சதங்கள் 59 அரைச் சதங்கள் அடங்கலாக 8529 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார்.

அணியின் தேவைக்கேற்ப எந்த நிலையிலும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடக் கூடிய ஆற்றலைக் கொண்டிருந்தவர் மாவன். அர்ஜுன ரணதுங்கவுக்குப் பின்னர் நம்பிக்கை தரும் அணித்தலைவராகத் திகழ்ந்தவர். மைதானத்தில் அமைதியானவராகக்



**2003 உலகக் கிண்ணத்தொடர், ஒரு நாள் போட்டிகளில் அத்துபத்துவின் துடுப்பாட்டத் திறமையை முழுமையாக வெளிப்படுத்திய தொடராக அமைந்தது. இத்தொடரில் 382 ஓட்டங்களை அவர் 54.57 எனும் சராசரியில் பெற்றார். தென்னாபிரிக்க அணிக்கெதிராக அவர் அடித்த 124ஓட்டங்கள் - அந்தப் போட்டியை சமநிலையில் கொண்டுவந்து - தென்னாபிரிக்க அணியை தொடரிலிருந்து வெளியேற வைத்தது.**

காணப்பட்டாலும் அணி வீரர்களுடன் கண்டிப்புடனும், தோழமையுடனும் பழகியவர்.

2006 இன் ஆரம்பத்தில் காயம் காரணமாக அவதிக்குள்ளான இவர் அணியிலிருந்து விலகிக்கொண்டார். அணித்தலைவர் பொறுப்பு மஹேல விடம் சென்றது. அதன் பின்னர் இவரது உடல்தகுதியையும் வயதையும் காரணம்காட்டி அணியில் இணைக்காமல் வைத்திருந்தது நிர்வாகம்.

புற அழுத்தங்கள் காரணமாக உலகக்கிண்ண அணியில் இவர் இணைக்கப்பட்டாலும் ஒரு போட்டியிலேனும் விளையாடுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. அதன்பின்னர் பங்களாதேஷ் அணிக்கெதிரான தொடரில் இவர் சேர்க்கப்பட்டாலும் தானாகவே விலகிக்கொண்டார். அவுஸ்திரேலிய அணிக்கெதிரான தொடரிலும் பலதரப்பிலிருந்தும் வந்த வேண்டுகோளுக்கிணங்கவே இணைந்துகொண்டார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின்போது பத்திரிகையாளரிடம் இவர் தெரிவித்த கருத்துக்கள் காரணமாக இவரை உடனடியாக அணியிலிருந்து விலக்கத் தீர்மானித்தது நிர்வாகம். எனினும் அணித் தலைவர் மற்றும் சக வீரர்களின் அழுத்தம் காரணமாக இரண்டாவது டெஸ்டில் விளையாட அனுமதிக்கப்பட்டார். இந்தப் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் மாவன் எடுத்த 80 ஓட்டங்கள் அந்தப் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தன. எனினும் சங்கக்கார தவிர மற்றைய முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கே ஆட்டமிழந்ததால் வெற்றி வாய்ப்பு கைநழுவிப் போனது.




**சிம்பாப்வே அணிக்கெதிரான அத்துபத்துவின் டெஸ்ட் சராசரி 95.41. அந்த அணிக்கெதிராக 1145 ஓட்டங்களைக் குவித்திருக்கிறார். 2004 இல் நடைபெற்ற இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மொத்தமாக 419 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.**



2005 ஒக்டோபரில் ஐ.சி.சி. சிறந்த ஒருநாள் போட்டித் தலைவருக்கான விருது அத்தபத்துவுக்குக் கிடைத்தது.

கிரிக்கெட் நிர்வாகத்துக்கு தனது ஓய்வுபற்றி அறிவிக்கும் கடிதத்தை எழுதிய அத்தபத்து தனது கிரிக்கெட் வாழ்வின் எந்த நிலையிலும் தனக்கு ஆதரவாக இருந்த அத்தனை உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்திருந்தார். அத்துபத்துவின் ஓய்வு பெறும் முடிவு தனக்கு அதிர்ச்சியளித்தாலும், இளையவர்களுக்கு வாய்ப்பைக் கொடுத்து, தானாகவே விலகும் அவரது பண்பைப் பாராட்டுவதாக அணித்தலைவர் மஹேல கருத்துத் தெரிவித்திருந்தார்.

தனது கிரிக்கெட் வாழ்வில் பல் வேறு சாதனைகள் - சோதனைகள் -



மிகச்சிறப்பாக தனது அணித்தலைவர் பொறுப்பை ஆரம்பித்த அத்தபத்து இந்தியாவிடம் ஒரு நாள் போட்டித் தொடரில் 6-1 என்றும், டெஸ்ட் தொடரில் 2-0 என்ற கணக்கிலும் தோல்வியைச் சந்திக்க, அவரது அணித்தலைவர் பதவி ஆட்டம் காண ஆரம்பித்தது.

சவால்களைச் சந்தித்த தலை சிறந்த துடுப்பாட்ட வீரர் மாவன் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றாலும் முதல் தரப் போட்டிகளில் இவரது பங்களிப்பு நிச்சயமாகத் தொடரும் என்றே தெரிகிறது. ஐ.சி.எல். இன் டெல்லி ஜெற்ஸ் அணிக்கு இவர் தலைமையேற்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. சிட்னி கிரேட் கிரிக்கெட்டின் சென் ஜோர்ஜ் கழகத்




காயம்காரணமாக தொடர்ந்து விளையாட முடியாத நிலைமை ஏற்பட, அணியிருந்தும் அணித்தலைவர் பதவியிலுருந்தும் விலகும் நிலைக்குத் தள்ளப்பட்டார் அத்துபத்து. விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இந்திய அணிக்கெதிரான 4ஆவது போட்டியே இவரது கடைசி ஒருநாள் சர்வதேசப் போட்டியாக அமைந்தது. ஸ்ரீசாந்தின் பந்துவீச்சில் 12ஓட்டங்களுடன் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தவேளையிலேயே அத்துபத்து தனது இறுதி ஒரு நாள் போட்டி அதுதான் என்பதை உணர்ந்திருக்கக்கூடும்.

துக்காகவும் இவர் விளையாடுவார் எனத் தெரிகிறது. மாவனின் ஓய்வு அறிவிப்பைக் கேட்டுச் சோர்ந்திருக்கும் அவரது ரசிகர்களுக்கு இவை உற்சாகமான செய்திகள்தான். ▭

# கிறிஸ்மஸ் சமையல்

## கிறிஸ்மஸ் அச்சு முறுக்கு



**தேவையான பொருட்கள்**

கோதுமை மா - அரைக்கிலோ
சீனி - 150 கிராம்
முட்டை - ஒன்று
கெட்டியான தேங்காப்பால் -அரைக்கோப்பை
எள்ளு - இரண்டு தேக்கரண்டி
உப்புத்தூள் - தேவையான அளவு, எண்ணெய் - தேவையான அளவு
தண்ணீர் - தேவையான அளவு.

**செய்முறை**


முதலில் சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெயை ஊற்றி காயவைக்கவும். அதில் முறுக்கு அச்சினை வைத்து சூடாக்க வேண்டும். சற்று குழிவான பாத்திரத்தில் முட்டையை உடைத்து ஊற்றவும். அதில் சீனியைப் போட்டு அது கரையும்வரை நன்கு கலக்கவும்.

பிறகு தேங்காப்பாலை ஊற்றி உப்பைச் சேர்த்து நன்கு கலக்கி கோதுமை மாவையும் எள்ளையும் சேர்த்துக் கொட்டவும். கைகளால் எல்லாவற்றையும் சேர்த்து கலக்கிவிட்டு தேவையான தண்ணீரை சிறிது சிறிதாக சேர்த்து கலக்கவும். கலவையானது, தோசை மாவின் பதத்திற்கு இருக்கவேண்டும். பின்னர் எண்ணெயில் உள்ள முறுக்கு அச்சினை வெளியில் எடுத்து மாவில் மெதுவாக அச்சை முக்கால் பாகம் முழுகும் அளவிற்கு முக்கி எடுக்கவும்.

அதை உடனே காய்ந்துக் கொண்டிருக்கும் எண்ணெயில் வைத்தால் அச்சில் ஒட்டியிருக்கும் மா பிரிந்து எண்ணெயில் விழுந்துவிடும். இதேபோல் எல்லா மாவையும் முறுக்குகளாக சுட்டு எடுத்து அடுக்கவும். பார்ப்பதற்கு அழகாகவும் சுவையாகவும் இருக்கும். கிறிஸ்மஸ்க்கு ஏற்ற இனிப்புப் பலகாரம் இது.

ஆயத்த நேரம் - 10 நிமிடங்கள். சமைக்கும் நேரம் - 60 நிமிடங்கள்

## கிறிஸ்மஸ் பிஸ்கட்



**தேவையான பொருட்கள்**

கோதுமை மா - இரண்டு கோப்பை
சீனி - ஒருகோப்பை
பட்டர் - ஒரு கோப்பை
முட்டை - இரண்டு
பேக்கிங் பவுடர் - ஒரு தேக்கரண்டி

உப்புத்தூள் - தேவையான அளவு
சார பருப்பு / pistachio - ஒரு கோப்பை
செர்ரி பழம் - அரைக்கோப்பை
கிரான்பெர்ரி - அரைக் கோப்பை
துருவிய எலுமிச்சை தோல் - ஒரு தேக்கரண்டி



**செய்முறை**

முதலில் அவணை 350 டிகிரியில் வைத்து சூடுபடுத்தவேண்டும்.

பட்டருடன் சீனியை சேர்த்து, கலக்கும் இயந்திரத்தில் போட்டு நன்கு கலந்து கொள்ளவேண்டும். கோதுமை மாவுடன் பேக்கிங் பவுடர், உப்புத்தூளைப் போட்டு இரண்டு முறை அரிதட்டினால் அரித்து வைக்கவும். பழங்களையும் பருப்பையும் பொடியாக நறுக்கி வைக்கவும்.

பிறகு கலக்கிய பட்டர் கலவையில் முட்டைகளை உடைத்து ஊற்றி, துருவிய எலுமிச்சைத் தோலையும் சேர்த்து நன்கு கலக்கவும். அதில் மாவைக் கொட்டி, நறுக்கிய பழம் மற்றும் சார பருப்பைப் போட்டு நன்கு கலக்கவும்.

இந்தக் கலவையை ரொட்டி தட்டும் தட்டில் வைத்து கைகளால் பிசைந்து உருளையாக நீளமாக உருட்டவும். இந்த ரோலை அப்படியே பேக்கிங் செய்யும் தட்டில் வைத்து பத்து முதல் பதினைந்து நிமிடம் அவணில் வைத்திருந்து வெளியில் எடுத்து சிறிது ஆறவிடவும்.

முழுவதும் வெந்திருக்க வேண்டும். ஆனால் நிறம் மாறாமல் வெண்மையாக இருக்கும் பதத்தைக் கவனிக்கவும். இந்த ரோலை கத்தியால் மெல்லிய வட்டங்களாக வெட்டி தட்டில் பரப்பி வைத்து மீண்டும் அவணில் பத்து நிமிடம் வைத்திருந்து வெளியில் எடுத்து நன்கு ஆறியவுடன் எடுத்து தட்டில் வைக்கவும். கிறிஸ்மஸ் நிறங்களுடன் பார்ப்பதற்கு அழகாகவும் சுவையாகவும் இருக்கும்.

ஆயத்த நேரம் - 15நிமிடங்கள். சமைக்கும் நேரம் - 20 நிமிடங்கள் ▭

### விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்பது இதைத்தான்...

வேட்டையாடுவதில் விருப்பமுள்ள ஓர் அப்பாவுக்கு வினோதமான ஓர் ஆசை. குறிதவறாது சுடும் தனது திறமையை மகன் எதிரில் நிருபிக்க விரும்பினார். ஒரு நாள் வேட்டைக்குப் போகும்போது மகனையும் கூடவே அழைத்துக் கொண்டு போனார். சற்று தூரத்தில் கொக்கு ஒன்று அமர்ந்திருந்தது கண்டு அப்பாவுக்கு குஷி.

சில நிமிடம்கள் துப்பாக்கி முனையில் கொக்கை குறிபார்த்துவிட்டு, மகனே, இப்பபார் என்றபடி துப்பாக்கியை அழுத்தினார். கொக்கு செத்துவிழப் போகிறது என்று மகன் எதிர்பார்க்க, ஒரு காயமுமின்றி எம்பிப் பறந்தது கொக்கு. அப்பாவை மகன் நகைப்போடு பார்க்க, சிறிதும் தயங்காமல் அவர் சொன்னார் "மகனே, ஓர் அதிசயத்தைப் பார்க்கிற பாக்கியம் உனக்குக் கிடைச்சிருக்கு. அதோ பார்... செத்துப்போன ஒரு கொக்கு பறந்துக்கிட்டிருக்கு" என்றார்.

# வாசகர் முகங்கள்




வேடிக்கை சஞ்சிகை மறுபடியும் வெளிவர ஆரம்பித்திருப்பது சந்தோஷமளிக்கிறது. நவம்பர் இதழில் வெளியான பெண் ஏன் அடக்கப்பட்டாள்? ஏன் ஒடுக்கப்பட்டாள்? என்ற கட்டுரை நன்றாக இருந்தது. கவிஞர் சு.வி.யைப் பற்றிய தகவல்களை வெளியிட்டமைக்கு நன்றிகள்.

**-விதுஷா சிவப்பிரகாசம், வவுனியா.**

வேடிக்கை நவம்பர் 2007 வெளியீடு கிடைத்தது. ஆக்கங்கள் நிறைவாக இருந்தன. நான் வேடிக்கை புத்தகத்தை வாசிப்பது இதுதான் முதல்தடவை. முன்னனைய இதழ்கள் எனக்குக் கிடைக்குமா?

**- எம். நுஸ்ரா, பேருவளை.**

**(எமது அலுவலக முகவரிக்கு தொடர்பு கொண்டு நீங்கள் எமது முன்னைய இதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம் - ஆ-ர்)**

நீண்டகால தாமதத்திற்கு பின்பு வெளிவந்திருக்கும் வேடிக்கையின் நவம்பர் இதழ் வாசித்தேன். புத்தக அமைப்பு, உள்ளடக்கங்கள் எல்லாம் சிறப்பாகவே இருந்தன. அறிவித்தல் ஏதுமின்றி திடீரென்று வெளியிட்டுவிட்டீர்கள். திடீரென்று கடையில் சஞ்சிகையைப் பார்த்ததும் இன்ப அதிர்ச்சியாயிருந்தது.

**- பி. கனகசபை, மட்டக்களப்பு.**

வேடிக்கை இதழை நீண்ட இடைவெளிக்குப்பிறகு வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது மகிழ்ச்சி. அட்டைப்பட கார்ட்டூன் சிந்திக்கவைத்தது. ஓவியத்தில் ஆர்வமுள்ள எனக்கு கோபுலு பற்றிய பக்கங்கள் மிகப்பிடித்திருந்தன. அவர் வரைந்த 'தில்லான மோகனாம்பாள்' ஓவியத்தையும் பிரசுரித்திருக்கலாமே?

**-கா.நல்லதம்பி, திருநெல்வேலி.**

வேடிக்கையின் தீபாவளி சிறப்பிதழ் வாசித்தேன். மிக நன்றாக இருந்தது. எமது பகுதியில் உள்ள புத்தகக் கடையில் வேடிக்கை சஞ்சிகையைக் காணமுடியவில்லை. கொழும்புக்கு வந்தபோதுதான் தற்செயலாக எனக்குக் கிடைத்தது. தயவு செய்து எமது பிரதேசத்துக்கும் சஞ்சிகையை அனுப்புங்கள்.

**- எம். ஹர்ஷான், ஹட்டன்.**

நீண்டதொரு இடைவெளிக்குப் பிறகு வேடிக்கை மீண்டும் வந்திருக்கிறது. இனியாவது தொடர்ச்சியாக வெளிவருமா? முன்னைய இதழ்களைப்போலவே இந்த இதழிலும் ஆக்கங்கள் அனைத்தும் சிறப்பாக உள்ளன.

**- எல்.கனிஸ்ரன், சாவகச்சேரி.**

● சரித்திரத் தொடர்




**பொழுது புலர இன்னும் அரை ஜாமப் பொழுது இருக்கும். கீழ்வானத்தில் காலைப் பிறையும் விடிவெள்ளியும் அருக ருகே ஒளிர்ந்து கெண்டிருந்தன. உச்சிவானத்தில் வைரங் களை வாரி இறைத்தது போல் நட்சத்திரங்கள் பிரகாசித்தன.**

வடக்கே ஸப்த ரிஷி மண்டலம் அலங்காரக் கோலம் போட்டதுபோல் காட்சியளித்தது. தெற்கு மூலையில் சுவாமி நட்சத்திரம் விசேஷ சோபை யுடன் தனி அரசு புரிந்தது. அந்த மனோகரமான அதிகாலை நேரத்தில், காவேரி பிரவாகத்தின் "ஹோ" என்ற சத்தத்தைத் தவிர வேறு சத்தம் ஒன்று மேயில்லை. திடீரென்று அத்தகைய அமைதியைக் கலைத்துக் கொண்டு "டக் டக் டக" என்று குதிரையின் காலடிச் சத்தம் கேட்கலாயிற்று. ஆமாம் இதோ ஒரு கம்பீரமான உயர் ந்த ஜாதிக் குதிரை காவேரி நதிக் கரைச் சாலை வழியாகக் கிழக்கேயி ருந்து மேற்கு நோக்கி வருகிறது. அது விரைந்து ஓடி வரவில்லை. சாதாரண நடையில் தான் வருகிறது. அந்தக் குதிரைமீது ஆஜானுபாகுவான ஒரு வீரன் அமர்ந்திருக்கிறான். போதிய வெளிச்சமில்லாமையால், அவன் யார், எப்படிப்பட்டவன் என்று அறிந்து கொள் ளும்படி அங்க அடையாளங்கள் ஒன் றும் தெரியவில்லை. நெடுந்தூரம் விரைந்து ஓடிவந்த அக்குதிரையை இனிமேலும் விரட்ட வேண்டாமென்று அவ்வீரன் அதை மெதுவாக நடத்தி வந்ததாகத் தோன்றியது. அவன் தான் சேர வேண்டிய இடத்துக்குக் கிட்டத் தட்ட வந்துவிட்டதாகவும் காணப் பட்டது.

அவனுக்கு வலதுகைப்புறத்தில் காவேரி நதியில் பிரவாகம். இடது புறத்திலோ அடர்ந்த மரங்களும் புதர் களும் நிறைந்த காடாகத் தோன்றியது. வீரன், இடது புறத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டு வந்தான். ஓரிடத் துக்கு வந்ததும் குதிரையை இடது புறமாகத் திருப்பினான். குதிரையும் அந்த இடத்தில் திரும்பிப் பார்க்கப் பழக்கப்பட்டது போல் அநாயாசமாகச் செடி கொடிகள் அடர்ந்த காட்டுக்குள் புகுந்து சென்றது. கவனித்துப் பார்த்தால் அந்த இடத்தில் ஒரு

குறுகிய ஒற்றையடிப் பாதை போவது தெரியவரும். அந்தப் பாதை வழியாகக் குதிரை மிகவும் சிரமப்பட்டுக் கொண்டு தான் சென்றது. இரண்டு பக்கங்களிலும் நெருங்கி வளர்ந்திருந்த புதர்களும், கொடிகளும், மேலே கவிந்திருந்த மரக் கிளைகளும் குதிரை எளிதில் போக முடியாதபடி செய்தன. குதிரை மீதிரு ந்த வீரனோ அடிக்கடி குனிந்தும், வளைந்து கொடுத்தும், சில சமயம் குதிரையின் முதுகோடு முதுகாய்ப் படுத்துக் கொண்டும் மரக்கிளைகளி னால் கீழே தள்ளப்படாமல் தப்பிக்க வேண்டியிருந்தது. இத்தகைய பாதை வழியாகக் கொஞ்சதூரம் சென்ற பிறகு திடீரென்று சிறிது இடைவெளியும் ஒரு சிறு கோயிலும் தென்பட்டன. கோயிலுக்கெதிரே பிரம்மாண்டமான யானை, குதிரை முதலிய வாகனங்கள் நின்றதைப் பார்த்தால், அது ஐயனார் கோயிலாயிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம். வேண்டுதலுக்காக பக்தர்கள் செய்துவைத்த அந்த மண் யானை - குதிரைகளில் சில வெகு பழமையானவை. சில புத்தம் புதியவை. அவற்றின் மீது பூசிய வர்ணம் இன்னும் புதுமை அழியாமலி ருந்தது. பலிபீடம், துவஜ்தம்பம் முதலியவையும் அங்கு காணப் பட்டன.

கீழ்வானம் வெளுத்துப் பொலபொல வென்று பொழுது விடியும் சமயத்தில் மேற்சொன்ன வீரன் குதிரையின்மீது அங்கே வந்து சேர்ந்தான். வீரன் குதி ரையிலிருந்து கீழே குதித்து அவசர அவசரமாகச் சில அதிசயமான காரி யங்களைச் செய்யத் தொடங்கினான். மண் யானைகளுக்கும் மண் குதிரைக ளுக்கும் மத்தியில் தான் ஏறிவந்த குதிரையை நிறுத்தினான். குதிரைமீது கட்டியிருந்த ஒரு மூட்டையை எடுத்து அவிழ்த்தான். அதற்குள் இருந்த புலித் தோல், ருத்திராட்சம், பொய் ஜடாமுடி முதலியவைகளை எடுத்துத் தரித்துக் கொள்ளத் தொடங்கினான். சற்று நேரத் தில் பழைய போர் வீரன் உருவம் அடியோடு மாறி, திவ்ய தேஜஸுடன் கூடிய சிவ யோகியாகத் தோற்றம் கொண்டான்.

ஆம், வெண்ணாற்றங் கரையில் ரணகளத்தில் பார்த்திபனுக்கு வரம ளித்த சிவனடியார்தான் இவர். தம்மு டைய பழைய உடைகளையும், ஆபர ணங்களையும், ஆயுதங்களையும் மூட் டையாகக் கட்டி, உடைந்து விழுந்தி ருந்த மண் பானை ஒன்றின் பின்னால் வைத்தார் அந்தச் சிவயோகி. குதி ரையை ஒரு தடவை அன்புடன் தடவிக் கொடுத்தார். குதிரையும் அந்தச் சமிக் ஞையைத் தெரிந்து கொண்டது போல் மெதுவான குரலில் கனைத்தது. பிறகு அங்கிருந்து அச்சிவனடியார் கிளம்பி ஒற்றையடிப்பாதை வழியாகத் திரும் பிச் சென்று காவேரிக் கரையை அடை ந்தார். மறுபடியும் மேற்கு நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

ஒரு நாழிகை வழி நடந்த பிறகு சூரியன் உதயமாகும் தருணத்தில் இந் தச் சரித்திரத்தின் ஆரம்ப அத்தியா யத்தில் நாம் பார்த்திருக்கும் தோணித் துறைக்கு வந்து சேர்ந்தார். அங்கே படகோட்டி பொன்னனுடைய குடிசை க்கு அருகில் வந்து நின்று, "பொன்னா" என்று கூப்பிட்டார்.

உள்ளிருந்து "சாமியார் வந்திருக்கி றார் வள்ளி" என்று குரல் கேட்டது. அடுத்த விநாடி பொன்னன் குடிசைக்கு வெளியில் வந்து சிவனடியார்காலில் விழுந்தான். அவன் பின்னோடு வள்ளி யும் வந்து வணங்கினாள். பிறகு மூவ ரும் உள்ளே போனார்கள். வள்ளி பய பக்தியுடன் எடுத்துப்போட்ட மணையில் சிவனடியார் அமர்ந்தார். "பொன்னா! மகாராணியும் இளவரசரும் வசந்த மாளிகையில்தானே இருக்கிறார்கள்?" என்று அவர் கேட்டார். "ஆம் சுவாமி! இன்னும் கொஞ்ச நாளில் நமது இளவரசரையும் "மகாராஜா" என்று எல்லோரும் அழைப்பார்களல்லவா?"

"ஆமாம் எல்லாம் சரியாக நடந் தால், நீ உடனே போய் அவர்களை அழைத்துக்கொண்டு வா!" என்றார் சிவனடியார். "இதோ போகிறேன், வள்ளி சுவாமியாரைக் கவனித்துக் கொள்!" என்று சொல்லிவிட்டுப் பொன்னன் வெளியேறினான். சிறிது நேரத்திற்கெல்லாம் படகு தண்ணீரில் போகும் சலசலப்புச் சத்தம் கேட்கத் தொடங்கியது.

## 02. வம்புக்கார வள்ளி

பொன்னன் போனதும், வள்ளி சிவ னடியாருக்கு மிகுந்த சிரத்தையுடன் பணிவிடைகள் செய்யத் தொட ங்கினாள். அவருடைய காலை அனு ஷ்டானங்கள் முடிவடைந்ததும், அடுப்பில் சுட்டுக் கொண்டிருந்த கம்பு அடையைச் சுடச்சுடக் கொண்டுவந்து சிவனடியார் முன்பு வைத்தாள். அவர் மிக்க ருசியுடன் அதைச் சாப்பிட்டுக் கொண்டே வள்ளியுடன் பேச்சுக் கொடு த்தார். "வள்ளி! ராணி எப்படி இருக்கிறாள், தெரியுமா?" என்று கேட் டார் சிவனடியார். "இளவரசர் பக்கத் தில் இருக்கும்போதெல்லாம் தேவி தைரியமாகத்தான் இருக்கிறார். அவர் அப்பால் போனால் கண்ணீர் விடத் தொடங்கி விடுகிறார்" என்றாள் வள்ளி. பிறகு, "சுவாமி! இதெல்லாம் எப்படித் தான் முடியும்? இளவரசர் நிஜமாக மகாராஜா ஆகிவிடுவாரா? அவருக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், ராணி பொறு க்க மாட்டாள் உயிரையே விட்டு விடுவார்" என்றாள்.

"எனக்கென்ன தெரியும் அம்மா! கடவுளுடைய சித்தம் எப்படியோ அப்படித்தான் நடக்கும். உனக்குத் தெரிந்தவரை ஜனங்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்?" "ஜனங்கள் எல்லோரும் இளவரசர் பக்கந்தான் இருக்கிறார்கள். பல்லவ அதிகாரம் ஒழிய வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறார்கள். பார்த்திப மகாரா ஜாவின் வீரமரணத்தைப்பற்றித் தெரி யாத பிஞ்சுக் குழந்தைகூடக் கிடை யாது. சுவாமி! அந்தச் செய்தியைத் தாங்கள் தானே ஆறு வருஷத்துக்கு முன்னால் எங்களுக்கு வந்து சொன்னீர் கள்? அதை நானும் ஓடக்காரரும் இது வரையில் லட்சம் ஜனங்களுக்காவது சொல்லியிருப்போம்" என்றாள்.

"நானும் இன்னும் எத்தனையோ பேரிடம் சொல்லியிருக்கிறேன். இருக் கட்டும். மாரப்ப பூபதி எப்படியிருக்கி றான்? இப்போது உன் பாட்டனிடம் ஜோஸியம் கேட்க அவன் வருவது ண்டா?" என்று கேட்டார் சிவனடியார்.

"ஆகா! அடிக்கடி வந்துகொண் டுதானிருக்கிறான்" என்றாள் வள்ளி.

உடனே எதையோ நினைத்துக் கொண்டவள் போல் இடி இடி என்று சிரித்தாள். சிவனடியார் "என்னத்தைக் கண்டு அம்மா இப்படிச் சிரிக்கிறாய்? என்னுடைய மூஞ்சியைப் பார்த்தா?" என்றார்.

"இல்லை சுவாமி! மாரப்ப பூபதியின் ஆசை இன்னதென்று உங்களுக்குத் தெரியாதா? காஞ்சி சக்கரவர்த்தியின் மகளை இவன் கட்டிக் கொள்ளப் போகிறானாம்! கல்யாணத்துக்கு முகூர்த்தம் வைக்க வேண்டியது தான் பாக்கி" என்றாள். சிவனடியார் முகத்தில் ஒரு விநாடி நேரம் இருண்ட மேகம் படர்ந்தது போல் தோன்றியது. உடனே அவர் புன்னகையை வருவித்துக் கொண்டு "ஆமாம் உனக்கென்ன அதில் அவ்வளவு சிரிப்பு?" என்று கேட்டார். "சக்கரவர்த்தியின் மகள் எங்கே? இந்தப் பேதை மாரப்பன் எங்கே? உலகத்தில் அப்படி ஆண் பிள்ளைகளே அற்றுப் போய்விடவில்லையே. நரசிம்ம பல்லவரின் மகளை இந்தக் கோழைப் பங்காளிக்குக் கொடுப்பதற்கு?" என்றாள் வள்ளி.

"ஆனால், உன் பாட்டன்தானே மாரப்பனை இப்படிப் பைத்தியமாய் அடித்தது வள்ளி, இல்லாத பொல்லாத பொய் ஜோசியங்களையெல்லாம் சொல்லி?" என்றார் சிவனடியார். "அப்படிச் சொல்லியிராவிட்டால், அந்தப் பாவி என் பிராணனை வாங்கியிருப்பான் சுவாமி! போகட்டும் சக்கரவர்த்தியின் குமாரி ரொம்ப அழகாமே, நிஜந்தானா! நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று வள்ளி ஆவலுடன் கேட்டாள்.

"சிவனடியார் புன்னகையுடன் பார்த்திருக்கிறேன் அம்மா, பார்த்திருக்கிறேன். ஆனால் அழகைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? நான் துறவி!" என்றார். "எங்கள் ராணியை விட அழகாயிருப்பாளா? சொல்லுங்கள்."

"உங்கள் ராணி அவ்வளவு அழகா என்ன?" "எங்கள் ராணியா? இல்லை! இல்லை! எங்கள் ராணி அழகேயில்லை. சுத்த அவலட்சணம், உங்கள் சக்கரவர்த்தி மகள்தான் ரதி..." "என்ன வள்ளி, இப்படிக் கோபித்துக் கொள்கிறாய்?" "பின்னே என்ன? எங்கள் ராணியை நீங்கள் எத்தனையோ தடவை பார்த்திருந்தும் இப்படிக் கேட்கிறீரகளே? அருள்மொழித் தேவியைப் போல் அழகானவர் இந்த ஈரேழு பதினாலு உலகிலும் கிடையாது...."

"நான்தான் சொன்னேனே, அம்மா! ஆண்டியாகிய எனக்கு அழகு என்ன தெரியும். அவலட்சணந்தான் என்ன தெரியும்?"

"உங்களுக்குத் தெரியாது என்றுதான் தெரிகிறதே! ஆனால் காஞ்சி சக்கரவர்த்தியை எப்போதாவது பார்த்தால் கேளுங்கள் அவர் சொல்லுவார். அருள்மொழித் தேவிக்கும் பார்த்திப மகாராஜாவுக்கும் கலியாணம் ஆவதற்கு முன்னால் நடந்த செய்தி உங்களுக்குத் தெரியுமா? அருள் மொழித் தேவியின் அழகைப் பற்றி நரசிம்மவர்மர் கேள்விப்பட்டு "அருள்மொழியைக் கல்யாணம் செய்து கொண்டால் செய்து கொள்வேன் இல்லாவிட்டால் தலையை மொட்டையடித்துக் கொண்டு புத்த சந்நியாசியாகப் போய் விடுவேன்" என்று பிடிவாதம்

செய்தார். ஆனால் அருள்மொழித் தேவிக்கு அதற்கு முன்பே பார்த்திப மகாராஜாவுடன் கலியாணம் நிச்சயமாகி விட்டது. இன்னொரு புருஷனை மனதினால்கூட நினைக்கமாட்டேன் என்று கண்டிப்பாய்ச் சொல்லி, கடைசியில் பார்த்திப மகாராஜாவையே கலியாணம் செய்து கொண்டார்."

சிவனடியார் முகத்தில் மந்தகாசம் தவழ, "ஆமாம் அம்மா! நரசிம்மவர்மர் அப்புறம் என்ன செய்தார்? தலையை மொட்டை அடித்துக்கொண்டு பௌத்த பிக்கு ஆகிவிட்டாரா?" என்று கேட்டார்.

"ஆண் பிள்ளைகள் சமாசாரம் கேட்க வேண்டுமா? சுவாமி! அதிலும் ராஜாக்கள், சக்கரவர்த்திகள் என்றால் மனது ஒரே நிலையில் நிற்குமா? அப்புறம் அவர் பாண்டிய ராஜகுமாரியைக் கல்யாணம் செய்து கொண்டார். இன்னும் எத்தனை பேரோ, யார் கண்டது? நான் மட்டும் ராஜகுமாரியாய்ப் பிறந்திருந்தால் எந்த ராஜாவையும் கலியாணம் செய்து கொள்ளமாட்டேன். அரண்மனையில் பத்துச் சக்களத்திகளோடு இருப்பதைக் காட்டிலும், கூரைக் குடிசையில் ஒருத்தியாயிருப்பது மேலில்லையா?" சிவனடியார் கலகலவென்று சிரித்தார்.

"நீ சொல்வது நிஜந்தான், அம்மா! ஆனால் நரசிம்மவர்மன் நீ நினைப்பது போல் அவ்வளவு பொல்லாதவனல்ல..." என்றார்.

"இருக்கட்டும் சுவாமி! அவர் நல்லவராகவே இருக்கட்டும். அவர்தான் உங்களுக்கு ரொம்ப வேண்டியவர் போலிருக்கிறதே! ஒரு காரியம் செய்யுங்களேன்? சக்கரவர்த்தியின் மகளை எங்கள் இளவரசருக்குக் கலியாணம் செய்து வைத்து விடுங்களேன்! சண்டை, சச்சரவு எல்லாம் தீர்ந்து சமாதானம் ஆகிவிடட்டுமே."

"நல்ல யோசனைதான் வள்ளி! ஆனால் என்னால் நடக்கக்கூடிய காரியம் அல்ல. நீ வேண்டுமானால் சக்கரவர்த்தியைப் பார்த்துச் சொல்லேன்...."


"நான் சக்கரவர்த்தியை எப்போதாவது பார்த்தால் நிச்சயமாய்ச் சொல்லத்தான் போகிறேன் எனக்கு என்ன பயம்?" என்றாள்.

அச்சமயத்தில் படகு கரைக்கு வந்து சேர்ந்த சத்தம் கேட்டது. வள்ளி, "படகு வந்துவிட்டது" என்று சொல்லிக் கொண்டு குடிசைக்கு வெளியே வந்தாள்.

*-கனவு தொடரும்...*

---

**கலிகோ பூனை** (Calico Cat)



வட அமெரிக்காவில் காணப்படும் ஒரு வகைப் பூனை. உடலில் பட்டைகள் அல்லது புள்ளிகள் கொண்ட வளர்ப்புப் பூனை இனம். வெள்ளை நிற உடலில் பெரும்பாலும் கறுப்பு, சிவப்பு நிறப் பட்டைகள் அல்லது புள்ளிகளைக் கொண்டிருக்கும். இந்தப் பூனைகளின் மேற்தோல் மரபியல் நிர்ணமயமானது. பாலினப் பண்புக் காரணியுடன் பிணைக்கப்பட்டுள்ளதால் ஏறத்தாழ எல்லா கலிகோ பூனைகளும் பெண் இனங்களாகவே காணப்படுகின்றன.

என் மெய்யினை உனக்கு
மெத்தையாக்கி,
என் மார்பினை உனக்கு
தலையணையாக்கி,
என் கைகளை உனக்கு
சாமரம் வீசி,
போர்வை...?
உனக்கெதற்குப்
போர்வை...!!?
அதுதான்,
நானிருக்கேனே கண்ணா..!!!

கண்மணி,
நீராடி மீண்டு வந்த
உன்
நீள் கூந்தல்
சிந்தும் துளிகளில்,
என் விழிகள்
தெறித்ததடி..!
வீணான பொழுதுகளாய்
உனை
காணாத கணங்களெல்லாம்,
கண்ணீரில் கரைந்ததடி..!

ம்ம்ம்...
வார்த்தைகளில் மட்டும்தான்
நீ
வானவில் காட்டுகிறாய்...
நடைமுறை என்னவோ
பாலைவெளிதான்...!
உணர்வுகளின் மென்மை
புரியாதவனே,
உனக்குள்ளும் பூக்கும்
காதல் பூ என
காத்திருக்கிறேன்...!

அடி பாதகி...
பூத்த காதலால்தானேயடி
பூதமாய் காக்கிறேன்
உன்னை..!
விழுதுவிட்ட அன்பால்தானேயடி
இழந்துவிட்டேன்
என்னை..!
இன்னமும் புரியலையா
இந்த
அம்பிகாபதியின்
அமரக் காதல்...!?



—சிபி—

# ...ாதல் பித்து...

என்னவனே,
என் கூந்தலில் சொட்டும்
துளியை
நிலத்தில் சிந்தவிடேன் அன்பே...
ஏனெனில் அது
என்னவன் கண்களல்லவா...!?
உன்
கண்ணீர் துளிகள் மட்டும்
என்ன சொல்கின்றனவாம்...?
நீ கண்ணீர் வடித்தால்
நானல்லவா கரைந்து விடுவேன்...
உன்
கண்களுக்குள் இருக்கும் என்னை
கரைத்துவிடாதே அன்பே...!

போதுமடி பொல்லாப்பு...
என்னுள் வந்தவளின்
எண்ணங்கள்,
எனக்குத் தெரியாதா...?
கண்ணுள்
இருப்பதாய் சொல்லும்
புரட்டுக்கள் புரியாதா..!?
ஆனாலும்,
கொண்ட தாபத்திற்காய்
உனை
கொள்முதல் செய்தேனடி...
கண்ட நாள் முதல்
உன்
தாள்தொட்டுப் பணிந்தேனடி..!

சுப் பையா...
ன்டுவதென்பது
னக்குமட்டுமே உரித்தான
போக உரிமையா என்ன..?
துதான்,
ண்டிப் பார்த்தேன் என்
ாழனை...!
ாண்டிப் பார்த்தேன் நம்
தலை...!

ராட்சசி...
என் காதலை
காணவில்லையென நீ
சொன்ன கணம்,
தேகமெங்கும் வியர்வை முத்து...
வெறும் சீண்டலென நீ
சொன்னபின்தான்,
தெளிந்ததடி காதல் பித்து..!!!

# நொக்கியாவின் புதிய நட்புறவு இணையத்தளம்

இன்று வழக்கமான இணையத்தள வடிவங்களைப் பின்னுக்குத் தள்ளி உலகம் முழுவதும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு நட்புறவுகளை உலக அளவில் பெருக்கமடையச் செய்யும் சோஷியல் நெட்வேர்க்கிங் இணையத்தளங்கள் பெரிதும் வளர்ந்து வருகின்றன.




மை ஸ்பேஸ், ஓர்குட், ஃபேஸ் புக் போன்ற நட்புறவு வளர்ப்பு இணையத் தளங்கள் கடும் போட்டியில் இறங்கியுள்ளன.

இந்தப் போட்டியில் நொக்கியா இறங்காவிட்டாலும், அதிக விளம்பரம் இல்லாமல் மோஷ்.நொக்கியா.கொம் (mosh.nokia.com) என்ற இணையத்தளத்தை அறிமுகம் செய்துள்ளது. செல்பேசிகளிலிருந்தே இந்த இணையத் தளத்திற்கு செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது வளர்ந்து வரும் செல்பேசி வர்த்தகத்திற்கு மேலும் வலு சேர்க்கும் வண்ணம் இணையதளத்துறையிலும் நுழைந்துள்ளது நொக்கியா. இதில் ஒன்றும் புதிதில்லை என்றாலும் வழக்கம் போல பொருளடக்கங்களை உங்கள் நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ளலாம். ஓடியோ மற்றும் வீடியோ மட்டுமல்லாது கணினி நிரல்கள் (Computer Program) மற்றும் ஆவணங்களும் இதில் உள்ளன.

இதுவரை இந்த இணையத்தளத்தை நொக்கியா விளம்பரம் செய்யவில்லை. ஒவ்வொருவரும் தனக்கு தெரிந்தவர்களிடம் இதுபற்றி கூறுவது என்ற வாய்மொழி தொடர்புகளில் மட்டுமே மோஷ். நொக்கியா.கொம் பிரபலமடைந்து வருகிறது. ஆனால் இதுவரை 60 லட்சம் பேர் இந்த இணையத்தளத்திற்கு வருகை தந்து படங்கள், இசை மற்றும் பிற பயனாளர்கள் எழுதிய கணினி நிரல்கள் ஆகியவற்றை டவுன்லோட் செய்துள்ளனர்.

தற்போது பயனாளர்களே உற்பத்தி



செய்யும் பொருளடக்கங்கள் என்ற ஒரு விஷயம் மெகா ஹிட்டாகியுள்ளது. மை-ஸ்பேஸ், ஃபேஸ் புக் மற்றும் சில சோஷியல் நெட் வேர்க்கிங் தளங்கள் செல்பேசியையும் பயன்படுத்துவதால் இதில் கிடைக்கும் வருவாய் பெருமளவு உயரும் என்று சந்தை நிலவரங்கள் தெரிவிக்கின்றன.

இதனை கருத்தில் கொண்டுதான் நொக்கியா, செல்பேசியில் அணுகக் கூடிய இணையத்தளத்தை அறிமுகம் செய்துள்ளது. இந்த மோஷ்.நொக் கியா.கொம் இணையத்தளத்தை கணி னியிலும் காணமுடியும்.

இந்தியாவிலிருந்து இந்த இணையத் தளத்திற்கு செல்பேசிகள் மூலம் செல்பவர்கள் அதிகம் என்று நொக் கியா கூறியுள்ளது. ரஷ்யா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகியன வரிசையில் அடுத்ததாக உள்ளன.பழைய மொடல் செல்பேசிகளிலிருந்தே நிறைய பேர் மோஷ் இணையத்தளத்திற்கு வருகை தருகின்றனராம்.

இந்த பலத்த வரவேற்பை கண்டு உற்சாகமடைந்துள்ள நொக்கியா நிறு வனம் இன்னும் பல முயற்சிகளில் களமிறங்கி மற்ற நிறுவனங்களை பின் னுக்குத் தள்ள தீவிரமான செயல் திட் டங்களை வைத்துள்ளதாகத் தெரிகி றது.

செல்பேசி தயாரிப்பு நிறுவனங்களும், சோஷியல் நெட்வேர்க்கிங் தளங்களும் நொக்கியாவின் அதிரடி வழி முறைக ளுக்கு இணையாக என்ன செய்யப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

*-ஆரபி*

## கணினிகளை வாங்க உதவும் இணையத்தளம்

கணினி ஒன்றை நாம் வாங்க நினைக்கிறோம் என்றால், இருக்கும் அனைத்து கணினிகளில் சிறந்தது எது? யார் சிறந்த டீலர்? எந்த கணினி விலை குறைவாக நல்ல தரத்துடன் கிடைக்கிறது? என்றெல்லாம் குழப்பம் ஏற்படுவது சகஜம்.

நமது குழப்பங்களை போக்க வாடிக்கையாளர்களுக்கென்றே பிரத்தி யேகமாய் இயங்கிவருகிறது மைரைட் பிசி.கொம் (myrightpc.com). இது மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் புதிய நுகர்வோர் வழிகாட்டி இணையத்தள மாகும்.



நமது தேவை மற்றும் பயன்பாடு ஆகியவற்றிற்கு பொருந்தும் சிறந்த கணினிகளை நமக்காக தேர்ந்து கொடுக்கிறது இந்த இணையத்தளம்.

மிகவும் எளிய முறையில் தகவல் களை பெறும் விதமாக இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டுள் ளது. இதன் இன்ரபேஸ் நமக்கு சரியான விண்டோஸ் விஸ்டா ஒபரேட் டிங் சிஸ்டத்துடன் ஹார்ட்வெயார் வடி

வமைப்பையும் புலப்படுத்துவதாய் உள்ளது.

உங்கள் கணினியை தேர்வு செய் துகொள்ள சரியான டீலரைத் தேர்வு செய்து, நீங்கள் விரைவில் முடி வெடுக்க உதவுகிறது.

எனவே நீங்கள் கணினி வாங்க




முடிவு செய்துவிட்டீர்கள், ஆனால் எந்த கணினி, எங்கே கிடைக்கும், எப்படி வரவழைப்பது போன்ற பிரச்சனைகளை தீர்க்க மைரைட்பிசி.கொம் உங்களுக்கு பெரிதும் உதவும்.

அதாவது நீங்கள் செய்யவேண்டியது இதுதான், இந்த இணையத் தளத்தில் லொக் ஒன் செய்து சில எளிய கேள்விகளுக்கு விவரங்களை சமர்ப்பிக்கவும். உடனே உங்களுக்கு தேவையான கணினியின் விவரங்கள் கிடைக்கும்.

சரி! கணினி விலை பட்ஜெட்டை கடந்துவிட்டால் என்ன செய்வது என்று யோசிக்கிறீர்களா? உங்களுக்கு ஏற்ற வாறான கணினியை பரிந்துரை செய்யும் இந்த இணையத்தளம் அந்த கணினியின் விலையையும் குறிப்பிடும். இதற்காகவென்றே விலைப்பட்டி ஒன்று இந்த இணையத்தளத்தில் கொடுக்கப் பட்டுள்ளது.

அதாவது விலை ரூ.50,000 நமக்கு கட்டுப்படியாகவில்லையெனில், விலைப் பட்டியை ஸ்க்ரோல் செய்து உங்கள் பட்ஜெட்டிற்கு ஏற்ற தொகையை நீங்கள் கிளிக் செய்து பார்க்கலாம். ரூ.30,000தான் உங்கள் பட்ஜெட் என்றால் அதற்கு ஏற்ற அம்சங்கள் உள்ள கணினியை உங்களுக்கு பரிந்துரை செய்யும்.

உங்களிடம் ஏற்கனவே கணினி உள்ளது என்றால், அதனை மேம்படுத்தவும் அல்லது புதிய ஒபரேட்டிங் சிஸ்டம் தேவைப்படுகிறது என்றாலும் உங்களுக்கு மைரைட்பிசி.கொம் பரிந்துரைகளை வழங்குகிறது. ஹார்ட்வெயார் மற்றும் சொப்ட்வெயார் எதுவாக இருந்தாலும் உங்களுக்கு ஏற்ற ஆலோசனைகளையும் விவரங்களையும் இந்த இணையத்தளம் வழங்குகிறது.

# புதிரோ புதிர்-04

**A** நண்பரொருவர் தன் மகனிற்கு பரிசாக தூண்டிலொன்றை அனுப்பி வைக்க விரும்பினார். அதனால் தூண்டிலை வாங்கி அப்படியே பொதியாக்கி தபால் நிலையத்துக்குக் கொண்டு போனார். அங்கே பொதியை வாங்கி நீளத்தை அளந்து பார்த்தார்கள். அது 4 அடி 1 அங்குலம் நீளம் இருந்தது. உடனே தூண்டிலை திருப்பிக்கொடுத்துவிட்டு, 4 அடிக்குமேல் அதிகமாக இருக்கும் எந்தப் பொருளையும் பொதியில் எடுக்க எமது தபால் துறை அனுமதிப்பதில்லை என்று கூறிவிட்டார்கள்.

நண்பரிற்கு ஒரே ஏமாற்றம். எப்படியும் அந்தத் தூண்டிலை அனுப்பியே ஆகவேண்டும் என்று சிந்தனை செய்தார். ஒரு வழி புலப்பட்டது. அதன்படி மறுபடியும் பொதி செய்துகொண்டுபோய் கொடுத்தார். அவர்கள் இம்முறையும் அளந்து பார்த்தார்கள். திருப்தி அடைந்து அனுப்ப எடுத்துக்கொண்டார்கள்.

நண்பர் தூண்டிலை மடக்கவில்லை. வெட்டி நீளத்தைக் குறைக்கவில்லை. இருந்தாலும் அனுப்ப எடுத்துக்கொண்டார்கள். அது எப்படி?

**B** ஒரு கண்ணாடி போத்தல், உருளை வடிவத்தில் பெரியதாக பீப்பாய் போல உள்ளே நீருடன் இருக்கிறது. மேல் மூடி இல்லை.

போத்தலில் இருக்கும் நீரை வெளியே எடுக்கக்கூடாது. வேறு எந்த அளவுகோலையும் உள்ளே விடக்கூடாது. வெளியில் இருந்தும் அளவுகோல் கொண்டு அளக்கக் கூடாது. ஆனால், போத்தலினுள் நீர் பாதிக்கு மேல் உள்ளதா? சரி பாதியாக உள்ளதா? அல்லது பாதிக்கும் குறைந்தளவு உள்ளதா? என எப்படி சரியாக நிரூபிப்பது?

## புதிரோ புதிர் – 03 விடைகள்

**A.** ஓட்டுனர் கீழே இறங்கி வாகனத்தின் எல்லா சக்கரங்களினதும் காற்றை ஊர்தி 1 அங்குலம் பதியுமளவிற்கு குறைத்துவிட்டு ஓட்டிச் சென்றான்.

**B.** ஐயோ, மகனே எனக்கதறிய மருத்துவர் அந்தப் பையனின் தாயார்.

சென்றமுறைப் புதிருக்கான சரியான விடைகளை வாசகர்கள் எவருமே அனுப்பிவைக்கவில்லை. இம்முறையாவது வெற்றிபெற வாழ்த்துக்கள். வெற்றிபெறும் போட்டியாளர்களிற்கு 3 மாத வேடிக்கை இதழ்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் விடைகளிற்கான முடிவுத் திகதி : **20.12.2007**

முகவரி: **198, 1st Floor, Galle Road, Dehiwela, Colombo.**

● கிறிஸ்மஸ் சிறப்பு நாடகம

# கிறிஸ்மஸ் தாத்தா!

பிரதியாக்கம் : செந்தூரன்

பாத்திரங்கள்: கிறிஸ்மஸ் தாத்தா(கி.தா.), கொன்சி (கி.தா. வின் மனைவி), இன்ஸ்பெக்டர்(இன்ஸ்),வினி, எட்வின்.

## காட்சி - 1

(கி.தா, கொன்சி)

கி.தா.: (பாடும் பாணியில்) வந்திட்டேன். கிறிஸ்மஸ் தாத்தா வந்திட்டேனே! தந்திட்டேன், பரிசு பல தந்திட்டேன்! என் செல்லக் குழந்தைகளே! உள்ளம் கொள்ளை கொண்டவரே! கிறிஸ்மஸ் தாத்தா உங்களுக்காக பாட்டுப் பாடிடுவேன்! லலலல்லாலா லலல்லாலா லாலா லாலா. ........

கொன்சி: (கைதட்டி) வெரிகுட்! வெரிகுட்! அப்ப ப்ரக்டிஸ் பண்ணத் தொடங்கீற்றீங்கள், என்ன?

கி.தா.: ஓம் கொன்சி! (மூச்சு வாங்கி) து...துள்ளிதுள்ளிக்குதிச்சு ஆடேக்க இப்ப கொஞ்சம் களைக்குது! முந்தி மாதிரி இல்லை. போன கிறிஸ்மஸ்சுக்கும், இந்த கிறிஸ்மஸ்சுக்கும் இடையில அவ்வளவு வயது போயிற்றுதாவெண்டு யோசிக்கிறன்.

கொன்சி: எல்லாம் உங்கட நினைவு! எனக்கெண்டா 15, 20 வருசத்துக்கு முந்தி நீங்கள் எப்படி கிறிஸ்மஸ் தாத்தாவா ஒரு கலக்கு கலக்குவீங்களோ அதே போலத்தான் கிடக்குது.

கி.தா.: ம்.....என்னில இருக்கிற பச்சம் உன்ர பார்வையையும் குழப்புது போல. 20 வருசத்துக்கு முந்தி எனக்கு 40 வயது! இப்ப 62 முடிஞ்சுது. கிழவன் உண்மையிலேயே தாத்தா வாயிற்றன். என்ன, குண்டா இருக்கிற என் உருவம் மட்டும் அப்பிடியே இருக்குது. நீ 20 வருசத்துக்கு முந்தியெண்டவுடன எனக்குப் பழைய ஞாபகங்கள் வருகுது. அப்ப எங்கட ஊர்ல கிறிஸ்மஸ் எப்பிடிச் சந்தோசமா இருக்கும்..?

கொன்சி: (பெருமூச்சு) ஓமப்பா! அப்ப டிசம்பர் மாசம் பிறந்தாலே ஒரே கொண்டாட்டம்தான்! வீட்டையெல்லாம் சோடிச்சு, சேர்ச்சுக்குப்போய் சேர்ச் ஆட்களோட கிறிஸ்மஸ்சுக்கு செய்கிற வேலையள் பற்றி அடிக்கடி கூட்டம் எல்லாம் வைச்சு, சூசை அண்ணை குடும்பம், மேரியக்கா எல்லாரும் வீட்ட ஒரு கிழமைக்கு முதல்லயே வந்து நிண்டு... ம்... அதுகளைப் பற்றி நினைக்கிறதே சந்தோசமானதுதான்.

கி.தா.: எல்லாத்தையும் விட சந்தோசம் அப்ப டேவிட்டும் எங்களோட இருந்தான். டிசம்பர்ல அவனுக்கு ஸ்கூல் லீவு. முழுநேரமும் கிறிஸ்மஸ் சந்தோசத்தில துள்ளிக் கொண்டிருப்பான். அந்த வயசிலேயே நல்லா ஈர்க்கு வாணம் கொளுத்துவான். கொன்சி... கொன்சி... என்ன..?

கொன்சி: இல்லை! ஒண்டுமில்லை.

கி.தா.: என்ன டேவிட்டின்ர ஞாபகம் வந்திட்டுதா?

கொன்சி: மறந்தாத்தானே ஞாபகம் வாறத்துக்கு! என்ர மகன், என்ர செல்லம் எப்பவும் என்ர மனசில இருக்கிறான் இப்படி விட்டிட்டுப் பொயிற்றானே?

கி.தா.: கொன்சி ஏதோ சின்னப் பிள் ளைப் புத்தியில எங்கள விட்டிட்டுப் போனாலும் அவனும் அடிக்கடி எங்களை நினைப்பான். கர்த்தர் அவனுக்கு ஒரு குறையும் வைக்கமாட்டார். டேவிட் நல்லாயிருப்பான்.

கொன்சி: சாப்பாட்டுக்கும் கஸ்ரப்பட்டு, வசதியில்லாம இருக்கேக்கதானே அந்தக் கஸ்ரத்தைத் தாங்க ஏலாம டேவிட் ஓடிப் போனவன்.

கி.தா.: சரி சரி, அவன் போய் 6 வருசமாயிற்று! வேற கதைப்பம்.!

கொன்சி: 6 வருசமாகியும் எங்கட வறுமை மட்டும் அப்பிடியேதான் இருக்குது. ம் ... (பெருமூச்சு)

கி.தா.: கொன்சி, கர்த்தர் எங்கட வீடெல்லாம் நிறைஞ்சிருக்கிறார். அவரில நாங்கள் வைச்சிருக்கிற நம்பிக்கை அவற்ர இரக்கத்தையும், சாந்தத்தையும் அவற்ர மகிமையையும், நம்பிக்கையையும் எங்களுக்கு எப்பவுமே தரும் எண்டெல்லாம் அடிக்கடி சொல்லுற நீயா இப்படிக் கதைக்கிறாய்?

கொன்சி: மனசு பொறுக்குதில்லை! நெஞ்சை அடைக்கிற மாதிரிக் கவலையாய்க் கிடக்குது!

கி.தா.: அப்பிடி என்னம்மா கவலை?


கொன்சி: உங்களை நினைச்சுத்தான்! எனக்குத் தெரிஞ்சு 30 வருசமா கிறிஸ்மஸ் தாத்தாவா வேஷம் போடுறியள்.

கி.தா.: சின்னத் திருத்தம்! 33 வருசம் முடிஞ்சுது.

கொன்சி: சரி, 33 வருசம்! ஏனோ அதை நினைக்கக் கவலையா இருக்கு!

கி.தா.: (சிரித்து) உனக்கு ஏதோ நடந்திட்டுது. இதில என்ன கவலை? 33 வருசமா எத்தனை இடங்களில் வாழ்ந்திருக்கிறம்! அத்தனை இடங்களிலும் நடக்கிற கிறிஸ்மஸ் பாட்டிக்கு நான்தான் கிறிஸ்மஸ் தாத்தா எண்டிறது எவ்வளவு சந்தோசமான விஷயம். நீ தான் கிறிஸ்மஸ் பாட்டி! ஏண்டி அப்பிடிப் பார்கிறாய்? 33 வருசமில்லை கொன்சி, 50 வருசம் கிறிஸ்மஸ் தாத்தாவா இருப்பன்! குட்டிக் குட்டிப் பிள்ளையளை எல்லாம் சந்தோசப் படுத்திறது எவ்வளவு பெரிய விஷயம்?

கொன்சி: அது சரிதான்! ஆனா மற்றவைய சந்தோசப் படுத்திற எங்களுக்கு மிஞ்சினது பசியும், பட்டினியும் தான்! பாசம் வைச்ச பிள்



ளையும் எங்களோட இல்லை.

கி.தா.: கொன்சி, நான் உனக்கு அடிக்கடி சொல்லியிருக்கிறன்! கர்த்தருக்கு ஏத்தி வைக்கிற மெழுகுதிரிதான் நான்! என்ர தொழிலா, சேர்ச்சில மெழுகுதிரி விக்கிற நான் சந்தோசமாச் செய்யிறதும் அதாலதான். கர்த்தர் என்னை இந்த உலகத்துக்கு அனுப்பினது எல்லா மக்களையும் சந்தோசப்படுத்தத்தான்.

இயேசுவின்ர நாமத்தில நான் நம்பிக்கையோட இருக்கிறன். பைபிளில என்ன சொல்லியிருக்கு? இயேசுவின்ர நாமத்தில் மதிப்பும் பயமும் கொண்டவர்களுக்கு மேல் நிச்சயம் நீதியென்ற சூரியன் உதிப்பான். கவலைகள் விலகும். ஆரோக்கியம் கூடும். எண்டெல்லாம் இருக்கெல்லோ?

கொன்சி: ம்... இருக்கு! கிறிஸ்துவில நாங்கள் கொண்ட விசுவாசத்திற்கு நிச்சயம் ஒரு நாள் எங்கட கவலையள் விலகும்! அந்த நம்பிக்கை இருக்கு!

கி.தா.: ஆ.. பிறகென்ன? போனமுறை நான் 4 கிறிஸ்மஸ் பாட்டிகளில வேஷம் போட்டன். இந்த முறை அந்த நாலோட இன்னும் 2 கூடியிருக்குது! கொழும்பில பெரிய கிளப் ஆட்கள் தங்கட கிறிஸ்மஸ் பார்ட்டியில தாத்தாவா வர வேணும் எண்டு சொல்லிக் கேட்டிருக்கிறாங்கள். அந்தக் கிளப்பில செக்ரட்டரியா இருக்கிறவர் போனமுறை எங்கட சேர்ச் சொஸைட்டி கிறிஸ்மஸ் பாாட்டியில என்னைப் பார்த்திருக்கிறார். இனி நீங்கள்தான் எங்கட கிறிஸ்மஸ் தாத்தா எண்டு மனுசன் ஒற்றைக் காலில நிக்குது. எவ்வளவு சந்தோசமா இருக்குது சொல்லு பாப்பம்?

கொன்சி: அப்ப கொழும்பு போக வேணுமே?

கி.தா.: ஓம்!! அவையள் வாகனம் எல்லாம் ஒழுங்கு பண்ணிக் கூட்டிக் கொண்டு பொயிற்றுக் கொண்டு வந்து விடுவினம்! ஆனா ஒரு சின்னப் பிரச்சினை இருக்குது.

கொன்சி: என்ன பிரச்சினை ?

கி.தா.: என்ர பூட்ஸ் தான் பிரச்சினை. அது சரியாப் பழுதாப்போச்சுது. முன்பக்கம் கிழிஞ்சிட்டுது. போனமுறையே மாத்தியிருக்க வேணும். தைச்சுப்போட்டு சமாளிச்சிட்டன். இந்த முறை அதைப்போட ஏலாது. அதுவும் அவ்வளவு பெரிய ஆட்கள் வாற அந்தப் பார்ட்டியில போட்டா நல்லா இருக்காது.

கொன்சி: ஓமோம்! அது கட்டாயம் செய்ய வேணும். அதோட உங்கட மேற்சட்டையிலும் ஒரு கிழியல் கிடக்குது.

கி.தா.: அது தைச்சிட்டன்., மூட்டைய வைச்சு மறைச்சிடலாம்! ஆனா பூட்ஸ் தான் எப்படியாவது மாத்தவேணும்!

கொன்சி: இப்படிச் செய்யலாமே...

கி.தா.: எப்படி?

கொன்சி: கொழும்பில நடக்கிற பார்ட்டி பிறகுதானே வருகுது! முதல்ல இங்க நடக்கிற பார்டிகளில வாற காசை வைச்சு பூட்ஸை வாங்குங்களன்!

கி.தா.: (தனக்குள்) அந்தக் காசை வைச்சுத்தானே உனக்கு கிறிஸ்மஸ் பரிசா ஒரு சாறி வாங்கித் தாற பிளானில இருக்கிறன். அந்தப் பிளானை எப்படி மாத்த ஏலும்? மொக்கு!

கொன்சி: என்ன யோசிக்கிறீங்கள்? அப்பிடிச் செய்யலாம் தானே?

கி.தா.: அ... (தடுமாறி) இல்லை. அது சரிப்பட்டு வராது...ம்...பார்ப்பம்!

கொன்சி: இப்பதான் ஞாபகம் வந்திது! இவன் பக்கத்து வீட்டுப் பெடியன் எட்வினுக்கு ஏதோ நல்ல வேலை கிடைச்சிருக்காம்! அவையிட்டக் கேட்டா என்ன? கடனாத்தான்!

ஜென் கதை

## பதிலா? உயிரா?

ஒரு நாள் எல்லோராலும் உயர்வாக கொண்டாடப்பட்ட ஆசிரியர் ஷிஷைன் தன்னுடைய சீடர்களை சோதித்து பார்ப்பது என முடிவெடுத்து, "உண்மை வழியினை அடையத் தேடும் போது, ஒரு உயரமான மரத்தின் கிளையினைப் பல்லால் பிடித்துக் கொண்டு தொங்கிக் கொண்டிருக்கிற மனிதனுக்கு சமமாவோம்" என்றவர், "கீழே சாவகாசமாக அமர்ந்திருக்கும் மற்றொரு மனிதன், மேலே தொங்குபவனைப் பார்த்து, "மேற்கிலிருந்து போதிதர்மா சைனாவிற்கு வந்ததன் காரணம் என்ன?" என்று கேட்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது மேலேயிருப்பவன் பதில் சொல்லவில்லையென்றால் முட்டாளாக கருதப் படுவான். ஆனால் வாயைத் திறந்தாலோ எமனுக்கு இரையாகி விடுவான். இதிலிருந்து தப்ப என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார்.

அங்கிருந்த சீடர்களில் ஒருவனான "ஹு டோ சாவோ எழுந்து நின்று, "எங்களுக்கு அந்த மனிதன் உயரமான மரத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதைப் பற்றிய கவலையில்லை. எங்களுக்குத் தேவையானதெல்லாம் யார் அவன், மரத்தின் மேலே ஏறுவதற்கு முன்பு என்ன செய்து கொண்டிருந்தான்?" என்று பதிலுக்கு ஆசிரியரை கேள்வி கேட்டான்.

அதைக்கேட்ட ஷிஷைன் சிரிக்கத் தொடங்கினார். சீடனின் பதிலில் திருப்தி அடைந்தவரானார்.

கி.தா.: வேண்டாம் கொன்சி! எட்வின் நான் பார்க்க வளர்ந்த பெடியன்! அவனைப் பார்கேக்க எல்லாம் ஏதோ டேவிட்டைப் பார்க்கிற மாதிரித்தான் எனக்கிருக்குது. அவனிட்ட இப்ப போய்க் கேட்டா, "வேலைகிடைச்ச உடனயே கேட்குதுகள்" எண்ட எண்ணம்தான் அவன்ர மனசில வரும்! வேண்டாம்!

கொன்சி: பார்ப்பம் கர்த்தர் வழி காட்டுவார்தானே.?

## காட்சி - 2

(கி.தா., எட்வின், இன்ஸ்)

கி.தா.: எட்வின் நீர் இப்படி நல்ல நிலமைக்கு வந்தது எனக்கும் அன்ரிக்கும் எவ்வளவு சந்தோசம் சொல்லும் பார்ப்பம். எல்லாம் கர்த்தற்ர ஆசீர்வாதம்.

எட்வின்: ஓம் அங்கிள். கொழும்பில நல்ல கொம்பனியில வேலை. நல்ல சம்பளம். என்ன சனி, ஞாயிறு மட்டும்தான் இங்க வரலாம். அது தான் குறை.

கி.தா.: அப்படி வரேக்க கட்டாயம் சண்டே மாஸ்க்குக்கு வாரும். சரியே?

எட்வின்: சரி அங்கிள்! சொல்லுறன் எண்டு குறை நினைக்காதேங்கோ! சேர்ச்சிலேயே எவ்வளவு காலத்துக்கு எண்டு மெழுகுதிரி வித்துக்கொண்டு இருக்கப் போறீங்கள்? கிறிஸ்மஸ் தாத்தாவா வந்து எல்லாரையும் சந்தோஷப்படுத்துறீங்கள்? உங்களைப் பற்றியும் கொஞ்சம் யோசிச்சா என்ன? இப்ப இருக்கிற விலைவாசியில் இந்த மெழுகுதிரி விக்கிறத விட்டிட்டு வேற ஏதாவது வேலை செய்யுங்கோ!

கி.தா.: இல்லை எட்வின நீா பிழையாச் சொல்லுறீர்! நான் இயேசுவை விசுவாசிச்சு அவருக்காகச் சேவகம் செய்யிறவன். கிறிஸ்மஸ் தாத்தாவா ஊரில இருக்கிற குழந்தையளச் சந்தோசப் படுத்தினா, என்ர பிள்ளை டேவிட் எங்கயாவது

சந்தோசமா இருப்பான் எண்ட அசையாத நம்பிக்கைதான், வேற ஒண்டுமில்லை! இன்ஸ்பெக்டர் இங்க..

**இன்ஸ்**: அ.. மெயா தமாய்! sure நே? ஹறி மம் பளாகண்ணம்..

**எட்வின்**: நா மம..!

**இன்ஸ்**: என்ன "நா மம" எண்டு தடுமாறுறே? கொழும்பு ஹாபருக்கு வர்ற சாமான்களை கள்ளமா கடத்தி பெற்றா வில வித்திட்டு இங்க நல்லவன் மாதிரி வேஷம் போடுறியா?

**எட்வின்**: இல்லை இன்ஸ்பெக்டர்! நான் இல்லை அது!

**கி.தா.**: எ... என்ன இன்ஸ்பெக்டர் என்ன விஷயம்? (குழப்பத்துடன்)

**இன்ஸ்**: இவன் பொல்லாத ஆளு! எத்தினையோ பேரு கஸ்ரப்பட்டு, கடன்பட்டு Import பண்ணுற சாமான்களை இவன் கடத்தி வெளியில விக்கிறான். பெற்றாவில இப்படி மணிக்கூடு எல்லாம் வித்திருக்கான்... இதுக்குன்னு ஒரு குழுவாவே வேலை பண்றாங்க.

**கி.தா.**: அ... அப்பிடியே ? ஐயா எனக்காக இண்டைக்கு மட்டும் கைது செய்யாம மன்னிச்சு விட்டிடுங்கோ! இனி திருந்தி நடப்பான்...

**இன்ஸ்**: சரி விடுறன். நான் இந்த குத்தம் பண்ணேன்னு இதில எழுதிக் குடுக்க சொல்லுங்க! நான் எண்ட்ரி ஒண்ணு போடணும்.

**கி.தா.**: ம்... எழுதிக் குடும்.

**இன்ஸ்**: இது தான் கடைசித்தரம். அதுவும் நம்ம கிறிஸ்மஸ்தாத்தா சொன்னதால விடுறன். இன்னொரு தப்பு பண்ணினே, நேர ஸ்ரேசன்தான்! நான் வர்றேன்!

**கி.தா.**: சரி! (பெரு மூச்சு) என்ன எட்வின், என்ன இதெல்லாம்?

**எட்வின்**: அது.. அது வந்து .. ஸொரி அங்கிள்!

**கி.தா.**: என்னட்ட இல்லை. நீர் மன்னிப்புக் கேட்க வேண்டியது ஆண்டவரிட்ட. எட்வின், (உணர்ச்சியுடன்) உம்மைப் பார்க்கேக்குள்ள எனக்கு எங்களை விட்டுப் பிரிஞ்சு போன எமது மகன் டேவிட்டின்ர ஞாபகம்தான் வாறது. அந்த விருப்பத்தோட, உரிமையோட சொல்லுறன், சேர்ச்சுக்கு அடிக்கடி வாரும். Father பேசுறதை கேளும். ஒரு நாளும் வழி தவறிப் போகமாட்டீர். பைபிளில சொல்லியிருக்கிற ஒரு விஷயத்தை நல்லா ஞாபகத்தில் வைச்சிரும். சாத்தானின் ஊழியக்காரனா இருக்கிற ஒருத்தன் கிறிஸ்துவத்தைப் பின்பற்ற முடியாது. அதே அவன் கிறிஸ்துவத்தைப் பின்பற்றினான் எண்டால் அவன் ஒரு நாளும் சாத்தானுக்கு வேலைக்காரனா இருக்க மாட்டான். முந்தி மாதிரி ஒழுங்காகச் சேர்ச்சுக்கு வாரும்.

**எட்வின்** : சரி அங்கிள்!

## காட்சி - 3

(கி.தா., கொன்சி)

கி.தா.: திடீரெண்டு இப்ப வேலைக்குப் போக வேணுமெண்ட ஆசை ஏன் வந்தது?

கொன்சி: சும்மா வீட்டிலயே இருக்க ஒரே அலுப்பாக்கிடக்குது. அந்தப் பிள்ளையும் சேர்ச்சுக்கு வாறதுதானே? குழந்தையளோட கஷ்ரப்படுகிது. உதவியாயும் இருக்கட்டுமன். அவை தாறத தரட்டுமன்.

கி.தா.: அப்பிடியெண்டாச்சரி! அப்ப அந்த மூட்டு நோ, தலையிடி எல்லாம் இப்ப சுகமே?

கொன்சி: ஓமோம் சுகம்.

கி.தா.: உன்ர விருப்பத்துக்கு எப்ப நான் குறுக்க நிண்டிருக்கிறன்? போயிற்று வா!



கொன்சி: (தனக்குள்) மூட்டு வலி வர வர கூடிக்கொண்டுதான் போகுதே தவிர குறையிற வழியக் காணேல்ல. ஆனா இப்படி வேலைக்குப் போகாட்டி எப்பிடி கிறிஸ்மஸ் பரிசா இவருக்குப் புது பூட்ஸ் வாங்கிக் குடுக்கிறது? கிறிஸ்மஸ் தாத்தாவா தான் இருக்கிறத நினைச்சு மனசார சந்தோஷப்படுறவர்.

பாவம் எத்தினை வருஷமா அதே பழைய பூட்ஸைப் போடுறார்? கிறிஸ்மஸ் தாத்தா எண்டால் புது பூட்ஸ் எல்லே போடவேணும்? புதுசு வாங்கி குடுத்தா சந்தோஷப்படுவார். கிறிஸ்மஸ் மட்டும்தானே? கஸ்ரப்பட்டு வேலை செய்வம்.

கி.தா.: என்ன யோசனை? நானும் சேர்ச்சுக்குப் போகப் போறன். அது சரி கொன்சி இந்த சாறியே உடுக்கிறாய்? பழுதாப் போச்சுதே?

கொன்சி: வேலைக்குத் தானேயப்பா போறன். பழசைத்தான் போடவேணும்! புது சாறியள் இருக்கு!

கி.தா.: (தனக்குள்) பொய் சொல்லுறாள். புது சாறி இருக்காம்! பச்சைப்பொய்! தன்ர கஸ்ரத்தைக் காட்டி என்னைக் கவலைப்படுத்தக் கூடாதெண்டு நினைக்கிறாள். பாவம்! இவளுக்கு ஒரு நல்ல சாறி வாங்கிக் குடுத்து எவ்வளவு காலமாய்ப் போச்சுது! இந்த முறை கிறிஸ்மஸ் பரிசாய் கட்டாயம் சாறி ஒண்டு வாங்கிக் குடுக்க வேணும்!

கொன்சி: என்னப்பா அப்பிடியே என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறீங்கள்? நான் வெளிக்கிடப் போறன்.

கி.தா.: சரி போயிற்று வா!

## காட்சி - 4

(கொன்சி, வினி)

வினி: (கோபமாக) வேலை செய்ய வந்தா மட்டும் பத்தாது ஆச்சி! செய்யிற வேலய ஒழுங்காச் செய்யவேணும். இப்ப எத்தன தரம் சொல்லீற்றன், பாத்திரம் கழுவேக்குள்ள பார்த்துக் கழுவச் சொல்லி. ஒவ்வொரு பாத்திரத்திலயும் கறை இருக்குது. இப்படியெண்டாச் செய்ய வேண்டாம்!

கொன்சி: இல்லையம்மா..! அதுகளைத் தாங்கோ! திருப்பி நானே சரியாக் கழுவி வைக்கிறன்.

வினி: வடிவாப் பார்த்துக் கழுவுங்கோ! கண் தெரியாட்டி கண்ணாடி போடுங்கோ! இதுக்குப் பிறகு ஓணமண்ட்ஸ்ல தூசு எல்லாம் தட்டித் துடையுங்கோ! பிறகு மேல்மாடிப் படி கூட்ட வேணும். பிறகு பூக்கண்டுகளுக்குத் தண்ணி விடுங்கோ...! நான் வாறன்.

கொன்சி: சரி! (தனக்குள் பெருமூச்சு) இண்டைக்கு நல்ல வேலையள்தான்! ஒரேயடியா முறிஞ்சு போயிடுறனோவும் தெரியேல்ல! ஏதா இண்டையோட 1000 ரூபா சேர்ந்திட்டுது. பூட்ஸ் 3200க்கு வாங்கலாம். இன்னும் ஒரு 2200 தானே?

## காட்சி - 5

(கி.தா., எட்வின், இன்ஸ்)

கி.தா.: (பாடல்) வந்திட்டேன்! கிறிஸ்மஸ் தாத்தா வந்திட்டேனே! தந்திட்டேன் பரிசு பல தந்திட்டேனே! (மூச்சு வாங்கல்) சு...சு... முந்தி மாதிரி துள்ளித் துள்ளி

ஆட வயசு விடுகுதில்லை. எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு ஆடுவம். வருசத்தில ஒரு முறைதானே கிறிஸ்மஸ் வருகுது.

**எட்வின்**: ஹலோ அங்கிள் எப்பிடி இருக்கிறீங்கள்?

**கி.தா.**: எட்வின்! சா..! எவ்வளவு நாளுக்குப் பிறகு வீட்ட. வாரும்! வாரும்! சேர்ச்சுக்கு வரச் சொன்னேன். அந்தப் பக்கமே ஆள் வரேல்ல.

**எட்வின்**: (சிரித்து) கொஞ்சம் பிஸி அங்கிள்.

**கி.தா.**: கடவுளின்ற கிருபையே கிருபை! இண்டைக்கு காலம நான் டேவிட்டைக் கனவில கண்டனான்! இப்ப பின்னேரம் பார்த்தா கன நாளா வீட்ட வராத நீர் வாறீர்!!

**இன்ஸ்**: என்ன பக்கத்து வீட்ட வந்து ஒளிச்சா, பிடிக்கேலாதுன்னு நெனச்சியா? ம்... hands up! இல்லை சுட்டிடுவன்.

**கி.தா.**: ஐயோ வேணாம். இன்ஸ்பெக்டர், பாவம் அவனை சுட்டிடாதங்கோ!

**இன்ஸ்**: ஐயா, உங்களுக்காகத்தான் இவனை விட்டுப்பிடிச்சேன். இனித் திருப்பி இதுக்குள்ள வராதீங்க. இவனை கவனிக்க வேண்டிய ரைப்பில நான் கவனிக்கிறேன்.

**கி.தா.**: இப்ப என்ன செய்தவன்?

**இன்ஸ்**: மொத்தமா 5 hand phone களவெடுத்திருக்கிறான். அதில ஒருத்தரு சீரியல் நம்பரை note பண்ணி வைச்சிருந்ததால இவன் வசமா மாட்டிக்கிட்டான். ஏய்.. ஏய்.. எட்வின என்ன பண்றாய்..? ஓட முயற்சிக்காத! வேண்டாம்!

**கி.தா.**: எட்வின் வேணாம்! அப்படிச் செய்ய வேணாம். சரண்டர் ஆகு!

**இன்ஸ்**: எட்வின் சுட்டிடுவன்! sure ஆ.. சுடுவேன்..!

**கி.தா.**: வேண்டாம். சுடாதீங்கோ... (துப்பாக்கி சுடும் சத்தம்) டேவிட்! டேவிட்!

**எட்வின்**: ஐயோ அங்கிள்!

**இன்ஸ்**: சீ... இப்படிக் குறுக்கால பாஞ்சிட்டுதே கிழவன்!

**எட்வின்**: அங்கிள்! (கத்தல்)

## காட்சி - 6

(வினி, கொன்சி)

**வினி**: என்ன சொல்லுறீங்கள் ஆச்சி? அப்ப இனி வேலைக்கு வரமாட்டீங்களா?

**கொன்சி**: என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ! இனி நான் வரமாட்டன். என்ர அவர் இந்தக் கிறிஸ்மஸில கிறிஸ்மஸ் தாத்தாவா வர பூட்ஸ் ஒண்டு வாங்கக் காசில்லாமத்தான் வேலைக்கு வந்தனான். இப்ப தேவையான அளவு காசும் சேர்த்து இந்தா பூட்ஸும் வாங்கீற்றன். இனி நானே வேலை செய்ய நினைச் சாலும் உடம்பு விடாது. இந்த 60 வய சுக் கிழவிக்கு மூட்டு வலி போட்டு, வாட்டி எடுக்குது! இனிப்போதுமம்மா!

**வினி**: சரி ஆச்சி: இந்தக் கொஞ்ச நாளில சுறு சுறுப்பாக் கனவேலையள் செய்து தந்தீங்கள். நீங்கள் போறது எனக்குக் கை உடைஞ்ச மாதிரிதான்...

**கொன்சி**: இருட்டீற்றுது! அவர் பார்த்துக்கொண்டிருப்பார்! நான் வாறன்.

**வினி**: சரி ஆச்சி!

**கொன்சி**: (தனக்குள்) மழை இருட்டும் சேர்ந்திட்டுதாக்கும்... திடீரெண்டு இப்படி இருட்டீற்றுதே..? ம் என்ன இது திடீரெண்டு தலைய சுத்துது..? நிக்க ஏலாமல் கால் மூட்டு ரண்டும் இப்படி வலிக்குதே..? ஐயோ மாதாவே, தலையை சரியாச்சுத்துது! எப்படி நான் வீட்ட போய்ச் சேரப் போறன்? அ.. (அதிர்ச்சியுடன்) என்ன இது நான் நான் நடு றோட்டில நிக்கிறன்? ஐயோ முன்னால வாகன...

(விபத்து ஏற்பட்ட ஒலியும் வாகனங்கள் சடுதியாக நிறுத்தப்படும் சத்தமும்.)

**கொன்சி:** ஜீஸஸ்... !

**குரல்:** ஏ ... ஆச்சி கெனக் ..! வரேங்! வரேங்! பவ் அடோ..! தாம ஸிய தியனவ...

**கொன்சி:** சு...சு... வாகனம் - டேவிட்.. இ..இந்த பூ..பூட்ஸ் அவருக்கு குடுக்க வேணும்.

**குரல:** மே... பூட்ஸ் கன தமாய் கியன்னே..!

## காட்சி - 7

(கி.தா., கொன்சி)

**கி.தா.:** பிளீஸ் என்ன வற்புறுத்தாத. உன்னை இந்த நிலையில விட்டுட்டு என்னால அந்தப்பார்ட்டிக்குக் கொழும்புக்குப் போக ஏலாது. துவக்குக் குண்டு பட்ட காயமும் கையில நோகுது.

**கொன்சி:** (முனகி) பொய்சொல்லாதிங்கோ! அது வெறும் சிராய்ப்புத்தான் எண்டு டொக்டர் சொன்னதை நானும் கேட்டனான். எனக்காக அந்த நிகழ்ச்சிய விட்டிடாதிங்கோ! (முனகிக்கொண்டே) நான் உங்களுக்காக இ...இருப்பன்! என... எனக்கொண்டுமில்லை.

**கி.தா.:** கதைக்கவே இவ்வளவு கஸ்ரப்படுறாய்! எப்படி உன்னை விட்டிட்டு அங்க போய் ஆடிப்பாடுவன்...

**கொன்சி:** நீ...நீங்க மெழுகுதிரி மாதிரி! தான் உருகி அழுதாலும் மக்களுக்கு வெளிச்சத்தைக் குடுக்கிறதைப் போல கிறிஸ்மஸ் தாத்தாவா எல்லாரையும் ச...சந்தோஷப்படுத்துங்கோ...!

**கி.தா.:** நீயுமொரு மெழுகுதிரி தானம்மா! நீ வாங்கித் தந்த பூட்ஸ்! இந்த உலகத்தில எனக்குக் கிடைச்ச பென்னாம் பெரிய பரிசு. இந்தா கொன்சி உனக்கு சாறி!

**கொன்சி:** பு...புது சாறி! ம்... எ... எனக்குப்பிடிச்ச கலர்...! நல்லாருக்கு. எனக்காக நீங்கள் கொழும்புக்குப் போகவேணும்! கட்டாயம் போக வேணும்!

**கி.தா.:** சரி கொன்சி போறன். உனக் கொண்டு தெரியுமா? எனக்கு சூடு விழுந்ததோட எட்வின் ஒரேயடியாத் திருந்திட்டான். அவனை காக்க நான் குண்டடிபட்டத நினைச்சுத் துடிச்சுப்போயிற்றான். பொலிஸோட என்னையும், உன்னையும் பார்க்க இங்க ஆஸ்பத்திரிக்கு வந்தவன். எல்லாம் ஆண்டவற்ற செயல்தான்.

**கொன்சி:** இயேசுவை விசுவாசிக்கிறவர்களை அவர் ஒரு நாளும் கைவிட மாட்டார். கொழும்புக்குப் போய் கிறிஸ்மஸ் தாத்தா வந்தேன் பரிசு தந்தேன் எண்டு ஒரு கலக்குக் கலக்க வேணும்.

**கொன்சி:** சரி நீ கவனம்.

## காட்சி - 8

(கொன்சி, எட்வின், கி.தா.)

**கொன்சி:** அப்ப பிணையிலயா வந்திருக்கிறீர்?

**எட்வின்:** ஓம் அன்ரி! அந்த சம்பவத்தோட நான் ஒரேயடியாத் திருந்திட்டன். நல்லவர்களை எல்லாம் தேவன்தான் அனுப்பி வைக்கிறார் எண்டு பைபிளில இருக்கு! அங்கிளும் அப்படித்தான். அங்கிளால நான் புது எட்வினா மாறிட்டன். இந்த கிறிஸ்மஸிற்கு ஆண்டவர் எனக்கு விலையுயர்ந்த பரிசா ஒரு அம்மாவையும் அப்பாவையும் தந்திருக்கிறார்.

**கொன்சி:** கேட்க எவ்வளவு சந்தோசமா இருக்கு எட்வின்? அங்கிள் அடிக்கடி உம்மைப் பார்க்க பார்க்க டேவிட்டின் ஞாபகம் வருகுது எண்டு சொல்லிக்கொண்டேயிருப்பார். கொழும்பில பார்ட்டி முடிச்சிட்டு இப்ப வரவேணும்..!

**எட்வின்:** அந்தா சொல்லவே வாறார்..!

# மழை

மழையில் நனைகிறது
ஒவ்வொரு மனமும்!

பூக்களுக்கோ
ஈரத்தடவல்களால்
இரண்டாம் முறை மலரும்
பரவசம்!

பயிர்களின் உடல்களுக்குள்
தண்ணீர் பாய்ச்சுகிறது
புத்துயிரை..!.

இலைகளின் நடனமோ
சொல்லத்
தேவையில்லை...!

கூரைகளில்
தாளகதி பிசகாத
சங்கீதக் கச்சேரி...!

வால் கிளப்பிச் சப்திக்கும்
பறவையே...
நீ கூட மழையின் காதலனா...?

மண்வாசனையோடு
காதலும் கவிதையும்
கிளர்கின்றன...!

மணிக்கூட்டுக் கோபுரத்தின் கீழ்
மாற்றுத் துணியற்ற பெண்ணின்
மார்புறிஞ்சும் குழந்தை மட்டும்
மழையை மறுதலித்து
அழுகிறது!

*-தேவன்.*

**கொன்சி:** எங்க? அ..அ.. எப்படியப்பா நிகழ்ச்சி? நல்லா நடந்துதா?

**கி.தா.:** சுப்பர்! எல்லாமே சுப்பர்! கொன்சி நானும், நீயும் ஆளாளுக்கு கிறிஸ்மஸ் பரிசு தர வேணும் எண்டு எவ்வளவோ கஸ்ரப்பட்டம். எங்கட அன்பைப் பார்த்த ஆண்டவர் எங்களுக்கு 2 பரிசுகள் தந்திருக்கிறார்.

**எட்வின்:** 2 பரிசா? என்ன அது?

**கி.தா.:** ஒண்டு எட்வின்! மற்றது டேவிட்! டேவிட், வா!

**கொன்சி:** டேவிட்!! (உணர்ச்சியாகி) டேவிட்! டேவிட் எப்படி?

**கி.தா.:** கொழும்பிலதான் இருக்கிறான். நான் போன பார்ட்டிக்கு வந்திருந்தான்! என்னைக் கண்ட உடன டாடி எண்டு ஓடி வந்து கட்டிப்பிடிச்சிட்டான்.

**கொன்சி:** பாருங்களன் டேவிட்டை! பெரிய ஆளா மீசை எல்லாம் வைச்சு... இதைவிட வேற என்ன சந்தோசம் வேணும்? ஆண்டவருக்கு தோத்திரம்.

**எட்வின்:** அப்ப இந்த முறை கிறிஸ்மஸ் பெரிய கொண்டாட்டம்தான்!

**கி.தா.:** 4 பேரும் ஒரே குடும்பமா கிறிஸ்மஸ் கொண்டாடுவம். இயேசு விசுவாசிப்பவர்களை நிச்சயம் கைவிடமாட்டார். (பாடுகிறார்....)

*வந்திட்டேன். கிறிஸ்மஸ் தாத்தா வந்திட்டேன்! தந்திட்டேன், பரிசு பல தந்திட்டேன்!*

- முற்றும் -

# ஓவியமும் காவியமும் 10




உங்கள் கவிதைக்கான முகவரி

**198, 1st Floor, Galle Road, Dehiwela, Colombo.**

முடிவுத்திகதி 20.12.2007

ஓவியமும் காவியமும் - 09

கார்மேகம் சூழ்ந்த வானம்போல்
போர் மேகம் சூழ்ந்த தேசம்!
தலைமையின் கரமோ
தடைகளை நீட்ட-
அதையும் மீறி,
இடைவெளி கண்டு சுவாசிப்போம்!
எம் இருப்பினை என்றும்
நிரூபிப்போம்!

*-க.சண்சியா,*
*மாவடி வீதி, சங்கானை மத்தி.*

• • • • • •

அடிக்கப்பட்ட ஆணிகளில்தான்
எங்கள் எழுதுகோல்கள்
வரைகின்றன..!
இதுதான் எமது
பத்திரிகை சுதந்திரம்!

*-M. வேணுகானன்,*
*48, அபூபக்கர் லேன், மருதானை.*

• • • • • •

சம்பவப் புள்ளிகளை இணைக்கும்
வாழ்க்கையென்னும் கோட்டை
வரைகிறது இந்த
காதல் எனும் கரம்!

*-S. மணிமாறன்*
*22, சப்பல்லேன், வெள்ளவத்தை.*

• • • • • •


பேனா பிடித்த கரம்
இன்று
பேரிடரானது...!
அதனால்,
வேலிகட்டி எழுத்துக்களை
கூட்டுக்குள்ளே பிரசவித்தது!

*-பா.கிருபாகரன்,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

• • • • • •

முள்ளுக்கம்பிக்குள் முடக்கப்பட்ட
முடமான பத்திரிகைகள் நாங்கள்..!
ஆனாலும்,
முட்களின் மீதும்
கோலம் போடுவோம்!

*-J. M. மொகமட்,*
*மதவாச்சி,*
*அனுராதபுரம்.*



# கரடி இராஜகுமாரன்

அடர்ந்த காட்டையொட்டிய ஒரு வீட்டில் ஒரு விதவை வாழ்ந்து வந்தாள். அவளுக்கு இரண்டு பெண்கள். மூத்தவள் பெயர் சிம்ரன் இளையவள் பெயர் மோனல். இருவரும் நல்ல அழகிகள்.

சகோதரிகள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த அன்பு கொண்டிருந்தனர். காட்டில் வசிக்கும் விலங்குகள் தான் அவர்களுக்கு உற்ற நண்பர்கள். அப்போது கடுமையான பனிக்காலம்.

ஒரு நாள் இரவு.

வீட்டின் கதவு தட்டப்பட்டது. சிம்ரன் சென்று கதவைத் திறந்தாள். அங்கே கரடி ஒன்று குளிரில் நடுங்கிக்கொண்டிருந்தது. கரடியைக் கண்டதும் மோனல் பயந்தாள்.

ஆனால், அந்தக் கரடி மனிதக் குரலில் பேசியது. குளிரில் நடுங்கும் தனக்கு அடைக்கலம் தரும்படி கெஞ்சியது. கரடி கூறுவதைக்கேட்டு சிம்ரன் மனமிரங்கினாள். உடனே அதனைக் கணப்பருகே அழைத்துப் போனாள். கரடி கணப்பருகே அமர்ந்து கொண்டது. சிறிது நேரத்தில் சகோதரிகள் இருவரும் கரடியுடன் நெருங்கிப் பழகி விட்டனர்.

அதன்பின் கரடி தினமும் அங்கு மாலை வேளையில் வந்துவிடும். கணப்பருகே குளிர் காயும். சிரித்துப் பேசி அவர்களுடன் விளையாடும். அதிகாலையில் காட்டிற்குள் சென்றுவிடும்.

பனிக்காலம் முடிந்ததும் சகோதரிகள் இருவரிடமும் கரடி பிரியாவிடை பெற்றது.

"இனி உங்களைச் சந்திக்க முடியுமோ என்னவோ? என்னுடைய செல்வத்தைத் தேடி நான் செல்கிறேன்.



இடையில் உங்களைச் சந்திக்க நேர்ந்தது. எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது" என்று மனம் நெகிழக் கூறி விடைபெற்றுச் சென்றது.

சிம்ரனும் மோனலும் கலங்கிய கண்களுடன் கரடிக்கு விடை கொடுத்து அனுப்பினர். கரடியும் அவர்களை விட்டுப் பிரிய மனமில்லாமல் விடை பெற்றுச்சென்றது.

நாட்கள் சென்றன.

ஒரு நாள் சகோதரிகள் இருவரும் விறகு பொறுக்குவதற்காகக் காட்டிற்குள் சென்றனர். அங்கு ஒரு இடத்தில் குகை ஒன்று இருப்பதைக் கண்டனர். உள்ளே சென்று பார்க்க விருப்பம்

கொண்டனர். குகைக்குள் நுழைந்தனர். குகை நீளமாகப் போய்க்கொண்டே இருந்தது. ஓரிடத்தில் இருளையும் மீறி ஒளி வீசிக் கொண்டிருந்தது. ஒளிவரும் இடமருகே சென்றனர்.

அங்கே வைரம், வைடூரியம், மரகதம், மாணிக்கக் கற்களாலான ஆபரணங்களும் தங்க நகைகளும் குவிந்து கிடந்தன. அவற்றைக் கண்டு இருவரும் பிரமித்துப் போயினர். அப்போது குகையின் இருண்ட பகுதியிலிருந்து திடீரென்று பூதம் ஒன்று பாய்ந்து வந்தது. அதன் பயங்கர அலறலைக் கேட்டு சகோதரிகள் அஞ்சி நடுங்கினர்.

அவர்களைக் கண்ட பூதம், "உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள். இங்கு என்னை உளவு பார்க்கவா வந்துள்ளீர்கள்?" என்று கத்தியபடி தனது நீண்ட கைகளை நீட்டியது. இருவரும் பதறிப்போன நேரத்தில் அங்கே கரடி ஒன்று வந்தது.

பூதத்தின் கவனம் கரடி மேல் திரும்பியது. அப்போதுதான் இருவருக்கும் மூச்சே வந்தது. "அப்பாடா பிழைத்தோம்!" என்று எண்ணினர்.

கரடிக்கும் பூதத்திற்கும் கடும் சண்டை நடந்தது. இறுதியில் பூதம் கரடியால் அடித்துக் கொல்லப்பட்டது. கரடி சகோதரிகளின் அருகில் வந்தது.

"அன்பான சகோதரிகளே! என்னைத் தெரியவில்லையா? நான் உங்கள் நண்பன். பனிக்காலம் முழுவதும் கணப்புக்காக உங்கள் வீட்டிற்கு வந்தவன் தான்!" என்றது.

அதன் குரல் கேட்டு சிம்ரனும் மோனலும் அதனை அடையாளம் கண்டு கொண்டனர்.

அப்போது அங்கே எதிர்பாராத அதிசயம் நடந்தது.

கரடி உருமாறத் தொடங்கியது. மனித உருப்பெற்றது. அரசகுமாரன் தோற்றத்தில் அலங்கார அணிமணிகளுடன் ஓர் இளைஞன் அங்கே காட்சியளித்தான். அவன் பேச ஆரம்பித்தான்.



"அன்பான சகோதரிகளே! நான் ஓர் அரசகுமாரன். இந்தப் பூதத்தால்தான் நான் கரடி உருவம் பெற்றேன். பனிக்காலத்தில் நான் விறைத்துபோய் இறந்து போகாதபடி நீங்கள்தான் என்னை காப்பாற்றினீர்கள். உங்களுக்கு மிக்க நன்றி. எனது செல்வங்களை எல்லாம் இந்தப் பூதம் அபகரித்துக் கொண்டு விட்டது. அதனை மீட்கவே இங்கு வந்தேன். அப்படி வரும்போதுதான் உங்களைச் சந்திக்கிறேன்" என்றான்.

அரசகுமாரன் செல்வங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டான். சிம்ரன், மோனல் இருவரையும் அழைத்துக் கொண்டு தனது நாட்டிற்குச் சென்றான். சிம்ரனை அவன் திருமணம் செய்து கொண்டான். இளையவளை தனது தம்பிக்கு மணமுடித்து வைத்தான். அவர்கள் நால்வரும் நீண்டகாலம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.

ஏழைப் பெண்கள் செய்த உதவி அவர்களுக்கு எவ்வளவு பெரிய நன்மையைக் கொடுத்தது பார்த்தீர்களா?

# எயிட்ஸ் ஆட்கொல்லி!



எயிட்ஸ் -

அது நாகரிகம் முற்றிய மேற்கத்தைய நாடுகளுக்கான நோய். எம்மை அணுகாது என்று பலரும் அலட்சியமாக பேசினார்கள். ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த நெறியைத் தழுவிய தமிழர்களுக்கு இது ஏற்படாது என்று பாரம்பரியப் பெருமை பேசி நம்பிக்கை அடைந்தார்கள் வேறு சிலர்.

ஆனால் எல்லோரது நம்பிக்கைகளையும் பொய்ப்பித்துக் கொண்டு சாத்தான் எமது வாசற் கதவையும் தட்டத் தொடங்கிப் பல வருடங்களாகிவிட்டன. எனவே, ஒவ்வொருவரும் தமக்கு இந்நோய் தொற்றுவதிலிருந்து காப்பாற்றுவதற்காகவும், இந்நோய் பற்றிய பொய் வதந்திகளால் பரவும் வீண் பயங்களுக்கு ஆளாகாமல் தப்பவும், எயிட்ஸ் பற்றிய சில அடிப்படை உண்மைகளை அறிய வேண்டியது அவசியம்.

1981ம் ஆண்டுதான் உலகின் முதலாவது எயிட்ஸ் நோயாளி அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டார்.

கிருமி தொற்றிய எல்லோருக்குமே, நோய்க்கான அறிகுறிகள் இருக்காது. கிருமி தொற்றியும், நோய்க்கான அறிகுறிகள் இல்லாதவர்களை நோய்காவிகள் (Carriers) என்று சொல்லுவார்கள். அண்மைக்கால தரவுகளின்படி இந்த நோய்க் காவிகளின் தொகை பல மில்லியன்கள்வரை இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.


இந்நோயைக் குணப்படுத்த மருந்துகளோ, அது பரவுவதைத் தடுப்பதற்கான தடுப்பு மருந்துகளோ இல்லாத காரணத்தால் இது இன்னமும் வேகமாகப் பரவலாம் என அஞ்சப்படுகிறது.

எயிட்ஸ் என்பது ஒரு தொற்றுநோய். இது ஒரு வகை வைரஸ் (Virus) கிருமியால் உண்டாகிறது. இதை ஒரு தனி நோய் என்பதை விட பல நோய்க் குணங்குறிகளின் தொகுப்பு (syndrome) என்று சொல்லலாம்.

எயிட்ஸ் என்பது AIDS என்ற ஆங்கிலச் சொல்லின் நேரடி ஒலிபெயர்ப்பு ஆகும். AIDS என்பது Acquired Immune Deficiency என்ற ஆங்கில வார்த்தையில் உள்ள நான்கு சொற்களின் முதல் எழுத்துக்களை இணைத்து ஏற்படுத்திய சொல்லாகும். இதனை தேடிப்பெற்ற நிர்பீடனக் குறைபாட்டு நோய்த்தொகுதி என்று விஞ்ஞானத் தமிழில் கூறலாம்.

எயிட்ஸ் நோய் HIV வைரஸினால் உண்டாகிறது. எச்.ஐ.வீ (HIV) என்பது Human Immunodeficiency Virus என்பதின் சுருக்கமாகும். இதனை மனித நிர்பீடனக் குறைபாட்டு வைரஸ், என்று விஞ்ஞானத் தமிழில் கூறமுடியும். ஆயினும் சொற்சிக்கனத்திற்காகவும், இலகுவான உச்சரிப்பிற்காகவும் HIV வைரஸ் என்றே கூறலாம்.

மனித உடலுக்கு இயற்கையாகவே




நோய் எதிர்ப்பு சக்தி (நிர்பீடனத் தொகுதி - Immune System) இருக்கிறது. இதனால்தான் கிருமிகள் தொற்றுவதைத் தடுக்கவும், தொற்றிய கிருமிகளை அழித்து நோயிலிருந்து குணமடையவும் உடலுக்கு முடிகிறது.

HIV வைரசோ மனித உடலின் நோய் எதிர்ப்புச் சக்திகளையே தாக்கி அவற்றை அழித்து விடுகிறது. இதனால் மனிதஉடல் HIV வைரசுக்கு மாத்திரமன்றி, ஏனைய நோய்க்கிருமிகளுக்கு எதிராகவும் போராடும் சக்தியை இழந்துவிடுகிறது.

HIV வைரஸ் தொற்றுவதால் ஏற்படக்கூடிய குணங்குறிகளும், தொற்றுகின்ற ஏனைய நோய்களின் குணங்குறிகளும் ஒன்றாகவோ, தொடர்ச்சியாகவோ நோயாளிக்குத் தோன்றலாம். இதனால்தான் எயிட்சை பல நோய்க்குணங் குறிகளின் தொகுப்பு என ஆரம்பத்திலேயே குறிப்பிட்டோம்.

கிருமிகளுக்கு எதிராகப் போராடும் சக்தியை இழப்பதாலேயே, பல்வேறு தொற்று நோய்களுக்கு ஆளாவது மாத்திரமின்றி, எயிட்ஸ் நோயாளி இறுதியில் நிச்சயம் இறக்க நேரிடுகிறது.

## ஏனைய வைரஸ் நோய்கள்

தடிமன் காய்ச்சல், சின்னமுத்து, ஜேர்மன் சின்னமுத்து, கொப்புளிப்பான் (சின்னம்மை), பெரியம்மை, கூவைக் கட்டு, போலியோ, செங்கண்மாரி (ஈரல் அழற்சி - Heratitis), நீர் வெறுப்பு நோய் (விசர்நாய்க்கடி - Hydrophobia), ஹெர்பீஸ் (Herpes), சில வகை வயிற்றோட்டம் போன்றவை வைரஸ் கிருமிகளால் உண்டாகும் சில தொற்று நோய்கள் ஆகும்.

வைரஸ் நோய்களைக் குணப்படுத்தக்கூடிய நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் (Antibiotics) எதுவும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. இதனால் இவற்றை வைத்தியர்களால் மருந்து கொடுத்துக் குணப்படுத்த முடியாது.

ஆனால் வைரசோ அன்றி ஏனைய கிருமிகளோ (உ-ம் பக்றீரியா. பங்கசு) தொற்றியவுடன் மனித உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி விழிப்படைந்து போராடுகிறது. அக்கிருமிகளை அழிக்கக் கூடிய பிறபொருள் எதிரிகளை (Antibodies) உடல் உற்பத்தி செய்கிறது.

இப் பிறபொருள் எதிரிகளே நோய்க் கிருமிகளுடன் போராடி கிருமிகளை அழித்து நோயைக் குணமாக்குகின்றன. முன்பு கூறிய வைரஸ் நோய்களில் பெரும்பாலானவை மருந்துகளின்றி தாமே குணமாவது இக்காரணத்தால் தான்.

எயிட்ஸ் நோய்க்கு எதிராகவும் சில பிறபொருள் எதிரிகள் உடலில் உற்பத்

தியாகிறபோதும், அவை HIV வைரஸ் பெருகுவதைத் தடுக்கக்கூடியதாக இல்லை. இதனால் எயிட்ஸ் கிருமி இரத்தத்தின் மூலம் உடலின் பல்வேறு பாகங்களுக்கும் பரவுகிறது.

எயிட்ஸ் நோயைக் கண்டுபிடிப்பதற்கான இரத்தப் பரிசோதனைகள் HIV வைரசிற்கு எதிரான பிறபொருள் எதிரிகளை அடையாளம் காண்பதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.




பெரும்பாலான வைரஸ் நோய்கள் தாமே குணமாகி விடலாம் என்றாலும் எயிட்சும், விசர்நாய்க்கடி நோயும் விதிவிலக்கு. இவ்விரு நோய்களும் தோன்றினால் மரணம் நிச்சயம். விசர்நாய்க்கடி நோயில், வைரஸ் மூளையையும் நரம்புத் தொகுதிகளையும் தாக்குவதால் மரணம் ஏற்படுகிறது. ஆனால் எயிட்ஸ், நோய் எதிர்ப்புச் சக்தியை அழிப்பதால் மரணம் நேர்கிறது.

**வைரஸ் என்றால்?**

வைரஸ் என்பதை நோயை உண்டாக்கக்கூடிய மிக சிறிய நுண்ணுயிர் என்று சொல்லலாம். பக்றீரியா (Bacteria), பங்கசு (Fungus) போன்ற நுண்ணுயிர்களைச் சாதாரண நுணுக்குக்காட்டி (Microscope) மூலம் பார்க்கலாம். சாதாரண நுணுக்குக்காட்டி மூலம் காணமுடியாத அளவிற்கு வைரஸ் மிகச்சிறியது. இதனை மிகவும் சக்தி வாய்ந்த இலத்திரன் நுணுக்குக்காட்டி (Electron Microscope) மூலமே பார்க்கமுடியும்.

வைரஸ் கிருமிகள் விருத்தியடைந்து, பெருகுவதற்கு உயிருள்ள கலம் (Cell) தேவை. அது பெருகும் போது, தான் தங்கியிருக்கும் கலத்தை அழிக்கக் கூடும் அல்லது செயற்திறனைப் பாதிக்கக்கூடும்.

எயிட்சை உண்டாக்கும் HIV வைரஸ் மனித உடலின் நிர்ப்பீடனத் தொகுதியையே தாக்குவதை அறிவீர்கள். நிர்பீடனத்தொகுதியில் உள்ள ரீ-ஹெல்பர கலங்களையே (T-helper Cell) முக்கியமாகத் தாக்குகிறது.

HIV வைரஸ் தானிருக்கும் கலத்தில் பெருகிப் பின் அதை அழித்து வெளியேறுகிறது. வெளியேறிய வைரசுகள் மேலும் பல கலங்களைத் தாக்கி அழித்துப் பெருகுகின்றன. இவ்வாறு நோயாளியின் நிர்பீடனத் தொகுதி பெரிதும் பாதிக்கப்படும். இந்நிலையிலேயே நோய்க்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கிறது.

டிசம்பர் முதலாம் திகதி உலக எய்ட்ஸ் விழப்புணர்வு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதனையொட்டியே இந்தக் கட்டுரைத் தொடர் பிரசுரமாகியுள்ளது. இக்கட்டுரையின் மிகுதி அங்கங்கள் அடுத்த இதழிலும் தொடரும்.

**ஏழு வித்தியாசங்கள்- விடைகள்!**

விளக்குமாறு, ஜன்னல், நாயின் கழுத்துப் பட்டி, வால், கூட்டுபவரின் கையுறை, பையனின் காது, பெண்ணின் தலைமுடி.



# 'கடி'க்கிற ஜோக்தான் பிடிக்கும்!



"அமைச்சரே. வெளியே என்ன கூச்சல். குழப்பம்?"

"இந்த வருட பட்ஜெட்டில் இரவில் நீங்கள் நகர்வலம் செல்லும் செலவுக்கு அதிகமாக நிதி ஒதுக்கியிருப்பதை எதிர்த்து மக்கள் ஊர்வலம் போகிறார்கள் மன்னா!"

"வாழ்க்கையில இனி எப்பவாவது ஒரு பக்கட் பால்மாவெண்டாலும் வாங்கும் பாக்கியம் எனக்கு இருக்குதோவெண்டு கொஞ்சம் பாத்துச் சொல்லுங்கோ..."





"நீங்கள் இவ்வளவு பெரிய சினிமா இயக்குநரானதற்கு முதல்படி எது?"

"மெண்டல் ஹொஸ்பிட்டலிலயிருந்து களவா நான் தப்பினது தான்!"



"சேர். ஆசிரிய பீடத்துக்கு ஆள் தேவையெண்டு விளம்பரம் போடச்சொன்னியள். எப்பிடிப் போடுறது?"

"இன்ரநெற்றிலயிருந்து கொப்பி பண்ணி பேஸ்ற் பண்ணுற அனுபவம் உள்ளவர்கள் தேவை எண்டு போடும்!"



"சுனாமி வருமோவெண்டு நாங்களெல்லாம் பயந்து போயிருக்கிறம். நீ மட்டும் சந்தோசமாயிருக்கிறாய்?"

"சுனாமி வந்தால் ஸ்கூல் எல்லாம் நடக்காதெல்லே!"

"இந்தப் போட்டியில் சதமடித்திருக்கிறீர்கள். இதற்காக யாருக்காவது நன்றி சொல்ல விரும்புகிறீர்களா?"

"நிச்சயமாக... நான் கொடுத்த பதினாறு பிடிகளைத் தவற விட்ட எதிரணி வீரர்களுக்கு!!"



# வம்பன் பதில்கள்

ஜ.பிருந்தா கரணவாய்

*உலகம் உண்மையில் அழியுமா?*



எவ்வளவு பெரிய விஷயத்தை இவ்வளவு சிம்பிளாகக் கேட்கிறீர்கள். சில கோட்பாடுகளின்படி இல்லாத ஒன்றை உருவாக்கவோ - இருக்கும் ஒன்றை இல்லாமற் செய்யவோ முடியாது என்பார்கள். அதாவது ஒன்று இன்னொன்றாக மாறுமே தவிர, அது அழிந்து போகாது. அப்படிப் பார்க்கையில் நாம் வாழும் உலகமும் வேறொரு அல்லது பல கூறுகளாக உரு மாறக்கூடும். எது எப்படியிருந்தாலும் உலகத்துக்கு ஓர் 'ஆயுள்' இருக்குமானால் - அதை நாம் எல்லோருமாகக் கூட்டுச்சேர்ந்து குறைத்துக்கொண்டிருக்கிறோம் என்பது மட்டும் உண்மை.!

சி.ராகுலன் கொச்சிக்கடை

*வம்பரே, என் நண்பர்கள் அனைவருக்கும் வந்துவிட்ட 'காதல்' எனக்கு மட்டும் வருவதில்லையே ஏன்?*

வழியில் ஏதேனும் செக் பொயின்ரில் மாட்டிக்கொண்டு நிற்குதோ, என்னவோ !



சிறீபதி பாலேந்திரா வெள்ளவத்தை

*தமிழைத் தமிழாகப் பேசாதவர்களை என்ன செய்வது?*

இரண்டு நாளுக்கு முந்தி, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். ஆங்கிலத்தை ஆங்கிலமாகப் பேசாதவர்களை என்ன செய்வது என்று கேட்டார்.

அவரவருக்கு அவரவரது கவலை! தீர்வுதான் யாருக்கும் தெரியவில்லை.

வி.அமிர்தநாயகம் பொரளை

*பரபரப்பான பட்ஜெட்டில், கடைசியில் அரசாங்கம் தப்பிச்சிட்டுதே?*

இந்த விளையாட்டுத்தானே வேணாங்கிறது? ஏன், நான் தப்பியிருக்கிறது உங்களுக்குப் பிடிக்கலையோ!

அ.கார்த்திகா அத்தியடி, யாழ்ப்பாணம்

*'அழகிய தமிழ் மகன்' பார்த்தீங்களா, வம்பா? எப்படி இருக்கு?*

சூப்பர்! தினசரி அதைத்தானே நான் பார்க்கிறேன் - கண்ணாடியில்!



எஸ்.பிரியதர்சினி சுண்டிக்குழி,யாழ்ப்பாணம்

*'வேடிக்கை' வராத காலப்பகுதியில் என்ன பண்ணிக்கொண்டிருந்தீர் வம்பரே?*

வேறென்ன, சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன்!

ஜெ.கிருஷ்ணா ராஜசிங்க வீதி,வெள்ளவத்தை

*வம்பா! இம்முறை எமக்கு கிறிஸ்மஸ் பரிசாக என்ன தரப் போகிறீர்?*

நமது ஆசிரியர் இந்த இதழையே உங்களுக்கு கிறிஸ்மஸ் சிறப்பிதழாக தந்திருக்கிறாரே. போதாதா? நான் வேற தரணுமா? சரி, உங்களுக்காக என் கிறிஸ்மஸ் பரிசு இது...



**சிக்கின் மஸ், மட்டன் மஸ்**
**எல்லாவற்றையும் விட**
**எனக்குப் பிடித்த மஸ்,**
**கிறிஸ்மஸ்...!**
**ஏனெனில்,**
**இந்த மஸ்ஸில்**
**மற்ற எல்லா மஸ்சும்**
**கிடைக்குமென்பதால்...!!**

சி. வான்மதி நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

*இலையான்களில் ஆண் எது, பெண் எது என வேறுபடுத்தி அறிய முடியுமா வம்பா...?*

ஓ.. முடியுமே. உங்கள் கேள்விக்கு பின்வரும் உரையாடலிலேயே விடை கிடைக்கும்,

(இலையான் அடித்துக் கொண்டிருந்த மகளிடம்),

தந்தை: "இதுவரை எத்தனை இலையான் அடித்தாய்"?

மகள் : "மூன்று அப்பா. இரண்டு ஆண். ஒன்று பெண்."

தந்தை : (திகைப்புடன்) "ஆண், பெண் என்று எப்படிக் கண்டு பிடித்தாய்?"

மகள் : "பியர் போத்தலின் மேல் இரண்டு இருந்தன. ரெலிபோன் மேல் ஒன்று இருந்தது!"

வம்பன் பதில்கள்

# சுவடுகள்

காரின்பன்

மொழிக்குரிய இலக்கியங்கள் என்று சொல்லப்படுபவை அந்த மொழி சார்ந்த இனத்தின் வரலாறு, பண்பாடு, கலாச்சாரச் சிறப்புக்களையும் வாழ்க்கை முறையையும் வெளிப்படுத்துபவையாக இருக்கவேண்டும். அந்த வகையில் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துப் பெருமை பேசும் தமிழ் மொழியின் இலக்கியங்கள் எந்த அளவுக்குத் தமிழினத்தின் இருப்பை வெளிக்கொண்டு வருகின்றன என்பது ஆராயப்பட வேண்டியதொன்று.

ஒரு புறத்தில், எமக்கு அயலில் வாழ்ந்த இனங்களதும் எம்மை எதிரியாகப் பார்த்து இழிவு செய்தவர்களதும் இலக்கியங்களைக் கடன் வாங்கி அவர்களை இன்னும் மேன்மைப்படுத்தி உருவாக்கப்பட்ட இலக்கியங்களே இன்று எல்லோர் மத்தியிலும் பிரபலம் பெற்றிருக்கின்றன.

மகாபாரதம். ராமாயணம் போன்றவற்றுக்குத் தெய்வீக நிலை கொடுத்துத் தலைமேற் கொண்டாடும் எங்கள் 'சான்றோர்' தமிழினத்தின் உண்மையான வாழ்வியல் முறைகளை வெளிப்படுத்தும் சங்க இலக்கியங்களையும் ஏனைய இலக்கியச் சொத்துக்களையும் கவனத்தில் எடுப்பதில்லை என்பது கசப்பான உண்மை. அதே போல தமிழ் மொழியில் உள்வாங்கப்பட்ட இலக்கியங்களும் அவற்றின் தெய்வீகத் தன்மை காரணமாக அவற்றை ஆராய்ந்து ஒரு தெளிவான முடிவுக்குவரவோ அந்த இலக்கியங்களை விமர்சனப்பார்வைக்கு உட்படுத்தவோ முடியாத நிலையிற் காணப்படுகின்றன. உண்மையில் இந்த இலக்கியங்கள் அனைத்தும் நடைமுறைச் சாத்தியங்கள் ஊடான ஆய்வுக்கும் மாற்றுப்பார்வைகள் ஊடான மீள் கட்டமைப்புக்கும் உட்படும்போது பல ஆச்சரியமான தகவல்களையும் தெளிவையும் பெறக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. இந்தத் தொடரை ஆரம்பித்ததற்கான நோக்கமும் அதுவே!



சைவக் கடவுளான சிவன், முருகன் ஆகியோரைப் பற்றி இலக்கியங்கள் ஊடாக ஏராளமான கதைகள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றுள் இரண்டு கதைகளை இந்தப் பகுதியில் சொல்லப்போகிறோம். முதலாவது சிவன் முப்புரங்களை எரித்த கதை. இரண்டாவது கதை முருகனுடைய பிறப்பைப்பற்றியது.

பொன், வெள்ளி, இரும்பிலான மூன்று பறக்கும் - கோட்டைகளைக் கொண்டிருந்த மூன்று அசுரர்கள், தேவர்களுக்கும் ஏனைய மக்களுக்கும் தொல்லை

கொடுத்து வந்தனர். எல்லோரும் சிவனிடம் சென்று முறையிட அவர் கோபங் கொண்டு மூன்று கோட்டைகளையும் (முப்புரங்கள்) எரித்தார். இது முதலாவது கதை.

சூரன் என்கின்ற அசுரன் தேவர்களுக்குத் தொல்லைகளைக் கொடுத்து வந்தான். தாங்க முடியாத தேவர்கள் சிவனிடம் சென்று முறையிட்டார்கள். சிவன் நெற்றிக்கண்ணைத் திறக்க ஆறு தீப்பொறிகள் தோன்றி அவை சரவணப்பொய்கையில் தாமரைப் பூக்களில் விழுந்து ஆறு குழந்தைகளாகி, பின்னர் பார்வதியால் அணைக்கப்பட்டு ஒன்றாகி, ஆறுமுகனாகிப் பின் சூரனை அழித்ததாக அடுத்த கதை.

இதெல்லாம் தெரிந்ததுதானே! எதற்கு மீண்டும் என்று நீங்கள் கேட்பது புரிகிறது. (பொறுமை பொறுமை...) இனித்தான் நாங்கள் சர்ச்சைக்குக்குரிய பகுதிக்குச் செல்லப்போகிறோம்.

சங்க இலக்கியங்களில் ஒன்றான பரிபாடலில் 'கடுவன் இளவெயினனாய்' பாடிய ஐந்தாம் பாடல் செவ்வேளான முருகனைப்பற்றிய பல தகவல்களை எங்களுக்குத் தருகின்றது. அந்த தகவல்களுக்கூடாக சிவன் முப்புரம் எரித்த செய்தியும் சொல்லப்படுகிறது.

*உருவு திரித்தோன்*
*ஆதி யந்தணன் அறிந்துபரி கொளுவ*
*வேத மாபூண் வையத்தேர் ஊர்ந்து*
*நாகம் நாணா, மலை வில்லாக*
*மூவகை ஆரெயில்*
*ஓரழிஅம்பின் முளிய...*

இவ்வாறு தொடர்கின்ற பாடலின் விளக்கத்தைத் தந்துவிடுகின்றோம்.

ஆதி அந்தணனாகிய பிரம தேவன் செலுத்தும் முறை தெரிந்து செலுத்த வேதங்களாகிய குதிரைகள் பூட்டப்பட்ட வையமாகிய தேரிலேறிச் சென்றான் சிவபிரான். மேருமலையை வில்லாகவும் பாம்பினை நாணாகவும் கொண்டு மூன்று வகையான உலோகங்களிலும் அமைந்த கடந்தற்கரிய திரிபுரக் கோட்டைகளைக் குறித்து ஓர் எரியம்பினை எய்தான்.. அந்த அம்பினால் குறித்த மூன்று கோட்டைகளும் எரிந்து அழிந்தன.



இப்படியே தொடர்கின்ற பரிபாடலின் பகுதிகள் சொல்கின்ற கதையைச் சுருக்கமாகத் தந்துவிடுகின்றேன்.

இந்த வெற்றியால் மிக மகிழ்ந்த தேவர்கள் சிவனுக்கு வேள்வி செய்து விருந்து (அவிர்ப்பாகம்) படைத்தனர்.

சீற்றந்தணிந்த சிவபிரான் பார்வதியை மணந்து இன்புற்றிருந்தான். நீண்ட இன்பக்கூட்டத்தின் பின்னர் பார்வதி தேவி கருவுற்றார். இதனையறிந்த தேவர் தலைவன் இந்திரன் பார்வதியின் கருவைச் சிதைத்து அழித்துவிடுமாறு சிவனிடம் வரம் வேண்டினான். மறுக்க முடியாத சிவபிரானும் தன் மழுவாயு தத்தால் கருவைச் சிதைத்துவிட்டான.



சிதைவுற்று வெளிவந்த கருவை ஏழு முனிவர்கள் பெற்றுக்கொண்டனர். யாகத்தீயை வளர்த்து அந்தத் தீயில் கருவை எரித்து விட முடிவுசெய்து அவ்வாறே செய்தனர். ஆனால் கருவோ எச்சிலாக எஞ்சி நின்றது.


சப்த கன்னியர்களில் அருந்ததி தவிர்ந்த ஏனைய ஆறு பேரும் (கார்த் திகைப் பெண்கள்) அந்த எச்சத்தைப் பெற்று தாம் உண்டு தம்முடைய கருப் பையில் வளர்த்தனர். இமயத்தின் அரு கில் உள்ளதான சுனையில் (சரவணப் பொய்கை) தாமரை மலர்களினான படுக்கையில் முருகனைப்பெற்று வளர் த்தனர்.

இதையறிந்த இந்திரன் தன் நிலை கடந்து படையுடன் வந்து தாக்கினான். நெருப்பைக் கக்குகின்ற வச்சிராயுதத தால் முருகனைத் தாக்க ஆறாகப் பிரிந்து துண்டுகளாகி ஆறு துண்டுக ளும் ஆறுபேராகிப் பின்னர் அனைத் தும் ஒன்றுபட்டு ஒன்றாகி ஆறுமுகன் தோன்றினான்.

பின்னர் இடம்பெற்ற போரில் இந்திரன் படையோடு முருகனிடம் தோற்றான். தன் தோல்வியை ஒப்புக்கொண்டு இந்திரன் திறையாக தோகை நிறைந்த மயிலையும் தீக்கடவுள் கோழிச் சேவ லையும் எமன் வெள்ளாட்டுக்குட்டியை யும் திறையாகக் கொடுத்துப் பணிந் தனர். ஆட்டுக்குட்டியும் மயிலும் கோழிச்சேவலும் முன்திரையோடுங் கூடியதாகக் கட்டமைந்த வில்லும் தோமரமும் வாளும் தழை மாலைய ணியப்பெற்ற ஈட்டியும் குடாரியும் கணி ச்சி என்னும் மழுவும் எரிக்கும் கதிர் களைச்சொரியும் கனலியும் மாலையும் மணியும் திறையாகப் பெற்றான் முரு கப்பெருமான்.

இதுதான் பரிபாடல் சொல்கின்ற கதை. நடைமுறைச் சாத்தியங்களோடு இந்தக் கதையை மீளமைத்துப் பார்க் கலாம்.

வடதேசத்தின் தலைவனான இந்தி ரன் தன்னால் வெல்லமுடியாத எதிரி களை வெல்ல, தென்னாட்டின் சிவபிரா னைத் துணைக்கழைத்தான். சிவனும் இந்திரனுக்காகப் போர் செய்து எதிரி களை அழிக்கிறான். மகிழ்ந்த தேவர் கள் சிவபிரானுக்கு விருந்தளித்து மகிழ்ந்தனர். பார்வதிதேவி அங்கே கரு வுற்றபோது அந்தக் குழந்தையால் தனக்கு ஆபத்து என்று உணர்ந்த இந்திரன், கருவை அழிக்க முற்பட்



டான எப்படியோ தப்பிப்பிழைத்த குழந்தையை ஆறு செவிலித்தாய்மார் இமயத்தின் அருகிலமைந்த சரவணப் பொய்கைப் பகுதியில் வளர்த்தனர். இதை அறிந்து அழிக்க வந்த இந்திரன் போரிற் தோற்றுத் திறை செலுத்திப் பணிந்தான். பிற்காலத்தில் தனக்குப் பாதுகாப்பைத் தேடத்தன் மகளையும் திருமணம் செய்து வைத்தான்.

இப்போது ஒரு வரலாற்றுச்சுவடும் தெளிவும் உங்களுக்கு ஏற்பட்டிருக் கும். கூடவே சில கேள்விகளும் சந்தே கங்களும் எழுந்திருக்கும்.

1.தேவர்களைக் காக்கவே முருகன் பிறப்பெடுத்தான் என்றால் இந்திரன் ஏன் அழிக்க முயன்றான்?

2.சேவலும் மயிலும் சூரனுடைய சம்பவத்தோடு தொடர்புபட்டு நாங்கள் அறிந்திருக்க, இங்கு வேறொரு கதை (நடைமுறைச் சாத்தியமானது) சொல் லப்படுகிறது. எது உண்மை?

இப்படியான ஏராளமான கேள்விகள் உங்கள் முன் எழும். அவற்றுக்கு விடைதேடும் பொறுப்பை உங்களிடமே விட்டுவிடுகிறேன்!

## என்ன பயன்..!?

இளவரசர் ஆல்பர்ட் இங்கிலாந்தின் ஆறாம் ஜார்ஜ் மன்னராக இருந்தார். இவர் மிகவும் நகைச்சுவை உணர்வு உடையவர். கணநேரத்தில் அனைவரையும் சிரிக்க வைத்து விடுவார். ஒருநாள் இளவரசர் தனது தாத்தாவான ஏழாம் எட்வர்ட் மன்னருடன் அமர்ந்து உணவு சாப்பிட்டுக் கொண்டு இருந்தார். அப்போது இளவரசர் தனது தாத்தாவிடம் ஏதோ கூற வாய் திறந்தார். அதற்குள் அவரது தாத்தா சாப்பிடும்போது பேசுவது நல்ல பழக்கமல்ல. எதுவாகயிருந்தாலும் நான் சாப்பிட்டு முடிக்கும் வரை பேசாதே என்று கூறிவிட்டார். தாத்தா சாப்பிட்டபின் தனது பேரனை அழைத்து, ஏதோ சொல்ல வந்தாயே அதை இப்போது சொல் என்றார். ஆல்பர்ட் முகத்தைக் கவலையுடன் வைத்துக்கொண்டு, 'தாத்தா அதற்கு இப்போது அவசியம் இல்லை', என்றான். "ஏன்?" என்றார் தாத்தா. "தாத்தா நீங்கள் சாப்பிடும் போது உங்கள் உணவில் ஒரு பூச்சி இருந்தது. அதைத்தான் அப்போது நான் சொல்ல வந்தேன். ஆனால் நீங்கள் என்னைப் பேசக்கூடாது என்று தடுத்துவிட்டீர்கள். இப்போது அதைச் சொல்லி என்ன பயன்?" என்றார் ஆல்பர்ட்.

# வேகமாக பரவி வரும் கணினி வழிக் கல்வி

தகவல் தொழில்நுட்பத்துறை கண்டுவரும் மாபெரும் வளர்ச்சியால், கல்வி போன்றவற்றிற்கு என்ன பயன் என்று பலர் கேட்கலாம். ஆனால் உலகில், பாடசாலை வகுப்பறைகளில் கணினி வழிக் கல்வி மிக வேகமாக பரவி வருகிறது.

வகுப்பறைகளில் கணினி மூலம் கல்வி என்றால் இது ஏதோ பணக்காரர்கள் சமாச்சாரம் என்று நினைத்து விடவேண்டாம். சர்வதேச பாடசாலைகள் முதல் சாதாரண அரச பாடசாலைகள் வரை கல்வி கற்பதில் கணினிகளின் பங்கு அதிகரித்து வருவதாக சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன.

கணினி வழிக் கல்வியென்றால் கணினி பற்றிய பாடங்களுக்கான ஒரு சில வகுப்புகள் என்று நினைத்து விடக்கூடாது. இந்த சந்தையின் மதிப்பை உணர்ந்துள்ள சில நிறுவனங்கள் பள்ளி வகுப்பறைகளில் கணினிகளை புகுத்துவதில் முனைப்புக் காட்டி வருவதால் வெறும் கணினி வகுப்புக்கள் என்ற தளத்திலிருந்து இந்தத் துறை மேலும் விரிவடைய வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

ஆசிரியர்கள் வகுப்பறையில் பயன்படுத்த உதவும் டிஜிட்டல் லைப்ரரி உள்ளிட்ட பல்வேறு கல்வி தொடர்பான உள்ளடக்கங்களை கொண்ட புரோகிரம்களை சில நிறுவனங்கள் தயாரித்துள்ளன. உதாரணமாக இந்தியாவில் தற்போது சுமார் 400 தனியார் பள்ளிகள் இத்தகைய புரோகிராம்களை பயன்படுத்தி வருகின்றன.

நமது நாட்டிலும் இது போன்ற சில கல்வித்தீர்வுகளைப் பயன்படுத்த தீர்மானித்தால் இந்தப் போக்கு மிகவேகமாகப் பரவும் என்று எதிர்பார்க்கலாம்.

அதேபோல் கிராமப்புற குழந்தைகளுக்கு கணினி உதவியுடன் கூடிய கல்வியை வழங்க சில பொது அமைப்புக்கள் முயன்றுவருகின்றன.

இந்தியா போன்ற மக்கள்தொகை அதிகம் உள்ள நாடுகளில் தரமான ஆசிரியர்கள் அதிகம் இல்லை என்பது சிந்திக்க வைக்கும் ஒன்று. தற்போது இதுபோன்ற கணினி வழிக் கல்வி இந்த குறைகளை போக்கும் ஒரு முயற்சியுடன் வந்திருப்பது ஆரோக்கியமான விஷயமே என்று இந்தியாவின் புகழ்பெற்ற நிட் கல்வி மையத்தின் தலைமைச் செயல் அதிகாரி கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

கணினிவழிக் கற்றல் அல்லது கல்வி மூலம் ஒரு பாடசாலையோ அல்லது கல்லூரியோ உலகின் முன்னணிப் பல்கலைக்கழகங்களுடன் தொடர்பு கொண்டு ஒரு குறிப்பிட்ட துறையில் சிறந்த ஆசிரியர்களிடமிருந்து பாடங்களைக் கற்கலாம். இதனால் கல்வியும் உலகமயமாதல் தளத்திற்கு உயரும் என்று எதிர்பார்க்கலாம்.

# கலாபக் கனவுகள்

-வினையூக்கி-



விடுமுறை சமயம் ஆதலால் எங்க மொத்த லேடிஸ் ஹொஸ்டலும் காலியாகி இருந்தது. என்னோட ரூம்மேட் ரம்யாவும் ஊருக்குப் போய்விட்டாள். ஒன்லைனிலும் யாரையும் காணவில்லை.

ரொம்ப போரடித்ததால் நீண்ட நாட்களுக்குப் பிறகு மொபைல் எ.ஃப்.எம்மை ஒன் செய்தேன். ஏதோ ஒரு அலைவரிசையில் கலாபக்கனவுகள் என ஒரு தொலைபேசியில் தன் காதல் வேண்டுகோள்களை-அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சி ஓடிக்கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் தனது காதலன் - காதலியை எப்படி நேசிக்கிறார்கள் என்று உணர்வுபூர்வமாக அந்த நிகழ்ச்சித் தொகுப்பாளரிடம் பகிர்ந்து கொண்டிருந்தனர்.

தொகுப்பாளர், 'அடுத்து நம்மிடையே கார்த்தி பேசப்போகிறார்' என சொல்வதைக் கேட்டு அரைத்தூக்கத்திலிருந்து நிமிர்ந்து உட்கார்ந்தேன். கார்த்தி என்ற பெயர் என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு பெயர். அப்படியே அந்த வானொலி உரையாடலைக் கேட்கலானேன்.

"ஹலோ, கார்த்தி சொல்லுங்க, உங்க காதலி பெயர் என்ன?"

"அவ பேரு ஜெனி, ஒரு சொ.ஃப்ட் வெயர் கம்பெனில வேர்க் பண்றாங்க"

அய்யோ என்னோட பேரைச் சொல்றான்.. இந்தக்குரல் அவனோட குரல் தானே!! எனக்கு முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

"நீங்க ஜெனிக்கு எதாவது சொல்ல விரும்பறீங்களா?"

"யெஸ், நான் எங்க இருந்தாலும் அவளோட நினைவுகளில்தான் இருக்கேன். நாளைக்கு எனக்கு ஒரு முக்கியமான நாள், அதை அவளுக்கு ஞாபகப்படுத்தத்தான் இப்போ உங்களுக்கு போன் பண்ணினேன்"

கடவுளே, என்ன கொடுமை இது? நாளைக்கு டிசம்பர் 23. கார்த்தி போன வருஷம் இந்த தேதியிலதான் தற்கொலை பண்ணிக்கிட்டான். என் இதயத்துடிப்பு அதிகரித்தது.

"கார்த்திக்காகவும் அவரோட காதலி ஜெனிக்காகவும் இந்த அருமையான பாடல் ஒலிபரப்பப்படுகிறது" என்று வானொலித் தொகுப்பாளர் சொல்லியவுடன் 'தேவதை இளம் தேவி உன்னைச்சுற்றும் ஆவி' பாடல் ஒலிக்கத் தொடங்கியது.

# கிறிஸ்மஸ் கவிதை

'வார்த்தைச் சித்தர்' வலம்புரி ஜான்



எல்லோருக்கும் விலாசம் எப்போதும் தருகிறவன்
தனக்கொரு முகவரியை தான் தேடிப் புறப்பட்டான்.
வாய்க்காதோ வயிற்றிலென்று வாயவிழ்ந்த தாய்மார்கள்
காத்திருந்தார் காத்திருந்தார் கண்ணெல்லாம் பூத்திருந்தார்.

மாதவன் பிறப்பதற்கு மரியாளைத் தேர்ந்தெடுத்தான்.
ஆண்டவன் முன்மொழிந்தான் அவன் தூதும் வழிமொழிந்தான்.
ஆடவரை அறியாத அபலைப் பெண் எனக்குள்ளே
ஆகாயக் குழந்தை அவதாரம் சாத்தியமா?
எழுத்தாணி பழகாமல் ஏட்டினிலே பா வருமா?
கருவி ஒன்று ஆடாமல் கல்லிலே சிலை எழுமா?
பாதையிலே வெள்ளாமை பார்ப்பதுவும் சாத்தியமா?
பதைபதைத்து கேட்டிருந்தாள் பாசமுள்ள மரியம்மாள்.

மின்னல் அலகாலே மேகத்தில் கூடுகட்டும்
வல்லவனாம் வானவன் வார்த்தைச்சரம் தொடுத்தான்.
ஆகுமம்மா ஆண்டவனால் அனைத்தும் என்றிட்டான்.
அன்னை மரி ஆகிவிட்டாள்.

பெத்லஹேம்..
மானுடத்தை விடுவிக்க மணி பார்த்து காத்திருந்த
மன்னர்பிரான் இயேசுவுக்கு இருப்புக் கொள்ளவில்லை
மரியாளுக்கோ இடுப்புவலி தாளவில்லை
இடமுண்டா இடமுண்டா தட்டாத கதவில்லை
தவித்துநின்று தாகத்தோடு கேட்காத ஆளில்லை

அன்று சத்திரத்தில் இடமில்லை என்றார்கள்
இன்று அவர் கொடுத்த இடத்திலேதான்
சரித்திரமே சாய்ந்து கொள்ளுகிறது
கி.மு., கி.பி. என்று நின்று நிலைத்ததைத்தான்
நினைவில் நிறுத்துகிறேன்.

மரியாள், 'ஆண்டவரே நான் உனக்கு அடிமை' என்றாள்.
இதுவே சரணாகதி. ராமானுஜர் சொன்ன

பிரபத்தி தத்துவம்தானே அது?
இஸ்லாத்தில் அப்துல்லா என்றால்
அடியான் என்றுதான் பொருள்
நபிகளே, 'நான் இறைவனின் அடிமையும் தூதனுமாக
இருக்கிறேன்' என்றுதானே சொன்னார்.

எந்த மதம் எதைச் சொன்னதோ சொல்லவில்லையோ
சரணாகதி தத்துவத்தை சொல்லியிருக்கிறது.
அதைப்போலவே அர்த்தமற்ற சடங்குகளான
அம்மைத் தழும்புகளில் சமயத்தின் உண்மை முகம்
உறைந்து அழிந்துவிடக் கூடாது என்பதில்
எல்லா சமயங்களுமே குறியாக இருக்கின்றன.

வெவ்வேறு சமயங்களை சார்ந்தவர்கள் எங்கெங்கே
கைகுலுக்கிக் கொள்ளலாம் என்று பார்க்கவேண்டும்.
ஆனால் மனநோயாளிகளான சில மதவாதிகள்
எங்கெங்கே மனிதர்கள் பிரிந்து நிற்கலாம்;
பிளவுபட்டுப் போகலாம் என்பதற்கே
வழி சொல்கிறார்கள்.

எது எது நம்மைப் பிரிக்குமோ அவற்றை மறப்போம்!
எவை எவை நம்மை இணைக்குமோ
அவற்றை நினைப்போம்!!



**L 2 P of A 2 Z**

L- Laugh நகைச்சுவை உணர்வோடு இருங்கள். வாழ்க்கையில் பிரச்சனைகளைப் பார்த்து சிரிக்கத் தெரிந்து கொள்ளுங்கள்.
M – Make செய்யுங்கள் இது நடைபெறும்படி, நடத்திக் காட்டுங்கள், செய்து காட்டுங்கள்.
N – Negotiate வளைந்து கொடுங்கள், விட்டுக் கொடுங்கள், அவசியமான இடங்களில் சமரசம் செய்து கொள்ளுங்கள்.
O- Over look and over come சமாளியுங்கள் எந்த வேலைக்கும் ஒரு குழு, ஒரு அமைப்பு தேவை. அவர்கள் எல்லோருக்கும் நூற்றுக்குநூறு திறமைசாலிகளாக இருக்கமாட்டார்கள்.
P- Persever விடாமுயற்சி அவசியம், சோர்ந்து போகாதீர்கள், தளர்ச்சியடையாதீர்கள்.

● *அறிவியல்*

# மனிதர்கள் ஜாக்கிரதை!

"நாய்கள் ஜாக்கிரதை!" ன்னு அங் கங்கே போர்டு மாட்டியிருக்கறதைப் பார்த்திருப்பீங்க!

காலம் போற போக்கைப் பார்த்தா "மனிதர்கள் ஜாக்கிரதை!"ன்னு தெரு வுக்குத் தெரு எழுதி மாட்டி வைக்க லாம் போல இருக்கு!

ஆமாம் சார்! இவன் எப்ப வரு வான்...? எந்த ரூபத்துலே வருவான்? என்ன செய்வான்? - ங்கறதை யூகிக்க றது ரொம்ப கஷ்டம்!

நுகர்வோர் பாதுகாப்பு (Consumer Protection)ன்னு எல்லாரும் சொல்றாங் களே... அந்தப் பாதுகாப்பு யாருகிட்டே யிருந்து?


மனுஷன்கிட்டேயிருந்து மனுஷ னைப் பாதுகாக்கற ஒரு முயற்சிதானே அது! புலியும் சிங்கமும் வந்தா,இங்கே கலப்படம் பண்ணிக்கிட்டிருக்கு?

கரடியும் நரியும் வந்தா பொய்யான முத்திரையைக் குத்தி வியாபாரம் பண் ணிக்கிட்டிருக்கு?

எல்லாம் மனுஷன் பண்ற தப்பு தான்... மனுஷனே அதுக்கு பலியாக றான்!

மிளகாய்த் தூளிலே மரத்தூளை கலந்துவிட்டுடுறான் சார்! அதை வாங்கி ஆகா! பேஷ்!ன்னு சமையல் பண்ணி சாப்பிட்டுறான். அதுக்கப்புறமா வயத்தைப் புடிச்சிக்கிட்டு நிக்கிறான் - வயத்தை வலிக்குதேன்னு!

மனுஷன் பேர்லே உள்ள நம் பிக்கை மனுஷனுக்கு நாளுக்கு நாள்



குறைஞ்சிகிட்டேதான் வருது!

இனிமேல் வருங்காலத்துலே மனுஷ னுடைய நடவடிக்கைகளை இயந்தி ரங்கள் கண்காணிக்க வேண்டிய கட் டாய சூழ்நிலை வந்துகிட்டிருக்கு! இப்ப கேட்டா ஆச்சரியப்படுவீங்க. ஆனா வரப்போறது என்னமோ உண்மைதான்!

யாருக்கும் தெரியாம ஒரு மனுஷ னுடைய நடவடிக்கைகளை கம்ப் யூட்டர் மூலமா கண்காணிக்க முடியும்!

தாய்லாந்துலே பதினைந்து வய துக்கு மேற்பட்டவங்களுக்கெல்லாம் அடையாள அட்டை கொடுத்துடறாங்க ளாம். அதுலே அந்த நபரோட வண் ணப்படம், முகவரி, அடையாளக்குறி, கைரேகை, குடும்பப் பின்னணி, குற்றப் பட்டியல் எல்லாம் இருக்கும்.

சிங்கப்பூர்லே உள்ள 27 லட்சம் மக்களுக்கு ஏற்கனவே இதுமாதிரி யான மின்னணு அடையாளச் சீட்டு கொடுத்துட்டாங்களாம்! ஒவ்வொரு மோட்டார் வண்டியிலேயும் மின்னணு எண் பலகையும், சின்ன கறுப்புப் பெட்

டியும் பொருத்தப் போறாங்களாம்.

தெருக்களிலே சாலையின் மேற் பரப்புலேயும் உணர்கருவிகள் (sensors) பொருத்தப்படும். இது மூலமா தனி நபரின் சாலை உபயோகம் எவ்வளவுங்கறதை கணக்குப் பண்ணி அதுக்குத் தகுந்த மாதிரி வரி வசூல் பண்ணப் போறாங்களாம்.


சிறையிலேயிருந்து கைதிகள் விடுதலையாகறாங்கள்லே... அப்போ அவங்க உடம்புலே மின்னணு முறையாலே அடையாளம் போட்டுடறது... அப்புறம் அவங்க நடமாட்டத்தை கண்காணிக்கிறது... எங்கே போறாங்க வர்றாங்க... என்ன பண்றாங்கறது தெரிஞ்சுடும். இந்தப் பழக்கம் இப்பவும் அமெரிக்காவுலே உண்டாம்! ஒலியெழுப்புகிற ஒரு கருவியை (Beeper) உடம்புலேயே மாட்டிவிட்டுடறாங்க. அதை ஒண்ணும் செய்ய முடியாது! (Tamper proof beeper).

குற்றவாளி குறிப்பிட்ட எல்லையை மீறி எங்கேயாவது போனா... அந்தக் கருவி சத்தம் போட்டு அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுத்துடும்.

இன்னொரு செய்தி என்ன தெரியுமா? வலது கையிலே மின்னணுச் சில்லு (Chip) ஒண்ணைப் பொருத்திக்கறது.

கடையிலே போயி பொருள்கள் வாங்கறோம். வாங்கிக்கிட்டு... அதுக்கப்புறம் வலதுகையை நுண்படம் எடுக்கற கருவி (Scanner) மேலே காட்டினா போதும்! உங்க வங்கி கணக்குலே அந்த செலவு சரிக்கட்டப்படும்.

இன்னொரு நுண் சில்லு உண்டு... Microchip! ரொம்பச் சின்னது... இதை ஊசிமூலமாக உடம்புக்குள்ளே செலுத்திவிடலாம். அதுக்கப்புறம் அந்த ஆள் எங்கே போனாலும் தெரிஞ்சு போயிடும். இப்போ மிருகங்களுக்கு இதை செஞ்சிக்கிட்டிருக்காங்களாம்!



மனுஷன் தொடர்ந்து ஏமாத்திக்கிட்டிருந்தா அவனுக்கும் இது மாதிரி செய்ய வேண்டிய அவசியம் வந்துடும்!

இதையெல்லாம் நினைச்சுப் பார்த்தாவது மனுஷன் திருந்தணும்!

இன்னொருத்தரை ஏமாத்தற வேலையை நிறுத்தணும்! இல்லேன்னா வருங்காலத்திலே இப்ப நான் சொன்ன துலாம் வந்துதான் தீரும்! அவ்வளவு தூரத்துக்கு ஏன்?

எழுத்துலேகூட ஏமாத்து வேலை நடக்குது சார்!

ஒரு ஆளு, ஒரு புத்தகம் எழுதினார்: "பணம் சம்பாதிக்க நூறு வழிகள்" - அப்படின்னு!

இப்படி ஒரு புத்தகம் எழுதிவிட்டு அவரே பிச்சை எடுத்துக்கிட்டிருந்தார்.

"என்னங்க இது? 'பணம் சம்பாதிக்க நூறு வழிகள்'ன்னு புத்தகம் எழுதிவிட்டு, நீங்களே பிச்சை எடுக்கறீங்களே!"ன்னு கேட்டாங்க. அதுக்கவர் "அந்த நூறு வழிகள்லே இதுவும் ஒரு வழிங்க!" அப்படின்னாராம்!

டொக்டர்.ருத்ரன்

# 'நட்பு' என்பது என்ன?

## உங்கள் உள்ளத்தைத் தொட்டுப்பார்க்கும் கட்டுரை

*"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே, இடுக்கண் களைவதாம் நட்பு"* என்று திருக்குறளில் நட்பைக் குறித்து வரையறுக்கபட்டிருப்பதை, பாடத்திற்காவது பள்ளிகளில் பலர் படித்திருப்பார்கள். இக்கட்டான நிலையில் உதவுவது, இன்னல் தவிர்ப்பது இடையூறு வரும்போது தடைகளைத் தகர்ப்பது என்றுதான் நட்பைப் பற்றிப் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வள்ளுவர் கூறியது பிறரை அடையாளம் கண்டுகொள்ள அல்ல. நாம் நடந்து கொள்ள ஒரு வழிமுறை. நமக்குப் பிரச்சனை ஏற்பட்ட நேரங்களை நினைத்துப் பார்த்தால் நினைவுக்குப் புலப்படும் ஒரு விடயம், நண்பர் என்று கருதாதவர்கூட நமக்குத் தக்க நேரத்தில் தகுந்த உதவிசெய்திருப்பார். நாமும் சிலருக்கு இப்படி உதவி புரிந்திருப்போம். வெறும் உதவி செய்வதும், ஆபத்தில் அருகில் நிற்பதும் மட்டுமல்ல நட்பு.

நட்பு, காதலைப் போல மிகவும் நுட்பமானது. இதைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால்தான் பலருக்கு வாழ்வில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. உதவ முன்வருவது மனிதனுக்குள் இயல்பாக உள்ள கருணையின் அடையாளம். கருணை நட்பாகாது. கருணையில் தருபவர் - பெறுபவர் என்ற தரவேறுபாடு உண்டு. நட்பில் தருவதும் பெறுவதும் தன்னையறியாமல் தனக்கே புரியாமல் நிகழும் அனிச்சை உணர்வு.

நம்மிடம் நன்றாகப் பேசிப் பழகுபவர்களை ஓர் இக்கட்டான நிலையில் அவர்கள் சிறிய உதவி செய்தால் கூட நண்பர்கள் என்று நினைத்துக் கொள்கிறோம். உதவிக்கு வருபவர்கள்தான் நண்பர்கள் என்றில்லை - உதவ நினைப்பவர்களும் நண்பர்களே. ஆனால் நட்பு 'உதவி' என்ற சிறிய வட்டத்திற்குள் அடைபட்டு விடாது. அது மிகப் பெரிய பலம்; சுகம்.



நட்பின் முக்கியமான அடையாளங்கள் நம்பிக்கையும், நெருக்கமும்தான். இவை இரண்டும் இருந்தால் சந்தேகம் வராது. சந்தேகம் வந்தால் அது நட்பு கிடையாது. 'இவன் ஏன் இப்படி நடந்து கொண்டான்?' என்று உள்ளே கேள்வி எழுந்தால் அது நட்பு கிடையாது. ஒரு சிக்கலான கட்டத்தில் நமக்குப் பிரச்சினை ஏற்படும் வகையில் நம் நண்பன் நடந்து கொண்டால், அப்போது கூட

இந்தக் கேள்வி உண்மையான நட்பில் ஏற்படாது. மாறாக, 'அவனுக்கு இப்படி ஒரு நிலை இருந்திருக்கும்' என்று நட்பில் நம்மனமே ஒரு காரணத்தைக் கண்டுபிடித்துக் கொள்ளும். நட்பின் அடிப்படை இந்த நம்பிக்கை. இதில் அளவுகள் கிடையாது. முழுமையான நம்பிக்கையே நட்பின் மூலாதாரம். இதைப் புரிந்து கொள்ளாதவர்களும், இந்த நம்பிக்கையை உருவாக்காமல் பழகி வருபவர்களும் நண்பர்கள் என்று சொல்லிக்கொண்டாலும் உண்மையில் அவர்கள் நன்கு பழகுபவர்கள் மட்டும் தான்!

பழக்கம் பரிச்சயத்தின் அடுத்த அத்தியாயம். அதன் தன்மையைப் பொறுத்தே வாழ்வின் கதையில் நட்பு கருவாகும், உருவாகும். நாம் பழகுபவர்கள் அனைவருமே நம் நண்பர்கள் அல்ல என்று நம்மில் பலருக்குத் தெரியும். ஆனால் நண்பர்கள் என்று 'நினைத்துக் கொண்டு' நம்முடன் இனிமையாகப் பழகுபவர்களையெல்லாம் நண்பர்கள் என்று நினைக்கும்போதுதான் நமக்கு உறவுகளில் குழப்பங்கள் உருவாகும்.

நேசம் - நட்பு ஆகிய இரு வார்த்தைகளையும் ஒன்றாக எண்ணிக் கருதி, பயன்படுத்தி வருவதால் பலருக்கு வாழ்வில் ஏமாற்றங்கள் ஏற்படுகின்றன. உறவுகள் வாழ்க்கையின் ஏமாற்றங்களை எதிர்கொள்ள உதவவேண்டும் அவையே வாழ்க்கையில் ஏமாற்றங்களை உருவாக்கக் கூடாது. நாம் எதிர்ப்பார்த்தபடி நம் நண்பர் நடந்து கொள்ளாதபோது ஏமாற்றம் வந்தால் அது இயல்புதான். அப்போது நட்பின் மீதே சந்தேகம் வந்தால் அது நட்பு அல்ல. நேசம் மட்டுமே. நேசம் தேர்தல் கூட்டணிபோல, நிரந்தரமில்லை. நட்பு நிரந்தரமானது மட்டுமல்ல. நிதமும் வளர்வது, முதிர்வது. இப்படி உண்மையான ஆழமான நண்பர்கள் இருந்தால் வாழ்க்கை அழகாக, சுகமாக அமையும். பெரும்பாலோருக்கு இது அமைவதில்லை.



நம்பிக்கையைப் போலவே நெருக்கமும் நட்பின் முக்கிய அங்கம். நெருக்கம் என்பது உள்ளே ஏற்படும் உணர்வு. காலம் - தூரம் ஆகியவற்றை மீறியும் நெருக்கம் இருக்கும். அப்படி அமைவதுதான் நெருக்கம். அருகில் இருக்கும்வரைதான், இருந்தால்தான் நெருக்கம் என்பதில்லை. வாழ்வின் அவசியங்கள் நண்பர்களை வெவ்வேறு ஊர்களில், நாடுகளில் வாழ வைக்கலாம். இந்த தூரம் நட்பைப் பாதிக்காது. நெடுநாள் கழித்து வெகுதூரத்தில் வாழ்ந்திருந்த பின் சந்திக்கும் நண்பர்களிடம் இடையே பிரித்து வைத்த காலமும் தூரமும் காணாமல் போய்விடும். அந்த மறு சந்திப்பு முன்னாள் போலவே பேச்சிலும் பழக்கத்திலும் வெளிப்படும். ஆழமான உண்மையான நட்பில் இதைக் காணலாம்.

நட்பு என பெயர் சூட்டிக் கொண்ட இனிய பழக்கம் இப்படி ஒரு மறு சந்திப்பு நேரத்தின் ஆரம்பத்தில் மெலிதாகவேனும் ஒரு நெருடலோடு துவங்கும், 'வாங்க - வா - வாடா - வாடி' என்று எப்படி அழைப்பது என்ற சந்தேகம் எழும். நட்பில் யோசித்து, கணக்குப்போட்டு, கவனமாக உரையாடல் வராது. இயல்பாக எப்போதும் போலவே பேச்சும் பழக்கமும் இருப்பதுதான் நட்பு. நமக்கு வயதாகிவிட்டது. நம் நண்பருக்கு நம்மை விடவும் சமூகத்தில் உயர்வான நிலை வந்துவிட்டது என்ற எந்தத் தயக்கமும் இல்லாமல் பழக முடிவதுதான் நட்பு. இது கட்டுரைக்காக எழுதும் இலட்சிய நிலை அல்ல. வாழ்க்கையில் சாத்தியமாகக் கூடிய விடயம்தான். எல்லோருக்குமே நல்ல நண்பர்கள் அமையக்கூடிய வாய்ப்புகள் உண்டு. ஆனால் நம்மில் பலர் அந்தத் தகுந்த தருணத்தை தவறவிடுவதால்தான் நட்பு எனும் தெளிந்த நீருற்றிற்குப் பதிலாக 'நல்ல பழக்கம்' எனும் கானலை நிஜமென்று நினைத்து வருகிறோம்.

ஒரே கருத்து, ஒத்தவிருப்பு நண்பர்களிடையே இருக்கவேண்டியதில்லை. நட்பிற்கு ஆண்-பெண் பாகுபாடும் வயது வித்தியாசமும் தடையாகாது. நட்பிற்கு அடிப்படை நம்பிக்கையும் நெருக்கமும் மட்டுமே. இவையிரண்டும் இருந்தாலும் இரு நண்பர்களிடையே கருத்து பேதம் இருக்கலாம். பேதம் கருத்தில், அந்த கருத்து சார்ந்த விடயத்தில் மட்டும்தான் - ஒரே விடயத்திற்கு இருவரும் கொள்ளும் அபிப்பிராயங்கள் மட்டும்தான் வித்தியாசம். இருவரிடையே உள்ள அன்பும் அக்கறையும் இதை மீறி ஆழமானது நிஜமானது என்ற நம்பிக்கையே நட்பு.

கோபம் உறவுகளில் விரிசல் உருவாக்கும் முக்கியமான உணர்வு. ஆனால் நண்பரை அவரது கோபத்தோடு சேர்த்துத்தான் ஏற்றுக்கொள்கிறோம். நேற்று கோபித்தபோது பரவாயில்லை. இன்று கோபித்தால் தவறு என்றெல்லாம் கணக்கிடுவது நட்பாகாது. கோபம் வருவதைத் தவிர்க்க நம் உள்ளத்தின் உண்மையான உணர்ச்சிகளை மறைத்து உறவாடுவதும் நட்பாகாது. நட்பு நாடகமல்ல. நிஜம். அரிதாரம் பூசிய உறவுகள் அந்த நாடகத்திரை விழுந்ததும் அழிந்துவிடும். நட்பு உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உத்தம உறவு. இந்தக் கோணத்தில் உங்கள் நட்புகளை பரிசீலித்துப் பாருங்கள். தவறுகள் உங்கள் மீதும் இருக்கும்.

பள்ளி நாட்களில் குழந்தைகள் 'என் ப்ரெண்ட்' என்று சிலரைக் குறிப்பிடுவார்கள். அதே நண்பர்கள் அடுத்த மாதம் சண்டையிட்டும் கொள்வார்கள். சில சமயம் பள்ளியிறுதிவரை இவர்களுக்குள் பகைமையும் இருக்கும். ஆனால் குழந்தைத்தனமான இந்த 'சண்டைகள்' பொதுவாகவே சீக்கிரமாக மறைந்து போகக்கூடியவை. வளர்ந்து பெரியவர்களான சிலரிடமும் இதை நாம் பார்க்கலாம். நண்பர்கள் என்று எல்லோரிடமும் பறைசாற்றிக்கொண்டவர்கள் திடீரென்று பகைவர்களாக மாறுவதையும் பார்க்கலாம். இதற்குக் காரணம் முதிர்ச்சியின்மைதான். நட்பு என்பது திருமணம் போன்ற ஒரு மிக முக்கிய

மான உறவு. இதனால் இதன் ஆரம்பமும் வளர்ச்சியும் நன்கு அமைய வேண்டும். வாழ்க்கைத் துணையைக் கூட மற்றவர்கள் நிச்சயிப்பது நம் நாட்டில் இன்றும் வழக்கில் உள்ளது. ஆனால் நம் நண்பர்களை நாம்தான் தேர்வு செய்கிறோம். நட்பில் கோளாறு என்றால் நம் தேர்வில்தான் தவறு என்று அர்த்தம். இதற்காக திட்டமிட்டு, தேடி, ஆராய்ந்து. யோசித்து ஒருவரை நண்பராக ஆக்கிக் கொள்ள முடியாது. நட்பும் காதலைப்போல ஓர் ஈர்ப்பின் அடிப்படையில்தான் ஆரம்பிக்கும் அந்த ஈர்ப்பு தற்காலிக கவர்ச்சியா, நிரந்தர நெருக்கமா என்பதைப் பொறுத்தே நட்பு மெருகேறும்; தொடரும்.

எத்தனையோ காரணங்களுக்காக எத்தனையோ நபர்களிடம் ஈர்ப்பு ஏற்படலாம். அந்த ஈர்ப்பை ஆராய்ந்தால் அது ரசிப்பா- வியப்பா- மதிப்பா இல்லை இனம் புரியாமல் இன்னும் நெருங்கித் தொடர வேண்டும் என்ற விருப்பா என்பது விளங்கும்.

நண்பர்கள் அமைவது நம்வசம்தான் உள்ளது. போலியாகப் பழகாமல் அதே நேரம் போலித்தனத்தை பரவாயில்லை என்று விட்டுவிடாமல் தெளிவாக இருந்தால் நட்பு நல்ல முறையில் அமையும். பொய்யான உறவு நிச்சயமாக ஒரு நாள் உடையும். உண்மையான உறவு எந்தக் கட்டத்திலும் உறுதியாக இருக்கும்.

இளமையில் ஏற்படும் நட்புதான் பலருக்கு நெடுங்காலம் நீடிக்கிறது. பள்ளியின் இறுதியிலும் கல்லூரி வருடங்களிலும் நெருங்கியவர்கள்தான் வாழ்நாள் முழுவதும் நண்பர்களாக இருப்பார்கள். இது பொதுவானது. இதற்கு விதிவிலக்கும் உண்டு. பொதுவாக இப்படி அமையக்காரணம் அந்த இளமை. உணர்ச்சிகளையும் ரசனைகளையும் போலியாக வெளிக்காட்டாத பருவம். அந்த குறை - நிறைகளோடு ஒருவர் மற்றவரை ஏற்றுக்கொண்ட பின், பின்னாளில் கருத்து வேறுபாடு சிறிய கோபமாக வெளிவருமே தவிர வெறுப்பாய், கசப்பாய் மாறாது.



*நட்பையும் காதலையும் புரிந்து கொண்டால் - வாழ்க்கையை சுகமாகவும் வளமாகவும் அமைத்துக் கொள்ள அவை உதவும். உறவுகளில் மிகவும் உதவியானவை நட்பும் காதலும்தான்!*

மாணவப்பருவத்திற்குப் பிறகும் நண்பர்கள் அமைவதுண்டு. இது பொதுவாக ஒரே துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் அல்லது ஈடுபாடு கொண்டுள்ளவர்களுக்கும் இடையே ஏற்படுவது. இளமையிலிருந்து ஏற்படும் நட்பில் உரிமைகள் அதிகம். சமூக விதிகளுக்கு அங்கீகாரம் குறைவு. ஆனால் மாணவப் பருவத்தைக் கடந்தபின் உருவாகும் நட்பில் சமூக விதிகளின் சாதாரண மரியாதையாவது இடையில்

இருக்கும் 'வாடா' என்றாலும் 'வாங்க' என்றாலும் அது நெருக்கத்தை அள விட முடியாது. ஆனால் நண்பர்களின் இடையே அவரது சமூதாய நிர்ப்பந் தமாக மரியாதை இருக்க முடியாது.

நட்பில் பிரிவு ஏற்படலாம், வேலைக் காக வேறிடம் போவது. தனிப்பட்ட வாழ்வின் இறுக்கத்திலும் பிரச்சனை களாலும் சந்திக்க முடியாமல் போவது ஆகியவை நண்பர்களைத் தற்காலிக மாகப் பிரிக்கலாம். நட்பில் பிரிவு தற் காலிகம்தான். ஆழமான உண்மை யான நட்பு காலம் ஏற்படுத்திய பிரிவை மீறி உள்ளே சுகமான உணர் வான, மீண்டும் சந்திக்க, சந்தோஷ நிமிடங்களை அனுபவிக்கக் காத்திருக் கும். நிஜமான நட்பில் முறிவு கிடை யாது. மரணம் மட்டுமே நண்பர்களை நிரந்தரமாகப் பிரிக்கும்.

என் வாழ்க்கைத் துணைக்கு என் நண்பனைப் பிடிக்கவில்லை என்பதால் நட்பைத் துறந்தால் அது நட்பு கிடை யாது. அதே நேரம் நம் நண்பர்களை நமக்கு நெருக்கமான பிறரும் அங்கீக ரிக்க வேண்டிய அவசியம் கிடையாது. இதைப் புரிந்து கொண்டால் நட்பின் சுகம் கூடும். இந்த விடயத்தைத் தெளி வாக ஆராயாமல் ஒத்திப்போட்டால் எல்லா உறவுகளும் குழப்பமாகும்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் நம் நாட்டில் ஒரு வித்தியாசம் உண்டு. தன் நெடுநாள் நண்பனை தனக்குத் திருமணமான பின்னும் ஓர் ஆண் தொடர்ந்து சந்திக்கவும் பழகவும் முடி கிறது. பெரும்பாலான பெண்களுக்கு இது முடியாமல் போகிறது. படிப்பு முடிந்த பின்னோ, திருமணம் ஆன பிறகோ பல பெண்கள் தங்கள் சிநேகி திகளின் தொடர்பை இழந்து விடுகி றார்கள். இது இன்றைய சமுதாய நடைமுறை - விதிமுறையல்ல.

இரு பெண்களுக்கிடையே உள்ள ஆழமான நட்பு கூட திருமணத்திற்குப் பின் விலகிப்போக வேண்டிய நிலை யில், ஆண், பெண் நட்பில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் அதிகம். நட் புக்கும் காதலுக்கும் நிறைய பேருக்கு வித்தியாசம் புரியாததால் ஆண் பெண் நண்பர்கள் பலர் தொடர்ந்து பழக முடி யாமல் பிரிய நேர்கிறது. இத்றகுப் பிறர் பார்க்கும் பார்வை மட்டும் காரண மில்லை. நம் கோணத்தின் கோணலும் காரணமாகலாம். இனிதாய்ப் பழகும் பெண்களை எல்லாம் நண்பர்களாகக் கருதாமல் காதலிகளாக நினைக்கும் குழப்பமிக்கவர்கள் நம் நாட்டில் அதி கம். ஆணும் பெண்ணும் காதலர்களா கவோ, கூடப்பிறந்தவர்களாகவோ (அல் லது அந்த உறவு சொல்லி அழைத்துக் கொள்பவர்களாகவோ) மட்டும் இருக்க முடியும் என்ற சமுதாய மூடநம்பிக்கை தான் இதற்குக் காரணம்.

சமுதாயத்திடமிருந்து அந்த மூடநம் பிக்கையை நாமும் கற்றுக்கொண்டு பின்பற்றினால் நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு, நல்ல நண்பர்களை - அவர் கள் வேறு பாலினத்தைச் சார்ந்த காரணத்தாலேயே இழக்க நேரிடுகிறது.

நட்பையும் காதலையும் புரிந்து கொண்டால் - வாழ்க்கையை சுகமாக வும் வளமாகவும் அமைத்துக் கொள்ள அவை உதவும். உறவுகளில் மிகவும் உதவியானவை நட்பும் காதலும்தான்!

# கணப்பொழுதுகூட கவனம் சிதறாமல் கருமமே கண்ணாய் கணிணி மைக்காமல் கணினியையே கண்டுகொண்டிருக்கும் காதலிக்கு....



காதல் என்றால் kilobyte என்ன விலை? என்று தான் இருந்தேன் உன்னை பார்க்கும் வரை. என்று உன்னை கண்டேனோ, அன்று தொலைந்த என் மனதை google searchல் தேடியும் கிடைக்கவில்லை.

உன் விழிகள் ping செய்தது எனக்கு... உன் நுனிவிரல் விளையாடும் கீபோர்டில் நான் ஒரு கீயாக இருக்கக் கூடாதா? உன் உள்ளங்கை தொட்டதால் mouseக்கு மவுஸ் ஏறிவிட்டது.

Printer Ribbonஐ பார்க்கும்போதெல்லாம் ribbon வைத்த உன் கூந்தல்தான் ஞாபகம் வருகிறது.

Busy Mouse Pointerல் House glass காணும்போது உன் உடல்வாகு ஞாபகம். எத்தனை முறை Restart செய்தாலும் Hang ஆக மறுக்கிறது மனசு. உன் பெயர் கொண்ட ddl file missing என்றல்லவா பிழை தெரிவிக்கிறது என் மன ஓ.எஸ்.

Intellignet என்று பெயரெடுத்த நான் இப்போது உன்னால் Artificial Intelligence இல்லாத ஜடமாகி போனேனடி.

உன் கணினியில் உள்ள வைரசை Anti Virus கொண்டு கிளீன் செய்தாய். என் மனதை பாதித்த காதல் வைரசிற்கு உன் மனம் என்னும் antivirusஐ தருவாயா...?

உன் கணினிக்கு மின் தடை பாதிக்கா வண்ணம் UPS Backup வைத்து இருக்கிறாய். நீ இல்லையென்றால் எனக்கு Backup யாரும் இல்லையடி... (தங்கை யாரும் இல்லையா..!?)

உன்னை அழைத்து கொண்டு Drive செய்ய நான் இருக்கும் போது, நீ Floppy Drive, CD Drive என்று வாழ்வது சரியா?



JPEG Formatல் உள்ள உன் படங்கள், MPEG Formatல் உள்ள உன் அசைவுகள் என்று அனைத்தையும் என் Hard Diskல் நிரப்பி விட்டேன்.

உன் ஈ-மெயிலுக்காக என் Inbox காத்து கொண்டு இருக்கும்.

பின் குறிப்பு: பழக்க தோசத்தில் CC to Multiple recipent போட்டு விடாதே!

## வேடிக்கையில் உங்கள் வர்த்தக விளம்பரங்களை பிரசுரிப்பதற்கான கட்டண விபரம்.

| | 4 Colour | 2 Colour | 1 Colour |
|---|---|---|---|
| பின் அட்டை | 10000/= | | |
| முன் அட்டை உள்புறம் | 7000/= | 5000/= | 4000/= |
| பின் அட்டை உள்புறம் | 5000/= | 3500/= | 3000/= |
| முழுப் பக்கம் | | 2000/= | 1500/= |
| அரைப் பக்கம் | | 1500/= | 850/= |
| கால் பக்கம் | | 1000/= | 500/= |

## மாதிரி சந்தாப் படிவம்

வேடிக்கை சஞ்சிகையினை நான் தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள விரும்பு கிறேன். அதற்கான கட்டணமாக

ஒரு வருடம் ☐ ரூ. 600 இரண்டு வருடம் ☐ ரூ. 1200

இனை செலுத்துகிறேன்.

பெயர் : ..............................................

முகவரி :..............................................

..............................................

தொலைபேசி : ..............................................

நான் இத்துடன் .............................................. இலக்க காசோலையை அல்லது காசுக்கட்டளையை **வேடிக்கை** என்ற பெயருக்கு அனுப்பி வைக்கிறேன்.


.................... ....................

திகதி கையொப்பம்

குறிப்பு: காசுக்கட்டளைகளை தெகிவளை தபாலகத்தில் மாற்றத்தக்கதாக அனுப்பி வைக்கவும். **VEDIKKAI,**

**198, 1st Floor, Galle Road, Dehiwela, Colombo.**

இச் சஞ்சிகை கொழும்பு தெகிவளை, காலி வீதியில் 198ம் இலக்கம் முதலாவது தளத்தில் அமைந்துள்ள வேடிக்கை பத்திரிகை நிறுவனத்தினரால் 05-12-2007 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.


இப்பொழுது
விற்பனையில்!
NaaGaa
ENTERTAINMENT
production
NaaGaa Entertainment
பெருமையுடன் வழங்கும் நம் நாட்டு
இசைக்கலைஞர்களின் ஓர் உன்னத படைப்பு...
forever...
Music : Arun & Benedict
Thagam
உங்கள் பிரதிகளை பெற்றுக்கொள்ள
0777 685502

## Lions Club of Kotahena Circle 306B1

# தென்னிந்திய நட்சத்திரப் பட்டாளம் பங்குகொள்ளும்

# MEGA GOODBYE 2007 கலக்கல்

**Dec 29**

@ சுகததாச உள்ளக அரங்கில் மாலை 6.30க்கு

- அசத்தப்போவது யாரு?
- கலக்கப்போவது சாம்பியன்ஸ்
- சிரிக்கலாம் வாங்க
- சூப்பர் டூப்பர்
- மஸ்தானா.. மஸ்தானா..
- ஜூனியர் சூப்பர் சிங்கர்
- கோலங்கள் தொலைக்காட்சித் தொடர் நடிகர்கள்




குழந்தை நட்சத்திரங்கள், சினிமா நடனத் தாரகைகள்

மற்றும் புகழ்பெற்ற சினிமா நடிகர்கள், பாடகர்கள்

கலந்து கலக்குகிறார்கள்!

வாங்க பழகலாம்...!!!

ஊடக அனுசரணை: சுடர் ஒளி

Event Management : NaaGaa Entertainment